# கலைமகள்

OCTOBER 1944

தாரண-ஐப்பசி

MADRAS



*Widest Circulated Monthly*

6 அணா

உயர்தரமான

# கோட்டிங்ஸ்
# ஷர்ட்டிங்ஸ்
# பனியன்கள்
# புடவைகள்
# வாயில்கள்
# பிரிண்டட் துணிகள்

★ மற்றும் சகலவிதமான துணிகள் ★
நவீன மோஸ்தரில் தேவைக்கு

## பன்ஸால் டிரேடிங் கம்பெனி

No. 2, சின்னகடைத்தெரு
தெப்பக்குளம் போஸ்ட்
திருச்சினுப்பள்ளி.

19 JUN 1945


# இந்தியக் கைத்தொழிலை நீங்களே ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் வி. எஸ். & ஸன்ஸ் பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். வி. எஸ். & ஸன்ஸ் பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

**KUMBAKONAM.**

## ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்

உடைக்குத் தக்க போட்டி விலையில் —

# புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனுரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 3,00,000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,50,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | மதராஸ் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாபள்ளி | மாம்பலம் | பாலக்காடு | திருச்சினுப்பள்ளி |
| சிதம்பரம் | மைலாப்பூர் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | திருவல்லிக்கேணி | சீயாழி | விஜயபுரம் (திருவாகூர்) |
| ஈரோடு | பெரியமேட் | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| கும்பகோணம் | சாலூர் | பார்வதிபுரம் | திருச்சூர் (கொச்சி ஸமஸ்தானம்) |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)

,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,

,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்

ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.;

,, கே. சிவஸ்வாமி அய்யர்

,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.



# இரு இலையும் ஒரு மொட்டும்

'இரு இலையும் ஒரு மொட்டு'மாகப் பறிப்பதுதான் உயர்ந்த ரகமான தேயிலையைப் பறிக்கும் சரியான முறை. இப்படிச் செய்வதனால், இளம் கொழுந்தான தளிர்கள் தான் பறிக்கப்படுகின்றன என்ற நிச்சயம் ஏற்படுகிறது.

ப்ரூக் பாண்ட் கையாளும் முறைப்படி விற்பனைச் சிப்பந்திகளால் வியாபாரிகளுக்குப் புத்தப் புதிதான சரக்குகள் அடிக்கடி வினியோகிக்கப்படுகின்றன. இரு இலை ஒரு மொட்டு, அதன் உன்னதமான மணத்தோடே உங்களிடம் வந்து சேர்வதற்கு இந்த முறைதான் காரணம்.

இந்தியாவின் முக்கியமான இடங்களிலெல்லாம் உள்ள டெப்போக்களிலிருந்து எங்கள் விற்பனைச் சிப்பந்திகளால் தேயிலை சதா எடுத்துக்கொண்டு போகப்படுகின்றன. டெப்போவில் காலி ஆக ஆக அந்த இடத்தைத் தொழில் ஆலைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட தேயிலை நிரப்புகிறது.

பூரணமான மணத்தோடு கூடின புத்தப்புதிதான குணம், திருப்தியளிக்கும் தன்மை, இவற்றை ரஸிக்க விரும்புகிறவர்களுக்கு "டார்ஜீலிங் ப்ளெண்ட்"தான் சரியான தேயிலை.




# ப்ரூக் பாண்ட்




## தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

# WOODWARD'S GRIPE WATER

*keeps baby well*

I-WW108-111 W WOODWARD LTD LONDON. ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS





# பொருளடக்கம்


தாரண மலர் 4 — கார்த்திகை இதழ் 4



| | | |
|---|---|---|
| கோவை மகாநாடு | | 6 |
| கதம்பம் | ... | 9 |
| மனச் சிகிச்சை — தி. செ. செள. ராஜன் | ... | 10 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமையா | | 14 |
| மேட்டூரில் தயாரிக்கப்படும் செயற்கைப் பொருள்கள் — ஆர். கே. விசுவநாதன் | | 17 |
| புத்தக விமர்சனம் | ... | 20 |
| ஆறுதல் — ரா. ஸ்ரீ. தேசிகன் | ... | 23 |
| காதல் அணுக்கள் — ரா. வீழிநாதன் | ... | 25 |
| கடைசியில் — சாரி | ... | 30 |
| லக்ஷ்யச் சிதைவு — கே. சுந்தரம்மாள் | ... | 34 |
| மசூதியில் உருவப்படம் — பூவாளூர் சுந்தரராமன் | ... | 45 |
| இதென்ன உலகம் — கிருத்திவாஸ் | ... | 53 |


குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

# காவேரி


| தாரண<br>மலர் 4 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | கார்த்திகை<br>இதழ் 4 |
|---|---|---|


## கோவை மஹாநாடு

தமிழை நவீன வாழ்க்கைக்குரிய பாஷையாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சியுடன் கோவையில் கூடிய எழுத்தாளர் மஹாநாடு சில முக்கியமான தீர்மானங்களைச் செய்துள்ளது. இம்முயற்சி மிகவும் போற்றத்தக்கதே. சிலர் இம் முயற்சியை எதிர்க்கலாம். ஆனால் தினந்தோறும் அப் பாஷையிலேயே உலக விஷயங்களையும் அதன் விவஹாரங்களையும் பொதுமக்கள் உணரும்படி எழுதியாகவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளவர்களுக்குத்தான் தமிழிலுள்ள குறைபாடுகள் தெரியும்.

சரித்திரப் போக்கின் காரணமாக மக்கள் அடிமைப் படுத்தப்பட்டு, அரசாங்கபாஷையில் மோகங்கொண்டு அதைப் பயிலுவதில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தியதினால், தமிழ் காலத்தை ஒட்டி வளராமல் நின்றுவிட்டது. எனவே வியாபாரம், பொருளாதாரம், அரசியல், விவகாரம், இவை சம்பந்தப்பட்ட பல விஷயங்களைத் தமிழில் எளிதில் எழுதுவது கடினமாக இருக்கிறது. புதிய புதிய பொருள்கள், முறைகள், கோட்பாடுகள்—இவைகளைக் குறிக்கப் புதிய வார்த்தைகள் தேவை. இது ஏரோப்பிளேன் யுகம். வாயுவேகத்தைக் காட்டிலும் வேகமாகச் செய்திகளைப் பரப்பவேண்டிய யுகம் இது. எல்லா மக்களும் உலக விவகாரங்களில் கலந்துகொள்ள வசதி அளிக்கவேண்டியது கடமை என்று வற்புறுத்தும் காலம். எனவே இதற்கு உகந்த பாஷை தேவை. உலக விவகாரங்களில் பெரும்பாலோர் கலந்துகொள்ள—பங்கு எடுத்துக் கொள்ள, எத்தகைய பாஷா ஞானம் தேவையோ அதுபோதும் என்று கருதும் காலம் இது. ஆகையால் கோடிக்கணக்கான மக்கள் எளிதில் கற்றுக்கொள்ளும்படியான பாஷைதான் தேவை. பல தொழில்களில் ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களைத் தாய்மொழியில் கற்பதே நோக்கம். ஆகையால் நவீனத் தமிழ் பண்டைய இலக்கியத் தமிழாக இருத்தல் அனாவசியம். எத்தகைய நூலையும் இம்மொழியில் சாதாரணமானவர்களும் அறியும்படி ஆக்க வசதியுள்ள பாஷையாகத் தமிழ் அமைக்கப் படவேண்டும். அதற்கான எம் முயற்சியையும் நாம் ஏற்கவேண்டும். இதனால் செந்தமிழுக்கு ஹானி வந்துவிடும் என்று கூச்சலிடுவது மதியீனம்.

இரண்டாவதாக, தமிழ் வளரவேண்டுமென்றால் பல துறைகளில் ஆராய்ச்சி செய்து முதிர்ந்த அனுபவம் பெற்றவர்களைத் தமிழில் எழுதத் தூண்டவேண்டும். அவர்களைக் கொண்டு பல நூல்களை இயற்றச் செய்ய வேண்டும். பத்திரிகைகளில் எழுதச் செய்ய வேண்டும். அவ்வாறின்றிச் சாதாரண மனிதர்களைக்கொண்டு அதைச் செய்யச் சொன்னால் அது வீண் முயற்சியாகும்.

தமிழ் வளரவேண்டுமென்றால் இன்னொரு முக்கியமான காரியமும் செய்யவேண்டும். அதில் எழுதப்படும் கட்டுரைகளுக்கோ, புத்தகங்களுக்கோ ஏராளமான ஊதியம் கிடைக்கும்படி செய்யவேண்டும். அப்பொழுதுதான் நுண்ணறிவு படைத்த புத்திகூர்மையுள்ள படித்த யுவர்கள் இதில் ஈடுபடுவார்கள். தமிழ் வளர்ச்சிக்கு இது முக்கியமான அம்சம் என்று நமக்குத் தோன்றுகிறது. இங்கிலாந்தில் உயர்தரக் கல்லூரியிலிருந்து வெளிவரும் யுவர்களில் முதல் தரமான பிள்ளைகளை வியாபாரம் இழுத்துக்கொண்டுவிடுகிறதாம். அதிலிருந்து எஞ்சிய மாணவர்கள்தாம் கவர்மெண்டு உத்தியோகங்களுக்குச் செல்லுகிறார்களாம். அம்மாதிரியே முதல் தர புத்திவாய்ந்த யுவர்கள் கல்லூரியிலிருந்து வெளிவந்தவுடன் தமிழ்ப் பத்திரிகைகள், இன்னும் தமிழ் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்படும் இதர ஸ்தாபனங்கள் இவைகளில் உத்தியோகம் பெற முன்வரும்படி செய்ய வேண்டும். இதற்கு ஆங்கிலப் பத்திரிகைகளைக் காட்டிலும் அதிக ஊதியம் அளித்தாலொழிய இது சாத்தியமாகாது. அகில இந்திய பத்திரிகாசிரியர்களின் நிரந்தரக் கமிட்டியார் செய்த தீர்மானம் இம்முறையில் தாய்ப் பாஷை வளர்ச்சியைத் தடுப்பதாக ஆகும் என்பது நமது அபிப்பிராயம்.

தமிழ் எழுத்தாளர்கள் முன் இருக்கும் பொறுப்பு மிகப் பெரிது. சில குறிப்பிட்ட துறைகளில்தான் அவர்கள் இதுவரை தங்கள் கவனத்தைச் செலுத்திவந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள திறமை வாய்ந்த இளம் எழுத்தாளர்களில் நூற்றில் ஐந்துபேர்தான் தமிழில் எழுதுவதில் இன்று ஈடுபட்டிருக்கிறார்கள். மற்றவர்களையும் அதில் எழுதுமாறு நாம் தூண்டவேண்டும். இப்போதுள்ள எழுத்தாளர்கள் முயற்சி செய்யவேண்டிய துறைகள் பல; அடையவேண்டிய குறிகள் அநேகம். அதை அடையும் வரை விடாமுயற்சியுடன் பாடுபடவேண்டும். இதற்கெல்லாம் ஊக்கமளித்துத் தகுந்த ஊதியம் தந்து உற்சாகப்படுத்தவேண்டியது பொதுமக்களின் கடமை; பத்திரிகை முதலாளிகளின் பொறுப்பு.

கோவை மஹாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களைச் செய்கையிற்கொண்டுவருவது எளிதான காரியமன்று. விடாமுயற்சி வேண்டும்; எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். எல்லாவற்றைக் காட்டிலும் பெருத்த நிதி வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள வள்ளல்கள் அனேகர். குறிப்பிட்ட காரியங்களைக் குறித்து இவர்கள் நிதிகள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யவேண்டும். "வாழ்க தமிழ்" என்று பாடிவிட்டால் மட்டும் போதாது. தமிழன் என்று பறைசாற்றிக் கொள்வதினாலும் தமிழ் வளர்ந்துவிடாது. மிகவும் படித்த யுவர்களை அதில் ஈடுபடச் செய்யவேண்டும்.

இவற்றிற்கெல்லாம் அஸ்திவாரக்கல் நாட்டியது ஸ்ரீ சொக்கலிங்கத்தின் தலைமையில் கூடிய கோவை மஹாநாடு. அங்கு ஏற்றுக்கொண்ட பணியை விடாது தொடர்ந்து நடத்துவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

## சங்கீத விழா

ஸ்ரீ தியாகபிரும்ம சபையார் உஸ்தவ நிதிக்குப் பணம் திரட்டுவதற்காக இவ்வருஷம் பதினைந்து அயனான கச்சேரிகளைத் தஞ்சையிலும் குடந்தையிலும் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஸீரீஸின் விவரம் மற்றொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்த உடனேயே அனைவரும் உற்சாகத்துடன் டிக்கட் வாங்கப் போட்டியிட்டுக் கொண்டு வருவார்கள்என்பதில் சந்தேகமில்லை.

இவ் வுற்சவத்திற்காக ஏற்படும் கச்சேரிகளின் போக்கே அலாதி. மற்றக் காசுக் கச்சேரிகள்போல் இல்லாது, இவை வித்வான்களின் முழுத்திறமையையும் உத்ஸாகத்தையும் வெளிப்படுத்திக் கேட்போரை மிகவும் மகிழ்விக்கச் செய்கின்றன. இது நம் பிரத்யக்ஷானுபவம். ஆகையால், இதற்காகச் செலவழிக்கப்படும்பணம் நல்லகாரியத்திற்காக உபயோகப்படுகிறது என்பதோடு நமக்கு நல்ல பிரதிப்பிரயோஜனத்தையும் அளிப்பதாகின்றது.

பலரின் வேண்டுகோளின்பேரில் இவ் வருடம் தஞ்சையிலும் குடந்தையிலும் இந்த ஸீரிஸ் நடைபெறுகிறது. இதனால் ஜில்லாவிலுள்ள அனைவரும் இந்த இசை இன்பத்தை அனுப்பவிப்பதில் கலந்துகொள்ள வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பயன் படுத்திக்கொள்ள ஸங்கீத அபிமானிகள் திரள் திரளாக இப்புனித கைங்கரியத்தில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கிறோம்.

## முகப்புப் படம்

நமது அட்டைப் படத்தை அலங்கரிப்பவர் தான் தென் இந்தியக்கைத்தொழில் அபிவிருத்தியின் முன்னணியிலே நிற்கும் ஸ்ரீ. வி. சேஷசாயி. அளவற்ற திறமை வாய்ந்தவர் இவர். இன்று அமெரிக்கா சென்றிருக்கிறார். மேட்டூர் தொழிற்சாலை, திருவாங்கூர் உரம் தயாரிக்கும் தொழிற்சாலை, நீலாம்பூர் சுரங்கங்களிலிருந்து தங்கமெடுக்கும் முயற்சி, இத்திட்டங்களை எல்லாம் நிர்வகித்து நடத்துபவர் இவரே. இவற்றைத்தவிர அநேகம் மின்சார ஸ்தாபனங்களையும் நடத்திவருகிறார். தென் இந்தியா டால்மியா என்று இவரைக் கூறுவது மிகையாகாது.






*Madras Stockists:-* **M/s. RAJAN DRUG STORES**
155, Nyniappa Naick Street, MADRAS.

பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

# கதம்பம்

## மூன்றாவது மகா யாகம்!

உலக க்ஷேமத்தில் கருத்துக்கொண்டு வல்லரசுகள் அடிக்கடி மகாயாகமொன்றைச் செய்வது வழக்கம். அறியாதவர்கள் மகா யுத்தமெனத் தூஷிப்பார்கள். முதல் மகா யாகம் 1914 ஆம் வருஷம் தொடங்கி 1918-ஆம் வருஷம் பூர்த்தியாயிற்று. இப்பொழுது நடக்கும் மகாயாகம் முன் யாகத்தின் தொடர்ச்சியெனவும் கூறுவாருண்டு. இரண்டாவது மகா யாகமெனப் பலர் சொல்லி வருகிறார்கள். இந்த இரண்டாவது மகா யாகம் 1939-ஆம் வருஷம் செப்டம்பர் மாத இறுதியில் தொடங்கப்பெற்றது. அதற்குக் காரணம் ஹிட்லர் என்ற ராக்ஷஸன் தோன்றி, ஐரோப்பாவில் அப்பாவி தேசங்களை விழுங்க ஆரம்பித்ததாம். இப்படி அந்த ராக்ஷஸன் பல தேசங்களை விழுங்கி, போலந்தின்மீதும் பாயவே, அது உதவிக்குக் கதறியது. அனாதைகளை ரக்ஷித்துக் காக்கப் பூவுலகில் அவதாரம் செய்துள்ள பிரிட்டன், ராக்ஷஸனின் கொட்டத்தை அடக்க மகா யாகமொன்றைத் தனியாக ஆரம்பித்தது. பிறகு ரூஸ்வெல்ட் திட்சிதரையும் ஸ்டாலின் சாஸ்திரிகளையும் உதவிக்கு இழுத்துக்கொண்டது ஆனால் முக்ய காரியத்தைச் சர்ச்சில் கனபாடிகள் சற்று மறந்துவிட்டார்! யுத்த தேவதைக்குப் பலியிடப்பட வேண்டிய அத்யாவசியமான பொருள் சேகரம் செய்யப்படவில்லை! இத்தருணத்தில் யுத்த தேவதை ஸ்டாலின் சாஸ்திரிகள் மூலமாகத் தோன்றி தனக்குப் போலந்து தேசமே பலியிடப்பட வேண்டுமென விரும்பியது. சற்றும் தயங்காமல் அப்படியே செய்யச் சர்ச்சில் கனபாடிகள் தீர்மானித்துவிட்டார். "உனது பலிப்பொருள் என்ன?" என்று யுத்த தேவதை ரூஸ்வெல்ட் திட்சிதரைக் கனவில் தோன்றிக் கேட்கவே சைனாவைப் பலிகொடுக்கத் திட்சிதர் யோசித்து வருகிறாராம். இரண்டாவது மகா யாகம் இன்னும் பூர்த்தியானபாடில்லை.

இப்படி விட்டுவிட்டு யாகங்களைச் செய்வது தர்மத்துக்கு விரோதமான காரியம், உலக க்ஷேமத்துக்கு உகந்ததல்ல, என்பதை இப்பொழுது வல்லரசுகளாக விளங்கும் ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் இவைகள் உணர்ந்து, நடக்கும் யாகம் பூர்த்தியாகுமுன்னமேயே மற்றொரு யாகத்தைத் தொடங்க எண்ணி, அதற்கு வேண்டிய பூர்வாங்க காரியங்களை மும்முரமாகச் செய்துவருகின்றன.

இந்த மூன்றாவது மகா யாகத்தில் யுத்த தேவதைக்குப் பலியிட, பாரசீக தேசங்களைச் சேர்ந்ததும் துர்ப்பாக்கியவசத்தால் எண்ணெய் உற்றுக்களை அபரிமிதமாகக் கொண்டதுமான ஈரான் தேர்ந்தெடுக்கப்பட்டாய்விட்டது. அதைப் பலியிடும் பாத்யத்தைச் சர்ச்சில் கனபாடிகள், ரூஸ்வெல்ட் திட்சிதர், ஸ்டாலின் சாஸ்திரிகள் இவர்கள் மூவரும் ஏக தேசபாத்யம்போல் கொண்டாடத்தலைப்பட்டுவிட்டனர். கனபாடிகளைக் கலக்காமல் திட்சிதர் வேலை செய்யவே கனபாடிகள் சற்றே திடுக்கிட்டார். பாரசீக நாடுகளில் அடிக்கடி கலகம், குழப்பம், அரசாங்க மாறுதல் இவைகள் நடைபெறுவதற்குக் காரணம் சர்ச்சில் கனபாடிகளும் ரூஸ்வெல்ட் திட்சிதரும் ஈரானின் வபை போன்ற எண்ணெய் உற்றுக்களை எடுத்துக் கொள்ளப்போடும் போட்டிதான் என்பதாக அறிந்தோர் சிலர் கூறுகின்றனர்.

இப்படியாகக் கனபாடிகளும் திட்சதர் அவர்களும் ஈரானின் வபை விஷயமாகப் போட்டி போடவே ஸ்டாலின் சாஸ்திரிகள் வேறு குழப்பத்தை அதிகமாக்கிவிட்டார். சாஸ்திரிகள், வபையான எண்ணெய்க் கிணறுகளில் தமக்கும் பாத்யம் உண்டெனப் பலமாக வாதித்து வருகிறார். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் பலிப் பிராணியாகிய ஈரான் "இப்பொழுது நடக்கும் யாகம் பூர்த்தி அடையுமுன் என்னை ஹிம்சிப்பது கொடிய பாவம்" என்று முறையிட்டது. அது தான் தர்மமும், சாஸ்திரமும், நியாயமும் என்று ஆமோதித்தார் ரூஸ்வெல்ட் திட்சிதர்.

ஆனால் திட்சிதர் சொல்வதை ஸ்டாலின் சாஸ்திரிகள் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. யுத்த யாக சம்பந்தமான சாஸ்திரங்களில் தம்மைவிட அதிகம் தெரிந்தவரில்லை என்ற இறுமாப்பு எண்ணத்துடன் தமக்கே முதல் மரியாதைப் பாத்யம் ஈரானின் வபையாகிய எண்ணெய் ஊற்றுக்களில் உண்டெனக் கிளர்ச்சி செய்துவருகிறார்.

மூன்றாவது மகா யாகம் அதிவிமரிசையாக நடப்பதற்கு இக்கிளர்ச்சி காரணமாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது. பெரிய கைகள் நடத்தும் யாகம். கேட்பானேன்?

என்ன இது? அடாடா! ஏன் கண்களில் கண்ணீர்? பலியாக அமைந்துள்ள ஈரானைக் குறித்தா?

இந்தியாவின் கதி ஈரானுக்கும் ஏற்பட்டுவிட்டதே என வருத்தமாயிருக்கலாம். மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் தலை எழுத்து இப்படித்தான் போலும்! அந்தோ பரிதாபம்!

# மனச் சிகிச்சை

தி. சே. சௌ. ராஜன்

மனிதனுக்கு நோய் வரவேண்டியது அவசியமா? "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழி. அவ்வாறு மனிதன் இருக்கமுடியுமா? அப்படியிருந்தால் உலகத்தைக் காட்டிலும் மேம்பட்ட மோக்ஷம் வேறு எங்கிருக்கிறது? ஆனால் மனிதவர்க்கம் அவ்வாறில்லை. சமூகம் இருக்கும் நிலையில் இயற்கை வாழ்வு நடத்துவது முடியாது. அதி நாகரிக வாழ்வு இயற்கைக்கு முற்றிலும் மாறாக உள்ளது. இவ்விரு நிலைகளைத் தொடர்ந்துவரும் இன்னல்கள் ஒன்றுக்கொன்று குறைவில்லை.

நாகரிகம் முதிர்ந்த ஐரோப்பிய நாடுகளில், இயற்கை வாழ்வு நடத்தவேண்டுமென்கிற ஒரு கிளர்ச்சி உருவெடுத்து வருகிறது. "டுக்கோபர்" என்ற கூட்டத்தினர், உடை அணிவது சுகத்திற்கும், இயற்கைக்கும் விரோதம் என்ற கொள்கையை ஆதரித்து ஆண் பெண் அனைவரும் நிர்வாணமாக வாழ்வு நடத்துகின்றனர். அவர்களைச் சர்க்கார் காட்டுமிராண்டிகளைப்போல ஒதுக்கி அப்புறப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படி நிர்வாணமாக இருப்பதால் அவர்களிடம் மனிதத் தன்மை எவ்விதத்திலும் குறைவுபட்டதாகக் காணப்படவில்லையென்று அவர்களுடன் சென்று சிலநாட்கள் தங்கியிருந்த எனது நண்பர் ஒருவர் எனக்குச் சொன்னார். அவர்களுடைய ஆரோக்கியமும், நோயற்ற வாழ்வும் நாம் அறிந்துகொள்ள வேண்டியதவசியமென்பதும் அவரது அபிப்பிராயம்.

சில வருஷங்களுக்குமுன் மலையாள தேசத்தில் பெண்மணிகள், அரையில் நான்கு முழ முண்டு ஒன்றே அணிந்துவந்தார்கள். இப்பொழுது பெரும்பான்மையோர் நம்மைப்போல உடல் முழுவதையும் துணிகளால் மறைக்க ஆரம்பித்துவிட்டனர். இந்த இரு நிலைகளின் காரணமாக அவர்களிடம் நோய் எம்மட்டில் பரவியிருக்கிறது என்பதை ஆராய்வது உபயோகமாகவிருக்கும். மக்களின் கற்புநிலை உடலை மூடுவதாலும், திறந்து வைப்பதாலும் மாறுபாடு அடையுமென நினைக்க இடமில்லை. நவீன நாகரிகத்தின் போக்கைக் கவனித்தால், நிர்வாணத்திற்கு அடுத்தபடியான வெகு குறைந்த உடைகளையே அணியும் பழக்கம் அதிகரித்து வருகிறது. அதிலும் பெண் மக்களிடம் இந்தப் பழக்கம்சீக்கிரமாகப்பரவிவருகிறது. இதனால் சிக்கனமும், சுகவாழ்வும் அதிகரிக்குமா என்பது திட்டமாகச் சொல்ல முடியாது. அழகை மேம்படுத்துவதற்காக அணியும் குறைந்த உடை உண்மையில் அதிகச் செலவில் வந்து முடியலாம். வைத்திய முறையில் பார்த்தால் எவ்வளவுக்கெவ்வளவு சூரிய வெளிச்சம் உடலில் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நோய் அணுகாமல் தடுக்கலாமென்பது ஆராய்ச்சியின் முடிவும் அனுபவமுமாகும். தோலைப் பற்றிய பல தொத்துநோய்களும், க்ஷயம் முதலிய ஈரல் நோய்களும் சூரிய வெளிச்சத்தால் குணமடைகின்றன. சூரிய கிரணங்கள் அதிகம் இல்லாத இடங்களிலோ, அல்லது வைத்திய முறைக்குத் தேவையான வெப்பத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலோ, மின்சார வெளிச்சத்தைக்கொண்டு (ultraviolet lamp) வைத்தியம் நடப்பது நவீனமுறை. எவ்விதம் பார்த்தபோதிலும், இயற்கை வாழ்விற்கு விரோதமாக நடந்தால் நோய் உண்டாகும் என்கிற முடிவை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் மனித சிருஷ்டி மிருகங்களைப்போலல்லாமல், புத்தி, மனம், பகுத்தறிவு இவைகளைக்கொண்டதாக இருக்கிறது. இயற்கையின் ரகசியங்களை விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்து அதை நன்மைக்கோ தீமைக்கோ உபயோகப்படுத்தும் முயற்சி நம்மிடத்தில் நாளுக்குநாள் அதிகரித்து வந்துகொண்டிருக்கிறது. மனமும் முயற்சியும் இருக்கும் வரையில், மனிதன் பரிபூர்ணமான இயற்கை வாழ்வு நடத்தமுடியாது. மனம் முக்கியமா உடல் முக்கியமா என்கிற பிரச்னையில், இரண்டும் முக்கியமெனத் தான் முடிவு செய்யலாமே தவிர, ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று அதிக முக்கியம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் உடல் இல்லாமல் மனம் இல்லை. மனம் ஒன்றில்லாமல் மனித உடல் கிடையாது. நோய்க்குக் காரணம் மனமா, உடலா என்கிற விசாரணை செய்தால், இரண்டும் காரணம் என்கிற முடிவிற்குத்தான் வரமுடியுமே தவிர வேறு விதம் முடிவு செய்ய இடமில்லை. இயற்கை விதிகளுக்கு விரோதமாக வாழ்வு நடத்தினால் நோயுண்டாகும். மனம் கொந்தளித்துக்கொண்டு, காமக்ரோத லோப

மோஹ மத மாச்சர்யங்களால் வாடினாலும், நோய் உண்டாகிறது. இயற்கைச் சாத்திரத்தின் நுட்பத்தைத் தெரிந்துகொண்டு, அதற்கேற்றபடி வாழ்வை ஒழுங்குபடுத்தி, நோய் வரவொட்டாமல் தடுத்துக்கொண்டால், உலகத்தில் மனித சமூகத்திற்குப் பாதி நோய் தீர்ந்துவிடும். கல்வி அறிவினாலும், பழக்க வழக்கங்களினாலும், சமூக ஆசாரத் திட்டங்களினாலும், மன நோயை ஒருவாறு சமாளிக்கமுடியும். இயற்கை வாழ்வுநடத்தி, நோயைத் தடுப்பதைக்காட்டிலும் மன நோய் வராமல் தடுப்பது கடினமான வேலை. இருந்தபோதிலும், மனிதன் சுகவாழ்வு எய்த விரும்பினால், இயற்கை வாழ்வோடு, மன அமைதி பெறும் முயற்சியும் அவசியம். உடலில் நோயில்லாமல் மனநோயின் காரணமாக உடலும் நோயுற்றதுபோலப் புலப்படும். இது பலருக்குப் புரிவதில்லை. பயம் நோய்க்குக் காரணம் என்பது பலர் அறிந்ததே. ஆனால் பயம் என்னும் நிலை உடல்மூலமாகத் தானே வெளியாகிறது? இயற்கை நோயைப் போலக் குறிப்பிடக்கூடிய ஒரே முறையாகப் பயம் காண்பதில்லை. சிலருக்கு உடல் நடுக்கம், சிலருக்கு உறக்கமின்மை, சிலருக்கு ஆறாத துயரம், சிலருக்குப் பேய்பிடித்ததுபோல் ஆட்டம், இம்மாதிரி பல குறிகளுடன் வெளியாகிறது. மனநோய் ஒரு சில மனிதர்களுக்குத்தானுண்டு என்பது கிடையாது. மனம் படைத்த மக்கள் எல்லோருக்கும் ஏற்படக்கூடியது. உடல் சீராக இருக்குமானால் மனம் மாறுாட்டத்தினால் அதிகம் பாதிக்கப் படுவதில்லை. நளினமான சுகவாழ்வு நடத்தி, இயற்கை வேறுபாடுகளால் பாதிக்கப்படுபவர்களிடத்து மனநோய் அதிகம் வெளிக்காட்டுகிறது. மனநோயால் உண்டாகும் தொல்லைகளை அளவிடல்முடியாது. குலம் கெடுவது, குடும்பம் சிதைவதுமுதல் தற்கொலைவரையில் பல்வேறு துறைகளில் மனநோய் கொண்டுபோய் நிறுத்தும். மேல் நாட்டு ஆராய்ச்சி நிபுணர்கள், வெகுகாலம் வரையில் மனதின் பாகுபாடுகளை அறிந்தார்களில்லை. இன்னும் சிலரேதான் அறிந்து வருகிறார்கள். மனிதர்களுக்கு உண்டாகும் சுகக்கேட்டிற்கு மனம் மாறுதலே ஓர் பெரிய காரணமென்று இப்பொழுதுதான் அவர்களுக்குப் புலப்பட்டு வருகிறது. புது நாகரிகம் அதிகரிக்க, வாழ்க்கைப் போராட்டம் கடினமாகி, பைத்தியக்காரர்கள் கூட்டமும் அதிகரித்து வருகிறது, பைத்தியக்காரர்களில் அநேகர், இயற்கை நோயினால் பீடிக்கப்படுவதில்லை; இருந்த


# வான்கார்ட் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

**308-309, லிங்கசெட்டி தெரு, மதராஸ்**

நெருப்பு—மோட்டார்—கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு & எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸூம் செய்யப்படும்.

எமது ஏஜண்டுகளாகவும், ஆர்கனைஸர் அல்லது பிரதம ஏஜண்டுகளாக வேலை செய்ய அனுபவமுள்ள நல்லவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உண்மையில் திறமையுள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

போதிலும், அவர்கள் நிலே மனத்தின் முக்கியத்தை நன்கு புகட்டுகிறது. கைதேர்ந்த வைத்தியன் மனதின் போக்கை நன்கு அறிந்தவனுகவேயிருக்கிருன். நோயைத் தீர்க்கும் முறையில் மன நோயைத் தீர்ப்பதே பெரும்பாலான முயற்சியாகும்.

சில வருஷங்களுக்கு முன்பாக, நான் கண்டிராத ஒரு நோயைக் குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டேன். நோயாளி சுமார் பன்னிரண்டு வயதுள்ள ஒரு பெண். நல்ல தேகக்கட்டு, உடல் நயம் பொருந்தி, தன் வயதிற்கு மேலான தோற்றத்தோடு என்னிடம் சிகிச்சைக்கு வந்துசேர்ந்தாள். மூன்று வருஷத்திய நோய். சென்னேமுதல் மதுரைவரையில் உள்ள பல ஆஸ்பத்திரிகளிலும், வைத்தியர்களிடத்தும்வைத்தியம்செய்துகொண்டும்பயன்படவில்லே. வியாதியின் குறி ஒன்றேதான், மூன்று வருஷமாக மலம் கழிவதில்லே. வழக்கம்போல நீர் மட்டிலும் இறங்குகிறது. என்ன மருந்து கொடுத்தாலும் மலம் கழிவதில்லே. அப்படி வருஷக்கணக்காக மலம் கழியாமலிருந்தும் அதனுல் தேக ஆரோக்கியத்திற்கு ஒரு குறைவுமிருப்பதாகத் தோன்றவில்லே. ஆகாரக் குறைவு கிடையாது. பரிசோதித்துப் பார்க்கும்பொழுது ஓர் அவயவமாவது நோயுற்றிருப்பதாகத் தெரியவில்லே. இயற்கையாக நடக்கவேண்டிய நிகழ்ச்சிகளில் மலம் கழிவது ஒன்று. அது அடங்கிவிட்டால் எவ்விதம் உயிர்வாழ முடியும் என்ற கவலே பெற்றேர்களுக்கு. அந்தப் பெண்ணின் வாழ்நாளில் திடீரென மனம் மாறுதல் ஏற்படக்கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்திருந்தது. பத்தாவது வயதில் பெரிய மனுஷியான குறிகள் காணப்பட்டன. ஒரு தடவை கண்டதைத் தவிர மறுமுறை மாதந்தோறும் காணப்படவேண்டிய நிகழ்ச்சி கிடையாது. இந்தச் சம்பவத்தை மனதில் கவனித்துக்கொண்டாலும்கூட இதன் காரணமாக மலம் அடைபட்டுவிடுமென எனக்குத் தோன்றவில்லே. பேதிக்கான பல மருந்துகள் கொடுக்கவேண்டிய அளவைக்காட்டிலும் பன்மடங்கு அதிகம் கொடுத்தேன். மலம் கழியவில்லேயென்றே தகவல் கொடுத்தார்கள். கடைசியாக அந்தப் பெண்ணே எனது ஆஸ்பத்திரியில் விட்டுப்போகும்படி, உடன்வந்த உறவினர்கள் எல்லோரையும் அவர்களுடைய ஊருக்கு அனுப்பிவிட்டேன். இரண்டு தாதிமார்களே இரவு, பகல் மாற்றி மாற்றிக் காவல்போட்டு அந்தப் பெண்ணேத் தனிமையாக மலம், நீர் கழிப்பதற்குப் போக விடாமல், கூடவே செல்லும்படியாக ஏற்பாடு செய்தேன். அன்றுமுதல் தினந்தோறும் இரவு படுக்கப்போகும்பொழுது கடுமை


# ஜம்மியின் லிவர்க்யூர் மூலம் புனர்ஜன்மம்



## ஜம்மியின் லிவர் க்யூர்

நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருட ...
கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்

யான பேதிமருந்து கொடுக்க ஆரம்பித்தேன். முதல்நாளிரவு மலம் கழியவில்லையென்று தாதியின் ரிப்போர்ட் கிடைத்தது. மறுநாள் முன்னிரவு ஒரு காவலும் பின்னிரவு ஒரு காவலுமாகப்போட்டு, பேதி மருந்து கொடுத்தேன். தாதிமார்களிடம் பேசிப் பொழுது போக்கி அவர்கள் சற்றுக் கண்ணயரும் சமயம் இந்தப் பெண் திருட்டுத்தனமாக வெளியில் போய்க்கொண்டிருப்பதைத் தூங்குவது போல் பாசாங்குசெய்து படுத்திருந்த தாதி கண்டாள். 'இருட்டில் எங்கே சென்று வந்தாய்' என்று கேட்டதற்கு 'நீர் கழிப்பதற்குப் போனேன்' என்று பதில்வந்தது. ஆனால் நீர் கழித்த இடத்தைப்போய்ப் பார்த்தபொழுது மலமும் கழிந்திருந்ததைத் தாதி பார்த்துவந்து அந்தப் பெண்ணைக் கேட்டபொழுது, மலம் நான் கழித்தது அல்லவென்று சாதித்துவிட்டாள். மறுநாள் காலையில் விசாரித்து இந்தத் தகவல் கிடைத்ததும், அன்றிரவு தாதிகளுக்கு ஓர் உத்தரவு போட்டேன். அந்தப் பெண் திருட்டுத்தனமாக வெளியில் போகும்படிவிட்டு, தாதியும் பின்தொடர்ந்து சென்று, மலம் கழிக்கும்பொழுது, திடீரென எலெக்டிரிக் டார்ச் வெளிச்சத்தைப்போட்டு, கழித்திருக்கும் மலத்தை அந்தப் பெண் பார்க்கும்படிசெய்ய ஏற்பாடு செய்தேன். அன்றிரவும் திருட்டுத்தனமாக இருட்டில் அந்தப் பெண் வெளியேபோய் மலம் கழிக்கும்பொழுது அகப்பட்டுக் கொண்டாள். தான் கழித்திருக்கும் மலத்தை வெளிச்சம் போட்டுக் காண்பித்தவுடனே திகைத்துவிட்டாள். அன்றையமுதல் அவளுடைய நோய் தீர்ந்துவிட்டது. இது நடந்தது வெகு வருஷங்களுக்கு முன்பு. இப்பொழுது அந்த அம்மாள் ஏராளமான பிள்ளை குட்டிகளுடன் உயர்தர வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்.

இதைப் பெண்மக்களின் பாசாங்கு என்று ஏளனம் செய்து நகைத்துவிடலாம். ஏராளமான பணச் செலவு செய்து பல ஊர்களுக்குச் சென்று அலைந்து, திரிந்து, கவலையுற்று, வருந்தியவர்கள் நகைப்புக்கு உரிய ஒரு சிறிய விஷயமாகக் கருதவில்லை. அந்தப் பெண்ணுக்கும், பெற்றோர்களுக்கும், மனதிலிருந்த திகிலும், அதனால் அவர்கள் அடைந்திருந்த துக்கமும் அளவில்லை. அவர்களைப்பற்றிய மட்டில் அப்பெண்ணின் நோய் உண்மை. நோய் வாய்ப்பட்டு, உடல் நலம் குன்றி அவதிப்படும் நோயாளிகளின் வருத்தம் ஒருபுறமிருக்க, அப்பெண்ணின் எதிர்கால வாழ்வு மற்றோர் புறம் கவலைக்கிடமாகிவிட்டது. வியாதி மனதைப்பற்றி உடலை வாட்டினாலும், அல்லது உடலைப்பற்றி மனதை வாட்டினாலும், துன்பம் தீரவேண்டியது அவசியம். அது வைத்தியனுடைய வேலை.

இம்மாதிரி முழுமனநோய் தவிர, மனக்கவலை காரணமாகப் பல உடல் நோய்கள் உண்டாகின்றன. இவைகளையும் காரணம் கண்டுபிடித்துச் சிகிச்சை செய்தால் சீக்கிரத்தில் நலம்பெறக்கூடும். வைத்தியம் செய்யும் முறையில் இம்மாதிரியான நோயாளிகளைக் கேலி செய்வதோ, அல்லது அவர்களுக்கு நோயில்லையென்று சொல்லிச் சிகிச்சை மறுப்பதோ, வைத்தியர்களின் அறிவீனம் என நினைக்கிறேன். நோயின் அவதியால் பணம் செலவழித்து வைத்தியம் பார்த்துக்கொள்பவர்களின் மனோநிலையைக் கவனிக்கவேண்டும். நான் பார்த்த இந்த நோயாளியின் வியாதியை நான் குணப்படுத்திவிட்டேன் என்று அவர்கள் மனதில் நல்லெண்ணமும், நம்பிக்கையும் உண்டாயின. பல வருஷங்கள் அவர்கள் நன்மதிப்பையும் பெற்றேன்.



# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமையா

இந்த மாதம் என்ன எழுதுவதென்று எனக்குப் பெரிய கவலையாயிருக்கிறது. அம்மாஞ்சி வரண்டு போய்க் கிடக்கிருன். எப்பொழுது பார்த்தாலும் வயிற்று வலிக்காரன் மாதிரி காண்கிருன். வயிற்று வேதனையா என்று கேட்டால், இல்லை, இடுப்புப் பிடிப்பென்கிருன். ஏதாவது சங்கீதக் கச்சேரிக்குப் போகலாமே என்று கூப்பிட்டால் தன்ஞல் மூன்று மணி நேரம் உட்கார்ந்து கேட்கமுடியாதென்கிருன். முன்னெருகாலத்தில் ஐந்து மணி நேரம் சங்கீதம் கேட்டும் களைப்பென்பதே தெரியாத அம்மாஞ்சிக்கு இப்பொழுது இவ்வளவு க்ஷீணதிசை வந்துவிட்டதே என்று வருந்துகிறேன். இந்த வருத்தம் ஒரு பக்கமிருக்க முக்கியமாக வருந்துவது எதற்கென்ருல் எனக்கு இந்த இதழில் எழுதுவதற்கு விஷயம் இல்லாதிருப்பதே.

கார்ப்போரேஷன் அதிகாரிகள் சமீபமாக பாங்க் வெட்டிங் ஹாலில் ஸ்ரீமதி ம. ஷா. சுப்புலக்ஷ்மியம்மாளை வைத்து ஒரு பெரிய கச்சேரி நடத்தினுர்களாம். அன்றையதினம் சுமார் முப்பதினுயிரம் ரூபாய் வசூலாயிற்றென்று கேள்வி. அந்தக் கச்சேரிக்காவது அம்மாஞ்சியை அழைத்துப் போகலாமென்று நான் மிகவும் பிரயாசைப்பட்டேன்.

பிச்சைக்காரர்களுக்கு இருப்பிடம் கட்ட வேண்டுமென்ற அபிப்பிராயத்தைக்கொண்டு கச்சேரி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அம்மாஞ்சிக்குத் தெரிவித்தேன். அவன் அசையவில்லை. ஒரு டிக்கட்டுக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் ஒரு ஓரத்தில் ஒண்டியிருந்து அந்தக் கைங்கரியத்தில் ஈடுபடலாமென்று சொன்னேன். மனுஷன் கிருங்கவில்லை, "இருபத்தைந்துக்கு ஐம்பது ரூபாய் வேணுமென்ருலும் கொடு — கச்சேரிக்குப் போனுல் காலை ஒடித்துக் கழுத்தில்கட்டுவேன், அதைப்பற்றித் திரும்பவும் பேசினுல் பல்லைத் தட்டிக் கையில் கொடுப்பேன்" என்ருன். சொல்வதைச் செய்துவிடுந் திறமுள்ள ஆசாமி அம்மாஞ்சி—ஆதலால் அன்று சும்மா இருந்துவிட்டேன். அன்றையதினம் கச்சேரியில் என்ன நடந்ததென்று கேட்டதில் முக்கியமான சம்பவம் செம்பை வைத்தியநாத பாகவதர் மிகவும் திருப்தியடைந்ததைத் தெரிவித்துக் கொண்டதாகக் கேள்விப்பட்டோம். இதைக் கேட்ட அம்மாஞ்சி "நீயும் நானும் எதற்காகப் போவது? நல்ல ஸம்பிரதாய வித்வான் ஒருவர் நம் சார்பாக அங்கிருந்து சந்தோஷப்பட்டுவிட்டார். இனி நமக்கென்ன குறை? நாம் அனுப்பவேண்டிய பணத்தைக் கார்ப்போரேஷன் ஆபீஸில் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டால் நம்முடைய கட்டணம் செலாமணியாய் விடுமே!" என்று ஒருவாறு மழுப்பிவிட்டான்.

இதே மாதிரி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு முரட்டுத்தனம் பிடிக்கிருன் அம்மாஞ்சி. அரியக்குடி ராமானுஜய்யங்கார் கச்சேரிக்குப் போகலாமென்று கூப்பிட்டால் "நேபொகடகுண்டே, எவரிகை அவதார — மெத்திதிவோ, ராமநன்னுப்ரோவரா, இவைதானே பாடப்போகிருர்? இதைப்போய்த் திரும்பவும் திரும்பவும் கேட்பானேன்?" என்கிருன். அவன் சொல்வதுபோலவே, கச்சேரிக்குப் போய்விட்டு வந்தவர்களைக் கேட்டால் "ஆமாம், அதுதான் பாடினுர்" என்கிருர்கள்.

டைகர் வரதாசாரியார் நுங்கம்பாக்கம் சபையில் பாடுகிருராம், இதைப் போய்க் கேட்கலாம் வா என்று கூப்பிட்டால் "மூன்று வருஷங்களுக்கு முந்தித்தானே தியாகராஜ சுவாமிகளைப்பற்றிக் காசு வாங்கிக்கொண்டு கீர்த்தனைகளைப் பாடின தெலுங்குப் பிராமணனென்று இலவசமாகப்பேசினுர் இந்த டைகர் வரதாசாரியார். இவரை இவ்வளவு சுலபமாக நாம் மன்னித்துவிடலாமா"? என்று ஒரே பிடிவாதமாகப் பேசுகிருன். 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்களே என்ற பழமொழியை எடுத்துக் காட்டினுல், "சறுக்கட்டுமே, சறுக்கி விழட்டுமே, விழுந்து எழுந்திருக்கட்டுமே, எழுந்திருந்தபின் என்ன அடிபட்டதா என்று நாம் கேட்பதா அல்லது சறுக்கின பொன் பாதத்தைக் கையில் ஏந்துவதா? யானை சறுக்கி விழுந்தபொழுது அந்த ஜந்துவைத் தாங்கிக்கொண்டு எடுத்து அணைத்து உச்சி மோந்து சல்லாபித்த மஹானுபாவன் ஒருவனுமிருந்ததாக நாம் கேள்விப்படவில்லை. இது இப்படியிருக்க, டைகர் வரதாசாரியார் அவர்களுக்கு, மைசூர் மஹாராஜா பட்டம் கொடுத்தால் அதைப்பற்றிக் குதூகலப்படவேண்டிய சந்தர்ப்பம் இன்னும் வந்ததாகத் தெரியவில்லையே" என்கிருன் அம்மாஞ்சி.

மதராஸ் மியூஸிக் அகாடமி சங்கத்தாருடைய வருஷக் கொண்டாட்டம் அடுத்த மாதம் நடக்கப்போகிறதாம். இது சம்பந்தமாக நேற்றையதினம் ஹிந்து பத்திரிகையில் ஒரு அட்வர்டைஸ்மெண்ட் இருந்ததை நீங்கள் கவனித்திருக்கலாம். கொட்டகையில் 'அட்வர்டைஸ்' செய்ய உத்தேசித்திருப்பவர்க்ளெல்லோரும் உடனே முயற்சி எடுக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். சங்கீதக் கச்சேரி நடக்கும் கொட்டகைகளில் கண்ணைப் பறிக்கும்படியான அட்வர்டிஸ்மெண்டு பெரிய எழுத்துக்களாலும் விசித்திரமான சித்திரங்களாலும் மின்சார விளக்குக்களால் ஒளிக்கப்பட்ட

எழுத்துக்களாலும் பிரசாரஞ் செய்வது தற்கால ஒழுக்கம். "எல். ஜி. பெருங்காயம்" ஒரு ஸ்தம்பத்தில், "சாஸ்திரி அண்டு சாஸ்திரி, நகை வியாபாரிகள்" மற்றொரு ஸ்தம்பத்தில், "பாபாலால் வைரங்கள்" ஒரு மூலையில், "கேவல்ராம் ஸில்குகள்" மற்றொருமூலையில்—இவைபோலுள்ள அட்வர்டிஸ்மெண்டிகள் சங்கீதத்தைக் கேட்கவிடாமல் நம்முடைய மனதைக் கலைக்கும்படியாக வைக்கப்படுவது நவீன நாகரிகம். ஆனால் சங்கீத ஸபைகள் பணத்தை வசூல் செய்வதற்கல்லவோ தற்காலத்தில் ஏற்பட்டுள்ளன. எந்தெந்த விதமாகவெல்லாம் வசூலை அதிகரிக்கலாமோ அந்தந்த மார்க்கத்தை அனுசரிப்பது சபைகளின் உத்தியோகஸ்தர்களுடைய முக்கியக் கருத்து. வித்துவானை நியமிப்பதும் பக்கவாத்தியக்காரரைத் தேர்ந்தெடுப்பதும், கேட் கலெக்ஷன் ஒன்றே கருத்தாகச் செய்வது தற்காலத்து அனுசரணை. சங்கீதம் வளர்ந்தாலென்ன, ஜனங்களின் சுரணை கெட்டாலென்ன, ஆகக் கூடி, ரூபாய், அணு, பைஸா திரண்டுவந்தால் போதுமல்லவா?

மேற்கூறிய கவர்மெண்டு ஹவுஸ் கச்சேரிக்குப்பிறகு ஒரு விநோதமான ஸம்பவம் நடந்ததைப்பற்றி எழுத மறந்துவிட்டேன். அதற்கு அடுத்த நாள் அம்மாஞ்சிக்கு நண்பரான ஒரு வெள்ளைக்காரர் அவரிடம்வந்து "நீர் அந்த எம். எஸ். கச்சேரிக்கு வரவில்லையே" என்று கேட்டார். அதற்கு அம்மாஞ்சி பதில் சொல்லாமல் வெற்றிலைப் பாக்கை வாயில் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்குத் தள்ளிவிட்டுச் சும்மா இருந்துவிட்டான். அதற்குள் நான்—

"சங்கித வித்வான்கள் அநேகம்பேர் வந்திருந்தார்களோ" என்று கேட்டேன். அதற்குத் துரையவர்கள் "அது எனக்குத் தெரியாது. யாரோ ஒருவர் மாத்திரம் பிரபலமான பேர் வழி வந்ததைக்கண்டேன். அவர் பெயரென்ன? இதோ சொல்கிறேன் ஆம்! செத்தை வெம்பநாதய்யர்."

நான் கொல்லென்று சிரிக்க, அம்மாஞ்சி அவரைப் பார்த்து "நீர் சொல்வது கொஞ்சம் நடைபேதமாக இருக்கிறது.—செம்பை வைத்தியநாதய்யரைச் செத்தை வெம்பநாதய்யர் ஆக்கிவிட்டீர்" என்றான். இதைக் கேட்டு அவரும் சிரித்துவிட்டுப் போய்விட்டார்.

இதற்கப்புறம் அம்மாஞ்சி சொன்னதாவது "நம்முடைய மடிஸஞ்சிகள் வெள்ளைக்காரர் நடுவில் போனால் இப்படித்தான் ஆபத்து நேரிடும்—செத்தை வெம்பநாதய்யராம்! இனி மேல் அடுக்கவேண்டியதுதான்! மஹாநாதபுரம் விஸ்வராஜய்யர், அரியானுஜ ராமக்குடி அய்யங்கார், முப்ரி சிரிய மணியய்யர், பாலமணி மாக்காடய்யர், கும்ப மாணிக்க ராஜகோணம் பிள்ளை, செம்ம வாஸ சீனங்குடியய்யர், இப்படியெல்லாம் பெயர் பதிந்துவிடும். சங்கீதத்தில்தான் ச்ருதி பேதம் நடைபேதம் விபரீதமாகப் பழக்கத்தில் வந்துவிட்டதென்றால் வித்வான்கள் பெயர்களிலும் வந்துவிடும்!"


மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

# ஸ்ரீதியாகப்ரம்ம மஹோத்ஸவ ஸபை

(ஸ்ரீ தியாகப்ரம்ம உத்ஸவ நிதிக்காக)

## தஞ்சை டவர் டாக்கீஸ் ஹால்
## &
## கும்பகோணம் ராஜா டாக்கீஸ் ஹால்

**10-12-1944** முதல் **24-12-1944** முடிய

# ஸங்கீத விழா

அடியில்கண்ட வித்வான்களின் கச்சேரிகள் நடைபெறும்

ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்
மஹாராஜபுரம் விசுவநாதய்யர்
செம்பை வைத்தியநாத பாகவதர்
அண்ணாஸாமி பாகவதர்
செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர்
சித்தூர் சுப்ரமணிய பிள்ளை
மன்னார்குடி ராஜகோபால பிள்ளை
திருவீழிமிழலை சகோதரர்கள்
வீருசாமி பிள்ளை
மதுரை மணி அய்யர்
ஜி. என். பாலசுப்ரமணியம்
மாஸ்டர் மகாலிங்கம்
ஸ்ரீமதி *D. K.* பட்டம்மாள்
,, *N. C.* வஸந்தகோகிலம்
,, யோகம் & மங்களம்
பரதநாட்டியம்

ஸ்ரீ சௌடையா
ராஜமாணிக்கம் பிள்ளை
வெங்கடஸாமி நாயுடு
பாபா வெங்கடராமய்யர்
வைத்தியநாதய்யர்
மணி அய்யர்
பழனி சுப்ரமணிய பிள்ளை
கோதண்டராமய்யர்
புதுக்கோட்டை சுவாமிநாத பிள்ளை
ராம்தாஸ் ராவ்
சிவவடிவேல் பிள்ளை
கோவிந்தராஜ பிள்ளை
முத்து அய்யர்
சுந்தரராஜ அய்யங்கார்
திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி [பிள்ளை
விச்வநாதய்யர்
நடேச பிள்ளை

**18—11—44உக்குள் புரோகிராம் வெளியிடப்படும்**

ஸீஸன் டிக்கட்டு ரூ. **50, 30, 20, 10**

விபரங்களுக்கு:— 
காவேரி கலர் பிரஸ், கும்பகோணம்.
"ஆனந்தா லாட்ஜ்" தஞ்சாவூர்.
டி. எஸ். ஆர். கம்பெனி, கும்பகோணம்.

ஸ்ரீ முசிரி சுப்பிரமணிய அய்யர்;
ஸ்ரீ திருவீழிமிழலை சுப்ரமணிய பிள்ளை;
காரியதரிசிகள்.

# மேட்டூரில் தயாரிக்கப்படும் :: :: செயற்கைப் பொருள்கள்

ஆர். கே. விசுவநாதன்

தற்காலம் உலகெங்கும் பொருளாதார நிலைமையை யந்திரங்களே ஆளுகின்றன. யந்திரங்களை எல்லாத் துறைகளிலும் உபயோகிக்கும் தேசங்களே அதிக நாகரிகமுள்ள தேசங்கள் என்றுகூட கருதப்படுகின்றன. அவைகளை ஓட்டுவதற்கு வேண்டிய நிலக்கரி, எண்ணெய், மின்சாரம் இவை மலிந்து கிடக்கும் நாடுகளே முன்னணியில் நிற்கின்றன. இத்துடன் வியாபாரப் பண்டங்கள் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்குமானால் அந்நாடுகளின் பொருளாதாரச்செல்வம் வெகுசீக்கிரத்தில் உயர்வதற்கு இடமிருக்கிறது. இந்தியாவின் இயற்கைச் செல்வத்தை அளவிடமுடியாது. எல்லாவித மூலப்பொருள்களும் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. மின்சார உற்பத்திக்கு வேண்டிய நீர்ச்சக்தி எல்லா இடங்களிலும் வேண்டிய அளவுக்கு அதிகமாகவே கிடைக்கின்றது. மேலும் நாட்டின் சீதோஷ்ண நிலை எல்லாவித செயற்கைப்பொருள்களையும் தயாரிப்பதற்கு உபகாரமாயிருக்கின்றது. இவ்வளவு சௌகரியம் பெற்றிருந்தும் சிற்சில இடங்களில்தான் செயற்கைப்பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் வறுமையைப் போக்குவதற்கு ஆங்காங்கே தொழிற்சாலைகள் அனேகவற்றை ஏற்படுத்தி, பலவித செயற்கைப்பொருள்களைத் தயார் செய்யவேண்டும்.

மேட்டூர் அணையைக்கட்டி, மின்சார உற்பத்திச்சாலையை ஏற்படுத்தியவுடன் சென்னை அரசாங்கத்தார் முதலாளிகளுக்கென்று ஒரு அறிக்கையை விடுத்தார்கள். அதில் மேட்டூருக்குச் சமீபத்தில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களின் விவரங்களையும், மேட்டூரில் உள்ள நீர் வசதி, இடவசதி இவற்றையும், மின்சார சக்தி குறைந்த விலைக்குக் கிடைப்பதையும் கண்டு, அங்கே தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் லாபகரமாய் இருக்கும் என்பதை எடுத்துக்கூறியிருந்தார்கள். முக்கியமாக அங்கே நூல் நூற்பதற்கும் நெய்வதற்கும், ஸோடாக்காரம் (Caustic Soda), சலவைச்சூர்ணம் (Bleaching Powder) போன்ற இரசாயனப் பொருள்கள் செய்வதற்கும் ஆலைகள் ஏற்படுத்துமாறு சொல்லியிருந்தார்கள். இதன் விளைவாக "மேட்டூர் கெமிகல்ஸ்" என்ற தொழிற்சாலையும் 'மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ்' என்ற பஞ்சாலையும் உடனே ஏற்பட்டன. சமீபத்தில் சந்தன எண்ணெய் தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலையும், காகிதம் செய்வதற்கு ஒரு தொழிற்சாலையும் ஏற்பட்டிருக்கின்றன. இத்தொழிற்சாலைகளில் தயாராகும் செயற்கைப் பொருள்களைப் பற்றியும், அவை தயாரிக்கப்படும் முறைகளைப்பற்றியும் சிறிது கூறுவோம்.

"மேட்டூர் கெமிகல்ஸ்" என்னும் தொழிற்சாலையை லக்ஷக்கணக்கான ரூபாய் செலவிட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதிலுள்ள யந்திரங்களை ஓட்டுவதற்கு மேட்டூர் மின்சாரநிலையத்திலிருந்து "பதினோராயிரம் வோல்ட் (11, 000 Volt) மின்மட்ட வேற்றுமை (Electro-motive force) யுள்ள மாறு மின்னோட்ட அருவியைப் (Alternating Current) பெற்று, தொழிற்சாலையில் பிரத்தியேகமாகவுள்ள ஒரு கட்டிடத்தில் இதன் மட்ட வேற்றுமையை நானூற்று நாற்பது ஓல்ட்டாக (440 Volt)க் குறைத்துக்கொண்டு, அருவியை நேர்மின்னருவியாக (Direct current) மாற்றிக்கொள்ளுகிறார்கள். காவேரி ஆற்றிலிருந்து நீரைக் குழாய்களின்மூலமாகக் கொண்டுவந்து சுத்திசெய்தபின் உபயோகிக்கின்றார்கள். இங்குத் தயாரிக்கப்படும் செயற்கைப் பொருள்களில் முக்கியமானவை ஸோடாக்காரம் (Caustic Soda) சலவைச் சூரணம் (Bleaching Powder), நீரக-ஹரிதகக் காடி (Hydro chloric acid), ஹரிதக திரவம் (Liquid chloric) ஆகும். இவற்றைத் தவிர "வனஸ்பதி" என்று கூறப்படும் ஒருவித நெய்யையும், "காவேரி" மார்க்கு ஸோப்பையும் தயாரிக்கின்றார்கள்.

முதலில் ஸோடாக்காரம் தயாரிக்கப்படும் விதத்தைக் கவனிப்போம். வளாவிய காடி (Dilute acid) அல்லது உலோக உப்புக் கரைநீர் வழியாக ஒரு நேர்மின்னருவியைச் செலுத்தினால், அத்திரவம் பிரிந்துவிடும். இந்நிகழ்ச்சியை மின்னாட்டம் (Electrolysis) என்று கூறுவார்கள். உதாரணமாக நாம் வீடுகளில் உபயோகிக்கும் உப்பை

எடுத்து நீரில் கரைத்து, அத்திரவத்தினுள் இரண்டு உலோகத் தகடுகளை வைத்து, அவற்றின்மூலமாக ஒரு மின் அருவியைச் செலுத்தினல், தகடுகளிலிருந்து வாயுக்குமிழிகள் கொப்புளித்து வருவதைக் காணலாம். இவற்றைச் சோதனை செய்து ஒரு தகட்டின் அருகே வெளிவந்த வாயு நீரகம் (Hydrogen) என்றும், மற்றொரு தகட்டின் அருகே வெளிவந்த வாயு ஹரிதகம் (Chlorine) என்றும் காட்டலாம். பாத்திரத்தில் எஞ்சி நிற்கும் திரவம் ஸோடாக்காரமும் உப்பும் சேர்ந்த கலவையாய் இருக்கும். இக்கலவையைக் காய்ச்சி உப்பையும் ஸோடாக்காரத்தையும் தனித்தனியே பிரித்து விடலாம். எனவே சாதாரண உப்புக் கரை நீரிலிருந்து மின்னூட்டத்தின் உதவியால் நீரகம், ஹரிதகம், ஸோடாக்காரம் ஆகிய மூன்று பொருள்களையும் பெறலாம் என்று அறியலாம். மேட்டூர் இரசாயனத் தொழிற் சாலையில் இம்முறையைத்தான் உபயோகிக்கின்றார்கள். இவர்கள் வேதாரண்யத்திலிருந்து வரி இல்லாமல், வேண்டிய உப்பைத் தருவித்துக் கொள்ளுகிறார்கள். ஓர் அறையில் உள்ள பெரிய தொட்டிகளில் உப்பை நீரில் கரைத்து, அத்துடன் சில இரசாயன திரவங்களைச் சேர்த்து, உப்பு நீரைச் சுத்தி செய்கின்றார்கள். பின்னர் குழாய்களின் மூலமாகச் சுத்தி செய் உப்பு நீரை மின்னூட்டம் நடைபெறுவதற்கான பாத்திரங்களுக்குள் செலுத்துகின்றார்கள். இப்பாத்திரங்களின் அமைப்பைச் சிறிது கவனிப்போம். ஒவ்வொன்றும் நேராக வடிவு கொண்டிருக்கிறது. இரும்பினால் ஆக்கப்பட்டது. இதன் அடிப்பாகத்திற்குச் சற்று மேலே ஒரு வலை (Grid) பொருத்தப்பட்டிருக்கிறது. இவ்வலையின் மீது பேரியம் ஸல்பேட், கால்ஷியம் ஸல்பேட் என்ற இரசாயனப் பொருள்கள் கலந்ததொரு சாந்து பூசப்பட்டிருக்கிறது. எனவே பாத்திரம் இவ்வடைப்பினால் இரண்டுபாகமாகப் பிரிக்கப்படும் என்பதை உணரலாம். அடைப்பின் மேற்புறம் உப்புநீர் நிற்கும். அதனுள் எழுதுகரிக் (Graphite) குச்சிகளை முழுக்கி வைத்திருக்கின்றார்கள். இக்குச்சிகளின் சேர்க்கை ஒரு துருவமாகும். வலை அடைப்பு மற்றொரு துருவமாகும். பாத்திரத்திலுள்ள உப்பு நீர் வலை அடைப்பின் மீதுள்ள சாந்தின் வழியாகக் கசிந்து கீழ்ப்பாகத்துக்கு வரும். துருவங்களின் மூலமாக மின்சாரத்தை அனுப்பியவுடன் உப்பு நீரில் மின்னூட்ட நிகழ்ச்சி ஏற்படுகிறது. நீரகம், ஹரிதகம் இரண்டும் வெளிப்படுகின்றன. இவையே பாத்திரத்தின் அமைப்பும் அதில் நிகழும் சம்பவமும் ஆகும். இப்பாத்திரங்கள் பலவற்றை ஒன்றோடொன்று சேர்த்து வைத்திருக்கின்றார்கள். குறைத் துருவங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாத்திரங்களின்மேல் அறைகளெல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரியாகவே கீழ்ப்பாகங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாப் பாத்திரங்களிலும் ஒரே அளவுக்கு நிற்குமாறு உப்பு நீர் செலுத்தப்படுகிறது. பின்னர் துருவங்களின் மூலமாக மின்சாரத்தைச் செலுத்துகின்றார்கள். மின்னூட்டம் உண்டாகிறது. வெளிவரும் நீரகத்தையும், ஹரிதகத்தையும் குழாய்களின் மூலமாக வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். பாத்திரங்களின் அடியிலுள்ள கலவை நீரை வேறொரு இடத்துக்குக் கொண்டுபோகின்றார்கள். கலவை நீரைக் காய்ச்சி ஸோடாக்காரமாகவும், உப்பாகவும் பிரித்துவிடுகிறார்கள். பிரிந்துவந்த உப்பை மறுபடியும் உபயோகிக்கின்றார்கள். ஸோடாக்கார நீரை வேறொரு அறைக்குக் கொண்டுபோய்க் காய்ச்சி, குளிர்வித்து, கட்டிப்பொருளாக மாற்றிவிடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் நாலரை டன் அளவு இச்செயற்கைப்பொருளைத் தயாரிக்கிறார்கள். இப்பொருள், சலவைச்சாலைகளிலும்,


# எவரெஸ்டு & அமர்ஜோதி

**பேஸ் பவுடர், சந்தனுதி, அரைக்—கீரைவிதை, பிருங்காமலக—தைலம் வகையராக்களை வாங்கி உபயோகியுங்கள்**

தயாரிப்பவர்கள்:

**வி. ஆர். அண் கோ.**
கும்பகோணம்

ஏஜண்ட்ஸ்:

**வாஸன் & கோ.**
6656/5 கிங்ஸ்வே :: செகந்தராபாத்

சாயமிடுஞ்சாலைகளிலும், கெட்டிச் சவுக்காரங்கள் காகிதக்கூழ் செயற்கைப்பட்டு முதலிய பொருள்கள் செய்யுமிடங்களிலும், அதிகமாக உபயோகப்பட்டு வருகின்றது.

அடுத்தபடியாக சலவைச்சூரணம் தயாராகும் விதத்தைக் கவனிப்போம். ஒவ்வொரு நாளும் எட்டு டன் எடை அளவு இச்செயற்கைப்பொருளைத் தயார் செய்கின்றார்கள். இதைத் தயாரிப்பதற்கு முதலில் சுண்ணாம்புக்கல், கிளிஞ்சில் இவற்றை நன்றாகச்சூடு செய்து, வெள்ளை நிறமுள்ள சுண்ணாம்புப் பொடியைப் பெறுகிறார்கள். இப்பொடியுடன் நீரைச்சேர்த்து நீற்றின சுண்ணாம்பாக மாற்றுகிறார்கள். இப்பொடியுடன் நீர் கலக்கும்போது வெளிப்படும் உஷ்ணத்தைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார்கள். இவ்வாறு தயாரித்த நீற்றின சுண்ணாம்புப் பொடியைப் பல அறைகள் உள்ள ஒரு பெரிய கல் கோபுரத்தினுள் (Tower) அனுப்புகிறார்கள். முன்னர் மின்னாட்டத்தினால் பெற்ற ஹரிதக வாயுவையும் இக்கோபுரத்தினுள் செலுத்துகிறார்கள். சுண்ணாம்பு வெகு ஆவலுடன் ஹரிதக வாயுவுடன் கலக்கிறது. சுண்ணாம்பைக் கிளறிக்கொண்டே இருப்பதற்குத் தக்க துடுப்புகளைக் கோபுரத்தினுள் அமைத்திருக்கின்றார்கள். இச்சேர்க்கை முற்றிலும் ஆவதற்குச் சாதாரணமாகப் பன்னிரண்டு மணி நேரம் பிடிக்கின்றதாம். இங்ஙனம் தயாரித்த பொருள் மிருதுவாயும், வெண்ணிறமாகவும் இருக்கும். இதில் ஹரிதகவாயுவின் மணம் வீசும். இப்பொருள் நூல், துணி காகிதக்கூழ் முதலியவற்றை வெளுக்க உபயோகப்படுகின்றது. தேர் திருவிழா நடக்கும் காலங்களில் டவுன்களில் தெருவுக்குத்தெரு சுகாதாரத்திற்காக முனிசிபல் சிப்பந்திகள் இத்தூளைத் தூவுவார்கள். இதிலிருக்கும் ஹரிதக வாயு தொத்து வியாதிகளுக்குக் காரணமாயுள்ள கிருமிகளை நாசம் செய்துவிடும். தண்ணீரைச் சுத்தி செய்வதற்கும் கிணறுகளில் இதைப்போடுவார்கள்.

மேட்டூரில் தயாரிக்கப்படும் மற்றொரு வியாபாரப் பொருள் ஹரிதக வாயுவாகும். இது எவ்வாறு பெறப்படுகிறது என்று முன்பு பார்த்தோம். இதைத் திரவமாக்கி எஃகுக் குழாய்களில் அடைக்கின்றார்கள். சலவைச்சூரணத்தை உபயோகிக்கும் இடங்களில் ஹரிதக திரவத்தைத் தற்காலம் உபயோகித்து வருவதால் இச்செயற்கைப் பொருளும் அதிகமாக வியாபாரமாகின்றது. பிரதி தினம் கால் டன் எடை அளவு ஹரிதக திரவத்தைத்தயார் செய்கின்றார்கள்.

சலவைச் சூரணத்திற்கும், ஹரிதக திரவத்தைத் தயார் செய்வதற்கும் செலவழிக்கப்பட்டு மிஞ்சிய ஹரிதகவாயுவை நீரக—ஹரிதகக்காடி (Hydro chloric acid) செய்வதற்கு உபயோகிக்கின்றார்கள். மின்னாட்டத்தினால் கிடைத்த நீரக வாயுவையும் ஹரிதக வாயுவையும் சேர்த்துக் காடியை முதலில் வாயுநிலையில் அடைக்கின்றார்கள். பின்னர் அதை நீருடன் கலந்து அத்திரவத்தைப் புட்டிகளில் அடைத்து, வியாபாரத்துக்கு வெளியே அனுப்புகின்றார்கள். இக்காடி சாயம், இடும் முறைகளிலும், துணியிலே கறை முதலியவைகளை அச்சிடுவதிலும் உபயோகப்படுகின்றது.

இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் மற்றொரு முக்கியமான பொருள் "வனஸ்பதி" என்ற நெய் ஆகும். தென்னிந்தியாவில் எண்ணெய் வித்துக்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. சமீபகாலம் வரை இவற்றை அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தோம். மேனாட்டார்கள் இவற்றைக்கொண்டு ஸோப்புக்கள், ஸெண்ட் முதலிய சாமான்களைத் தயாரித்து அவற்றை நம்மிடையே வியாபாரத்துக்கு அனுப்புவார்கள், இந்நிலைமை தற்காலம் ஓரளவுக்கு மாறியிருக்கிறது. இவ்வெண்ணெய் வித்துக்களைக்கொண்டு இந்தியாவிலேயே செயற்கைப்பொருள்கள் தயாராகி வருகின்றன. மேட்டூர் தொழிற்சாலையில் தென்னாற்காடு ஜில்லாவில் ஏராளமாய்க் கிடைக்கும் வேர்க்கடலை பயன்பட்டு வருகின்றது. இதைக்கொண்டு "வனஸ்பதி"யையும் "காவேரி மார்க்கு" ஸோப்பையும் தயாரிக்கின்றார்கள். மின்சாரத்தின் உதவியைக்கொண்டு வேர்க்கடலையை நசுக்கி, முதலில் எண்ணெயைப் பெறுகின்றார்கள். பின்னர் இதை நீருடன் கலந்து, சில இரசாயனப் பொருள்களையும் சேர்த்துச் சுத்தி செய்கின்றார்கள். சுத்தமான எண்ணெயுடன் நீரக வாயுவைச் சேர்க்கின்றார்கள். இதனால் சாப்பிடக் கூடாத நிலையிலிருந்த எண்ணெய் சாப்பிடக்கூடிய நெய்ச்சத்தாக மாற்றப்படுகின்றது. இதைக் குளிரவைத்து டப்பாக்களில் அடைக்கின்றார்கள். பக்ஷணங்கள் தயாரிப்பதற்குத் தற்காலம் எல்லா வீடுகளிலும் இதையே பெரும்பாலும் உபயோகித்துவருகின்றார்கள். ஒவ்வொருநாளும் பத்து டன் எடையளவு "வனஸ்பதி" தயாராகி வருகின்றது. இவை போன்ற தொழிற்சாலைகள் இந்தியாவின் பல இடங்களில் ஏற்பட்டு, செயற்கைப் பொருள்கள் அநேகம் செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் வறுமைப் பிணியை விரட்டமுடியும்.

# புத்தக விமர்சனம்

1 மக்கள் மலர்ச்சி-குமுதினி எழுதியது-விலை ரூ 1-0-0

2. நாடோடி இலக்கியம்—கி. வா. ஜகந்நாதன் எழுதியது—விலை ரூ 2—0—0

3. புயலும் படகும்—காண்டேகர் எழுதி, கா. ஸ்ரீ. ஸ்ரீ மொழிபெயர்த்தது—விலை ரூ 2—8—0.

4. காஞ்சனை—'புதுமைப் பித்தன்' எழுதிய சிறுகதைகள்—விலை ரூ 2—0—0

5. மீண்டும் வாழ்ந்தால் .....? மகாகனம் வ. ச. ஸ்ரீநிவாச சாஸ்திரியாரின் கட்டுரைகள்—விலை ரூ 2—0—0

6. ஸஞ்சீவினி "ஸோபான்" எழுதிய குஜராத்தி நாவல். அ. கி. ஜயராமன் மொழிபெயர்த்தது. விலை ரூ 3-8-0

## கலைமகள் காரியாலயப் பிரசுரங்கள்.

படிக்கத் தெரிந்த பெண்கள் ஒவ்வொருவரும் படித்துப் பார்க்கவேண்டிய புத்தகம் "மக்கள் மலர்ச்சி". குழந்தையை வளர்க்கவேண்டிய முறையும் தாயின் கடமையும் அவள் தனி உரிமையும் விசதமாக விளக்கப்பட்டுள்ளன. உபதேச முறையில் அமையாமல் கதை சொல்லும் முறையில் இனிய நடையில் நகைச்சுவை கலந்து எழுதப்பட்டிருப்பதால் பல தவறான பழக்கங்களையும், அரைப் படிப்பு அனர்த்தங்களையும் ஒழிப்பதற்கு இப்புத்தகம் பெரிதும் பயன்படலாம்.

உழைப்பாளிகள் தங்கள் உடல்வலி தோன்றாமல் இருக்க இயற்கையோடு இணைந்த இசையில் இன்னமுதம் பருகுவார்கள். பாடுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் ஆனந்தம். இவைகளை அனுபவிக்க அறியாதவன் 'நாக கம் படைத்த புத்தக பண்டிதன்' அவனுக்கு நெஞ்சு என்று ஒன்று இருக்கிறதோ? இருந்தால் "ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும் நெல் இடிக்கும் கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும், சுண்ணம் இடிப்பார் தம் சுவை மிகுந்த பண்களிலும் பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும் வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாம் ஒலிக்கக் கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்" நெஞ்சைப் பறிகொடுப்பான் என்பது நிச்சயம். புத்தக ரூபத்தில் அச்சு எழுத்துக்களில் கண்நிறையக் கண்டால்தான் அவைகளைச் செவிக்குள் செல்ல அனுமதிக்கப்படலாம் என்றிருப்பவர்களுக்காக ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், சிலவற்றைப் பொறுக்கி "நாடோடி இலக்கியம்" என்னும் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். இன்னும் வெளியிட எவ்வளவோ பாட்டுக்களைச் சேகரித்திருக்கிறார். பாடல்களை அப்படியே வெளியிடாமல் நிலைக்களங்கள் அமைத்து அவைகளில் பொருத்திக் காட்டுகிறார். இவைகளும் இலக்கியம் தான் என்றும் நிஷ்கர்ஷிக்கிறார். 'தேசிங்குராஜன்,'' அல்லிஅரசாணி' முதலியபாடல்கள்கூட மறைந்துபோகும் இக்காலத்தில் மறுபடியும் உயிர் அளிக்க வந்திருக்கும் ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதனது முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

மோகன முதற்காதலின் தன்மையை விவரிப்பது 'புயலும் படகும்?'. மன்மதன் திருவிளையாடல்களில் மன்னிமகிழ்பவர் ஸ்ரீகாண்டேகர். அவைகளை வெறும் காதல் கதைகளாகவே வெளிவிட்டுவிடாமல் சிறந்த இலக்கியமாகவும் சித்திரிக்க வல்லவர். புதுப்புது முறையில் புகுபவர். இப் புத்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு தனிபபட்ட சிறுகதை. அப்படிப்பட்ட ஏழு அத்யாயமும் சேர்ந்து ஒரே நவீனமாக அமைந்திருப்பது இதில் புதுமை.

உலக இயல்பையும் நடையையும் தனக்குப்பிடித்த கோணத்தினின்று பார்ப்பவன் குறும்பன். குறும்பனின் கூற்றுக்களில் குறை கூறுவாரும் உண்டா? குறும்பு குறைவாக இருந்தால்தான் குற்றம். விஷயம் தெரிந்தவர் ஒருவர் செய்யும் குறும்புகளைக் காணவேண்டுமானால் 'புதுமைப் பித்தன்' எழுதியுள்ள "காஞ்சனை" முதலிய சிறுகதைகளைப் படிக்கலாம். படித்த பின்னர் 'இவைகள் பழையவைகள் தானே' என்று எண்ணுவார்களானால், ஆமாம், 'கலைமகளி'ல் வெளிவந்தவைகள்தான்' என்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

மகாகனம் வ. ச. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்களின் கட்டுரைகளின் தொகுதியான "மீண்டும் வாழ்ந்தால்" என்னும் புத்தகம் அன்னார் தமிழிலும் எழுதவல்லார் என்பதை நிரூபிக்கிறது. நடை நன்றாகவே இருக்கிறது. விஷயம் இன்னும் சற்று நன்றாக இருக்கலாம். சாஸ்திரிகளிடமிருந்து எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு. முதிர்ந்த அனுபவம் இளம் எழுத்துக்குள் ஒடுங்கிவிடாது.

ஆர்வத்துடன் ஆரம்பித்துப் பிறகு அயர்ந்து சோரும் இளைஞர்களுக்கு ஒரு பற்றுசு வேண்டுமானால் **'ஸஞ்சீவினி'யைப்** படிக்கவேண்டும். இன்றும் என்றும் இந்திய யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் இலக்ஷியவாழ்க்கையைப் புகட்டும் உயர்ந்த நவீனம். குஜராத்தியில் தோன்றியபோதிலும் அ. கி. ஜயராமன் அவர்களால் தமிழ்நாட்டில் சொந்தமாக்கப்பட்டுவிட்டது.

## சிதைந்த கூடு.

மஹாகவி ரவீந்திரநாத் டாகுர் எழுதியது. ஸ்ரீ த. நா. குமாரசுவாமி மொழிபெயர்ப்பு. மங்களநூலகம், நுங்கம்பாக்கம். விலை ரூ 1—8—0.

ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய ஐயரைத் தமிழ்நாடு அறியும். அவர் நிர்வாக ஆசிரியராக இருந்து நடத்தும் மங்கள நூலகம் மதிப்பிற்குரிய பல நூல்களை வெளியிடும் என்பது திண்ணம். அடுத்துவரும் நூல்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

பிரஸ்தாப நூல் "சிதைந்தகூடு." திறம்படவே மொழிபெயர்க்கப்பட்டிருந்தபோதிலும் வங்காளியர்கள் பெரிதும் ரஸிக்கக்கூடியது. இதில் மனோதத்வ ஆராய்ச்சி அதிசயமாகவே கையாளப்பட்டிருக்கிறது. ஆயினும், மதனி மைத்துனனுடன் பழகும்மாதிரி நமக்குப் பிடிக்காது.

## மின்னும் நக்ஷத்திரம்

எழுதியது 'சிரஞ்சீவி'. கமலா பிரசுராலயம் விலை ரூ 2-0-0
பிராட்வே சென்னை.

கதாசிரியனையே கதாபாத்திரமாகக் கொண்ட நவீனம். எல்லாவிதத்திலும் நவீனம். "இதன் மதிப்பை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறோம்" என்று பிரசுராலயத்தாரும் எழுதியவரும், நம்மை நம்பி வெளிவந்திருக்கும் பொழுது, ஒரு 'பிரதி'யை வாங்கித்தான் வாசிப்போமே!

**தினமணி வெளியீடுகள்:**—பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

(1) ரவீந்திரநாத் டாகுர்—வாழ்க்கையும் கவிதையும் விலை அணா 0—8—0 தான்.

(2) சிறுகதை மஞ்சரி—'பாலையா' எழுதியவை. திரு: எஸ். வையாபுரி பிள்ளை அவர்கள் எழுதிய முன்னுரை உடன் கூடியது. விலை ரூ 1—0—0

(3) போலந்து—பின்லாந்து, ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி எழுதியது, விலை அணா 0—12—0.

காவ்யம் என்றால் மருண்டு ஓடுபவர்கள் பலர். காவ்யம் சர்ச்சைக்குப் பாத்திரமல்ல என்ற கொள்கை சிலருக்கு. ஒரு புஷ்பம் வாஸனை உள்ளதாக இருக்கிறது என்றால் அது ஏன்

வாஸிக்கிறது என்று கேட்பது முறையல்ல என்றும் ஒரு வாதம். இவைகள் யாவும் ஆதாரமற்றவை என்று காண்பிக்கவே அமைந்ததுபோல் இருக்கிறது ஸ்ரீ K. சந்திரசேகரன் எழுதியிருக்கும் ''ரவீந்திரநாத் டாகுர் வாழக்கையும் கவிதையும்'' என்னும் புத்தகம். உபநிஷத்தில் உதித்து, காளிதாஸ் வால்மீகிகளில் திளைத்து ஆங்கில வங்க காவ்யங்களின் வழியே மிதந்து, சங்கீத ரூபமாகப் பிரவஹிக்கும் தாகூரின் இன்னிசையைத் தாமும் சுவைத்து நாமும் சுவைக்குமாறு செய்கிறார் ஆசிரியர்.

அவ்வளவு சிறப்பாகத் தோற்றவில்லை ''சிறுகதை மஞ்சரி''. சிறுகதை எழுதுவது என்பது எளிதான காரியமல்ல என முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருப்பது இக்கதைகளையும் குறித்தா? தறபோது நடந்துவரும் மஹா யுத்தம் போலந்து காரணமாகவே முற்றி எழுந்தது. வெற்றிகள் இவ்வளவு அடைந்த பின்னும் போலந்து பிரச்னை தீரவில்லை. ஏன்? விடை வேண்டுமானல் ஸ்ரீமான் த. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதியுள்ள 'போலந்து பின்லந்து' என்னும் புத்தகத்தைப் படிக்கலாம். அதன் முன்னுரையில் மகாகனம் வி. எஸ் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் கூறியிருப்பது போல் ஓர் தேசத்தின் கஷ்டத்தையும் அதன் போக்கையும் அறிய வேண்டுமானல் அந்நாட்டின் பூர்வ சரித்திரத்தையும் மக்களின் குணதிசயங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். இப்புத்தகத்தில் வரும் ஊர் பெயர்களை இந்நூலாசிரியர் கூடியவரையில் அந்தந்த நாட்டார் உச்சரிக்கும் உச்சரிப்பின்படியே (எழுத்துப் போக்குப்படியல்ல). எழுத முயன்றிருப்பது பாராட்டற்குரியது.

**அன்னை கஸ்தூரி—ஸ்ரீ எம். எஸ். ஸுப்பிரமணிய ஐயர் இயற்றியது. விலை அணு 0—12—0 அல்லயன்ஸ் பிரசுரம். இந்தியத்தாயின் சரிதை. உயர்ந்த விஷயம். அதற்கு ஏற்றவாறு உன்னதமான நடை.**

## இந்தியக் கைத்தொழில் முன்னேற்றம்—

ஆசிரியர்: S. இராமசந்திர ஐயர் M. A. பங்களூர், இரண்டாம் பதிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்க்கலை அவையத்தாரால் இண்டர்மீடியட்பரிக்ஷைக்குப் பாடமாக ஏற்பட்டதாகத் தெரியும். இப்புத்தகம் ஏனையமக்களுக்கும் பயன்படக்'கூடியதே. பத்திரிகைகளில் தினம் ஒரு பொருளாதாரத் திட்டம் வெளிவருவதைப் பார்க்கிறோம். வியவசாயமே முக்கியத் தொழிலாக உள்ள இந்த நாட்டுக்கு எத்தகைய பெருங்கைந் தொழில்களை தெரிந்துகொள்ள அமைப்பதும் தீங்கு செய்யாது என்று இப்புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

## நாட்டியக்கலை விளக்கம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியது. அன்பு நிலையப் பிரசுரம். விலை அணு 9.

அபிநய பாஷையை அறியவரும்புவோர் யாவரும் வாசிக்கவேண்டியது. பிறகுதான் இவ்வாசிரியர் இயற்றிய 'நடனஞ்சலி' என்னும்பாடல்மயமானபுத்தகம் புரியுமாம்.

## முதலாளிகள் திட்டம்

தினசரி வெளியீடு—1. விற்பனையாளர்:— சக்தி காரியாலயம் விலை|அணு 0—4—0.

பம்பாய்த்திட்டம் என்னும் தொழிற்சாலை' முதலாளி'களால் வகுக்கப்பட்ட 15 வருஷ திட்டத்தை இப்புத்தகத்தில் ஸ்ரீ வெ. ராமசாமி அலசி ஆராய்கிறார். மூலத் தொழில்கள் பொது ஜனங்களின் சொத்தாக ஆகாத வரையிலும், உற்பத்தி செய்யப்படும் செல்வம் சரியான முறையிலும் பொதுஜனங்கள் நலத்துக்கு ஏற்றவாறும் விநியோகப்படாத வரையிலும், நிலச்சுவான்தார் முறைதிருத்தி அமைக்கப்படாத வரையிலும், இத்தகைய திட்டங்கள் முதலாளிகளின் லாபத்துக்கு அமையுமே அல்லாது' பொதுமக்களின் வாழ்க்கைத் திறனை உயர்த்த உதவாது என்று செவ்வனே நிரூபிக்கிறார்.

## பில்ஹணன்

டி. கே. எஸ். சகோதரர்கள் வெளியீடு. விலை ரூபாய் இரண்டு.

நல்ல நாடகம். டி. கே. எஸ். சகோதரர்கள் ரஸித்து நடித்துப் பிரகரிப்பதனல் நன்றாகத்தானே இருக்க வேண்டும்! வானெலியின் இசை நாடகமாக முதலில் அமைத்து, திரு M. K. தியாகராஜ பாகவதரே பிரதான நடிகராக இருக்க இசைந்து, திருச்சி ரேடியோ நிலயத்தாரால் பிரதர்சனமும் செய்யப்பட்டது என்றல், கேட்க வரவேண்டும்? எழுதியவரோ A. S. A. சாமி. பி. ஏ. ஹானர்ஸ் (லண்டன்). நாடக உலகிலும் பட உலகிலும் சஞ்சரிப்பவர். பாடல்களோ பாரதி தாஸனது புரட்சிக் கவிகளின் கருத்தில் மதுர பாஸ்கரதாஸால் பாடிப் பொருத்தப்பட்டது. ஒரே அமர்க்களம்தான் அல்லவா! ஆமாம், சப்தப்ரும்மஸாந்நித்யம் பெற்று, தன்வாக் அமிர்தமே தனக்கு இஷ்ட ஸித்தியை ஸாதித்துக்கொடுத்ததாக வடமொழி வல்லுநர் விவரிக்கும் பில்ஹண கவியல்ல இந்நாடக நாயகன். தமிழ் மரபுக்கும் பண்புக்கும் தக்கவாறு உண்மைக்காதல் வழக்கத்தின் இருவினைப் பயனகவும், மக்களின் அபிலாஷைகளுக்குச் செவிசாய்க்கும் மன்னனது மன்னிக்கும் மாண்புக்குச் சான்றாக உயிர்பெற்று மிளிரும் தமிழ்த் தொண்டனகத் திகழ்கிறன் தலைவன். பில்ஹணன் என்ற பெயரைப் புனைந்துகொண்டதால் என்ன பொருத்தக் குறைவு ஏற்பட்டு விடப்போகிறது?.


# கணைச்சூடு

★

இது மிகக் கெட்ட நோய். சிறுவர்களின் வளர்ச்சியைக் குன்றச் செய்கின்றது. அஸ்திக் காங்கை, அஜீர்ணம், மார்வு துடிப்பு, ஆகாரத்தில்வெறுப்பு, நாவரட்சி, வேர்வை, இளைப்பு, இருமல், சோகை, அடிக்கடி ஜல தோஷம், பலஹீனம் முதலிய உபாதைகள் இந்நோயின் குணங்களாகும்.

★

டாக்டர் கொச்சையாவின்

பாலாமிர்த ரசாயனம்

இதற்குக் கைகண்ட மருந்து

★

20 நாள் மருந்து ரூ. 2—4—0

விலாசம்:- Aryan Medical Hall,
100, L. J. Road, BOMBAY 16

STOCKISTS

| H. V. RAO | D. V. SUBRAMANIAM, |
|---|---|
| South Indian Emp. | 381, Nana Peth, |
| Near p. o. Matunga G I P | POONA City. |




# பரிசுத்தத்தின் **சின்னம்**

காவேரி பிராண்ட் மூல ரசாயனப் பொருள் இந்தியக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு அளித்துவரும் உதவி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மூல ரசாயனப் பொருள்களை ஒரே தூய்மையாகவும், தரமாகவும் பிரதி தினமும் டன் கணக்கில் உற்பத்தி செய்வது ஓர் அரிய சாதனையாகும். மேட்டூர் கெமிகல் பேக்டரியில் வேலை பார்க்கும் தேர்ச்சி பெற்ற நிபுணர்களின் பொறுப்பு இது. இந்த வேலையை இவர்கள் ஆழ்ந்த கவனத்துடனும், பொறுமையுடனும், திறமையுடனும் நிறைவேற்றி வருவதன் பயனாய் இன்று இந்தியாவிலுள்ள பெரிய பெரிய கைத்தொழில்களெல்லாம் அனுபவத்தில் தூய்மைக்கும் உயர்வுக்கும் நிகரற்ற காவேரி பிராண்ட் மூல ரசாயனப் பொருள்களின் உதவியை நாடுகின்றன.




**தி மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்**

**மானேஜிங் ஏஜண்டுகள்:-சேஷசாயி பிரதர்ஸ், லிட்., திருச்சிராப்பள்ளி**

FAS/3/18

ஸோல் விற்பனை ஏஜண்டுகள் { தி அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்டிரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
120. அரமனைக்காரத் தெரு — மதராஸ்

# ஆறுதல்

ஆர். எஸ். தேசிகன்

★

பல புயல்களை எதிர்த்துப் போராடிய ஒரு பழைய மரத்தில் கூடுகட்டி இரண்டு பறவைகள் வாழ்கின்றன. அவைகளின் வாழ்வின் காலை போய்விட்டது; நடுப்பகல் மறைந்தது; அந்திப்பொழுது சூழ்ந்து வருகிறது: அதற்கப்பால் கன அந்தகாரந்தான். காலையில் கண்ட கனவுகள், நடுப்பகலில் நுகர்ந்த இன்பங்கள்—இவைகளின் நினைவு—மணம் அந்திப்பொழுதில் எழுகின்றது. நினைவுகளெல்லாம் இன்ப நினைவுகளுமல்ல; துன்ப நினைவுகளுமல்ல: இரண்டும் கலந்துதான் வருகின்றன. தூரத்தில் நின்று கேட்கப்படுகிற பாழ்த்த குரல்கூட செவியில் சங்கீதம்போல ஒலிப்பது இயல்பன்றோ? துன்பங்கள்கூட கால விரிவிலே இன்பங்களாய் மாறிவிடுகின்றன.

பெண் பறவையோடு நினைவு நறவை வெகு காலம் மாந்திக் களித்த ஆண் பறவை செயலற்றுப் படுத்துவிடுகிறது. அதற்குப் பேசக்கூட சக்தி இல்லை. பெண் பறவை அதைச் சுற்றிச் சுற்றி வருகிறது. அதற்குக் கூவக்கூட முடியவில்லை. சொல்லிற் சிக்காத ஒரு சோகம் அதன் முகத்தில் படர்ந்திருக்கிறது. முடிவில் ஆண் பறவை இறக்கிறது. பெண்பறவைக்குக் கரைகாணாத துக்கம். ஆனால் துக்கத்தின் மூடுபனிக்கப்பால்—மரணத்தின் மையிருட்டுக்கப்பால் அதன் கண்கள் விரைகின்றன. அதைப் போய்ச் சேரமுடியும் என்ற ஆறுதல் என்ற நம்பிக்கை — பெண்பறவைக்கு ஏற்படுகிறது. அந்த ஆறுதலில் துக்கத்தின் சுமையை அது தாங்கி நிற்கிறது. இதை அறியாமல் மற்றப் பறவைகள் அனுதாபம் காட்டுகின்றன.

இந்நிலைதான் என் பெற்றோர்களின் நிலையும். அவர்கள் வாழ்வின் யாத்திரை அனேகமாய் முடிவடைந்துவிடுகிறது. யாத்திரை முடிந்து கடைசி துறைமுகத்திற்கு அவர்கள் வந்துவிடுகிறார்கள். மழை, வெய்யில் ஒளி, இருட்டு அமைதி, புயல், இப்படி மாறி மாறி வருகிற வாழ்வின் எத்தனையோ காட்சிகளை அவர்கள் கண்டாய்விட்டது. ஒரு மலையின் சிகரத்தின் மீது நின்றுகொண்டு, கீழே கடல்போல விரிந்துகிடக்கிற தங்கள் நீண்ட வாழ்வை நோக்குகிறார்கள். உலகத்திலே செய்யவேண்டிய காரியங்களெல்லாம் செய்தாய்விட்டன.

இனி நினைவுப் பிரபஞ்சத்தில் யாத்திரை செய்யவேண்டியதுதான்—அந்த யாத்திரைக்கு அவதியுண்டோ!

"அதோ பார்த்தீர்களா, அவர்கள் பேசுவதை" என்று என் மனைவி என்னைக் கேட்பாள்.

"ஆமாம், நாமும் அப்படித்தான் பேசுவோம் கிழவனும் கிழவியுமானால்" என்று பதில் அளித்தேன்.

"அப்படி ஆகவேண்டாமே"

"எல்லாம் நம்முடைய கையிலே இருக்காப்பலே பேசறாய்"

என் மனைவி ஒருவாறு சமாதானம் அடைவாள். ஆனால் கிழவன், கிழவி—இவ்விருவர்களைப்பற்றி வீட்டிற்கு வருகிறவர்கள் ஏதானும் கேள்விகள் கேட்பார்கள்.

"தகப்பனாருக்கு என்ன வயசிருக்கும்?"

"தொண்ணூறு"

"அப்படியா? நீங்கள் பாக்கியம் பண்ணியிருக்கிறீர்கள்"

"அம்மாவுக்கு வயதென்ன?"

"எண்பத்து நாலு"

"அப்படியா! இப்படித் தீர்க்க சுமங்கலியாக இருக்கக் கொடுத்துவைக்க வேண்டுமே"

வருகிறவர்கள் போகிறவர்கள் இவர்களுக்கிடையே என் வயது முதிர்ந்து பழமான பெற்றோர்களைப்பற்றிய பேச்சுத்தான்.

யார்வந்தால் என்ன? யார்போனால் என்ன? என் தகப்பனும் தாயும் தங்கள் பேச்சை நிறுத்த மாட்டார்கள். பழைய ஞாபகத்தரங்கங்கள் மீது அவர்கள் சதா மிதந்து சென்றார்கள்.

சில சமயங்களில் என் தாய் படுத்த படுக்கையாய்ப் படுத்துவிடுவாள்.

"நான் இருக்கச்சே கிழவி மஞ்சளோடு போறதுநல்லதுதான். ஆனால் கிடக்கிறவரையில் மருந்து கொடுக்க வேண்டாமா? டாக்டரை அழைத்து வாயேன்" என்று என் தகப்பனார் சொல்லுவார்.

அவ் வியாதியிலிருந்து எழுந்தவுடனே அளவிலாச்சந்தோஷம் அவர் அகத்தே பொங்கி எழும்.

"இந்த பூட்டுக்குக் கிழவி பிழைச்சுண்டாள்: கொஞ்சநாள் இருக்கட்டுமே உன்கையில் பணம்வந்தவுடனே அவள் சாகட்டும்" என்று சிரித்துக்கொண்டே சொல்லுவார் என் தகப்பனார்

இப்படிச் சில நாட்கள் கழிந்தன. முடிவில் மீளாத வியாதியில் என் தகப்பனார் படுத்துவிட்டார். டாக்டர் வருவதும் போவதுமாய் இருப்பார்.

"பிழைப்பரா? என்ன சொல்ருர் டாக்டர்?" என்று என் தாயார் அடிக்கடி என்னைக் கேட்பாள்.

'சிரமம் அம்மா' என்று நீர் மல்கிய கண்களுடன் பதிலுரைப்பேன்.

'அப்பா,' என்று சொல்லிக்கொண்டே என் தகப்பனாரிடம் போவேன். தாயார் அவர் பக்கத்தில் உட்காருவாள். அவளோடு அவர் பேச முயலுவார். என்னையும் நோக்குவார். வார்த்தைகள் நெஞ்சில் சிக்கும்: கண்கள்கொண்டு பேசுவார்: கண்களும் சோர்ந்துவிடும். இப்பொழுது விழிப்பு, இப்பொழுது ஒரு பேச்சு. மறுகணம் சிந்தனைச் சரடு அறுந்துவிடும். இந்த உலக வாசனை இல்லை. ஏதோ ஓர் அன்னிய உலகத்திலே சஞ்சாரம்.

என் தாயார் என் தகப்பனாரைச் சுற்றிச் சுற்றிவருவாள். கால் அவர்மீது பட்டால் அவர் காலைத் தன் சுருங்கிய கைகளால் தொட்டு ஒற்றிக்கொள்ளுவாள்.

ஒவ்வொரு நாளும் என் தகப்பனார் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஒரு நள்ளிரவு, அனைவரும் தூங்கிவிட்டார்கள். என் தகப்பனார் முடிவில்லாத்தூக்கத்தில் இறங்கிவிட்டார். எழுந்தவுடன் தகப்பனார் இறந்ததை நாங்கள் உணர்ந்தோம்; அழுதோம். ஆனால் என் தாயார் மூலையில் சுருண்டு படுத்துவிட்டாள்: அழக்கூட முடியவில்லை. துக்கம் அதிகமானால் எப்படி அழமுடியும்?

* * *

சமக்கடன்கள் நடந்தேறின.

"இத்தனை வயதாகியும் கிழவி அகப்பட்டுக்கொண்டாளே. மஞ்சப்பிராப்தி இல்லையே" என்று என்னைக் காண்கிறவர்களெல்லாம் கேட்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய வார்த்தைகள் என்மனதை உறுத்திக்கொண்டே இருந்தன. இந்தத் தள்ளாத வயதில் என் தாயாருக்கு இந்தக் கஷ்டம் வரவேண்டுமா?—இந்நிலையில் வைத்த இரக்கமற்ற தெய்வத்தை நொந்தேன். ஆனால் ஒரு நிகழ்ச்சி சோகத்திலே வறண்ட மனத்திலே சாந்தியைப் பெய்தது.

"இதுக்கு அகப்பட்டுக்கொண்டேன் என்று சொல்லருளே. அகப்படறதும், அகப்படாது இருக்கிறதும் நம்ம கையிலே இருக்கு. நான் போயிருந்து அவர் இருந்தால்—எத்தனை வேதனைப் படுவர். அவர் இருக்கிறபொழுதும் ஏதோ செஞ்சாய்விட்டது.

"அவர் போறவழிக்கும்செய்யவேண்டியதைச் செஞ்சாச்சு. இங்கே எனக்கு என்ன காரியம் இருக்கு. நானும் அவரை அடைஞ்சுடுவேன்" என்று என்தாய் தனக்குள்ளே பேசிக்கொண்டாள்.

இச் சொற்களைக் கேட்ட என் கண்முன் கூனிக் குறுகிநின்ற என்தாயின் உருவம் நிற்கவில்லை. வேலைசெய்த அயர்வினால் தூங்குகின்ற நாயகனை, அடையப் பரபரப்புடன் இரவில் மறுநாளுக்காகச் சாமான்களை மூடிவைக்கும் உத்தமியின் தோற்றந்தான் உலாவிற்று.

சிலநாட்களுக்குப் பிறகு என்தாயும் இறந்துவிட்டாள். என் தகப்பனார் இன்னொரு நாட்டில் தூங்கி விழிப்பதற்குமுன் அவரை அடைய நீண்ட பாதையில் விரைகின்ற என் தாயின் உருவத்தை என் கற்பனைக் கண்கள் காண்கின்றன. இங்கே சிதைந்துபோன அன்பு, இங்கே அறுபட்ட பேச்சு—இவைகள் அங்கே தொடருமல்லவா?


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலைன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

# காதல் அணுக்கள்

ரா. விழிநாதன்

விக்ஞானி மின்ஸார அரும்பிலிருந்து, சோதனைக் குழாயை வெளியில் எடுத்தான். அதில் தங்க நிறமுள்ள உலோகத் துண்டுகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. விக்ஞானி அதை ஆராயலானான். அவனது உதடுகளில் கொஞ்சங் கொஞ்சமாகப் புன்முறுவல் வெடித்தது. 'வெற்றி கிட்டிவிடும் போலிருக்கிறதே' என்று முணுமுணுத்தவண்ணம், சோதனைக் குழாயை ஒரு கோப்பையில் சார்த்திவிட்டு, ஏதோ ஒரு திரவபதார்த்தத்தைக் குழாயில் ஊற்றலானான். அவனது கைகள் நடுங்கின. இதயம் துடித்தது. தனது பத்து வருஷத்து முயற்சி பலிதமடையுமா என்று காணவேண்டுமென்ற துடிப்புத்தான் அது. உலோகப்பொருள் திரவபதார்த்தத்துடன் கலந்து கரைந்துவிட்டது. பிறகு இன்னும் கொஞ்சம் திரவபதார்த்தத்தை ஊற்றினான். சோதனைக்குழாயின் அடியில் ஏதோ கறுப்பாகத் தங்கியது. விக்ஞானியின் முகத்தில் ஏமாற்றக் குறிகள் தென்பட்டன. தூர திருஷ்டிக்கண்ணாடியின் மூலம் ஆராய்ந்து பார்த்துக் 'கடைசி முயற்சியும் குட்டிச்சுவராகிவிட்டது' என்று பெருமூச்சுவிட்டான். கடந்த பத்து வருஷ சம்பவங்களும் அவன் கண்முன் நின்றன.

பத்து வருஷங்களுக்கு முன்பு அவனிடமிருந்த ஆஸ்திக்குக் கங்குகரை கிடையாது. ஆனால் இன்றோ, 'இரவு போஜனத்திற்கு வழி எப்படி' என்று சிந்திக்கும் படியாக இருந்தது. இச் சுவர்ண சாதனையில், பத்து வருஷ காலமாகத் தன் ஆஸ்தி பூராவையும் செலவழித்தான். ஆனால் இன்றுவரை அவனுக்கு அதில் வெற்றி கிட்டவில்லை, ஆயினும் அவன் நம்பிக்கை இழந்தானில்லை. இன்னுமொருதடவை இதைச் சாதிப்பதில் முயலுவது என்ற தீர்மானத்தில், தனது 'லேபரெட்டரி' யில் உள்ள அனுவசியமான சாமான்கள் என்று நிர்ணயித்தவைகள் எல்லாவற்றையும்விற்று, ரொக்கமாக்கிக்கொண்டான்.

இத்தடவையும் தனது சாதனையில் வெற்றி கிட்டாமல் போய்விட்டதைக்கண்ட அவனது முகம் சுண்டிவிட்டது. கையில் சோதனைக் குழாயுடன் கற்சிலைக்குச் சமானமாக, கண்ணை இறுக மூடிக்கொண்டு, அமர்ந்திருந்தான். 'எனது கோட்பாடுகள் (Theory) பிழைபடுவதற்கு நியாயமில்லையே, ஒருகால் உஷ்ணம் கொடுப்பதில் ஏதாவது தவறுதல் நடந்திருக்குமோ! எனது கோட்பாடுகளில் சிறிதும் சந்தேகமுதிப்பதற்கு நியாயமில்லை. இன்னும் ஒரு தடவை......... கையில் பணமில்லையே— பணத்திற்கு என்ன செய்வது.........! வெளி உதவியை நாடலாமா? நாடினால், நம்மை நம்பி யார் பணம் கொடுப்பர்?' என்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

இதே சமயம், அறையின் கதவைத் திறந்து கொண்டு ஒருவன் உள்ளே நுழைந்தான். சிந்தனைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த விக்ஞானிக்கு அவன் உள்ளே வந்தது தெரியவில்லை. வந்தவன், 'என்ன ஜேம்ஸ், என்ன ஒரேயடியாக யோசனையில் மூழ்கிக் கிடக்கிறாய்?' என்று விக்ஞானியின் சிந்தனையைக் கலைத்தான்.

விக்ஞானி திடுக்கிட்டு 'விலியம்! வா, உட்காரு' என்று பக்கத்து நாற்காலியைக் காட்டினான்,

விலியம் உட்கார்ந்த பின்னரும், தனது அதே பழைய கேள்வியைக் கேட்டான்.

'அச்சாதனையைப் பற்றித்தான்'

'இத்தடவையும் வெற்றி கிட்டவில்லையா?'

'ஆம்'

'நான்தான் முன்பே உனக்குச் சொன்னேனே! செம்பைத் தங்கமாக்குவது எப்படி அப்பா முடியும்? ஒரு தத்துவத்தை (Element) இன்னொரு தாதுவாக்குவது என்பது வீண் பிரயத்தனம். அதைக் கைவிட்டு விடு, நான் ஒரு முக்கிய விஷயமாக, உன்னிடம்......'

'முடியாது என்பது ஒன்றுமே இல்லை. நீயும் விக்ஞான மாணவன் தானே! எனது 'தியரி' புரிந்துகொள்ளும் சக்தி உன்னிடம் இருக்கும். ஒருதடவை அவைகளைக் கேட்பாயாகில். நான் தவறான வழியில் செல்லவில்லை, சரியாகத்தான் சாதனை செய்கிறேன், என்பதை அறிவாய் என்று நம்புகிறேன்.

விலியம் நடுவில் குறுக்கிட்டு, 'உனது கொள்கைகளும் கோட்பாடுகளும் சரியாயிருக்கலாம். ஆனால் நான் இப்பொழுது உன்னிடம் வந்திருப்பது ஒரு முக்கியமான காரியத்தை உத்தேசித்து......' என்றான்.

'சரியாயிருக்கலாம்' என்ற சம்சயச்சொல் எதற்கு? எனது 'தியரி' சரியானதுதான். கேள், ரேடியமும் ஒரு தாது. ஈயமும் ஒரு தாது......'

தனது விஷயங்களை, ஜேம்ஸ் பேச்சை முழுவதும் கேளாமல் சொல்வது முடியாத காரியம் என்பதை அறிந்த விலியம் 'ஆம். அப்புறம்?' என்று ஆர்வத்துடன் கேட்கலானான்.

'ரேடியம் வெகு காலஞ்சென்றுவிட்டால் ஈயமாக மாறிவிடுகிறது. இதற்குக் காரணம் விளங்காமல் இல்லை. ஒவ்வொரு வஸ்துவும் அணுக்களால் ஆனது. அணுக்களில் இரு விதம், மின்னணுக்கள், பரமாணுக்கள் என்று. வெவ்வேறு எண்ணிக்கையுள்ள மின்னணுக்களும் (Electrons) பரமாணுக்களும் (Protons) கலந்து வெவ்வேறு விதமான தாதுக்களை உண்டுபண்ணும் சக்திவாய்ந்தவை. இம்மாதிரி தாதுக்களை மாற்றும் சக்திவாய்ந்த மின்னணுக்கள் ஒரே வகையானவைதாம்.'

'சரி......'

'ஆகையால், ஒரு குறிப்பிட்ட பரமாணுக்களுடன் மின்னணுக்களின் சேர்க்கையில் மாறுதல் உண்டாகிவிட்டால், ஒரு தத்துவத்தின் அணுக்கள் வேறுவித தத்துவத்தின் அணுக்களாகப் பரிணமித்துவிடும். பிராணவாயு (Oxygen)வின் அணுக்களைக் கூட்டிக் குறைப்பதினால் 'ஓஜான்' (Ozone) தயாராய் விடுகிறதே, அதே போலத்தான் இதுவும்.'

'சரி. அப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்?'

'நான் ஒருவிதப் புதுக்கிரணங்கள் கண்டுபிடித்துள்ளேன். அவைகளின் உதவியைக் கொண்டும், சில ரஸாயனங்களின் உதவியைக் கொண்டும், மின்னணுக்களிலும் பரமாணுக்களிலும் மாறுதலை உண்டாக்கமுடியும் என்பது எனது திட நம்பிக்கை. இன்னுமொரு தடவை இச்சாதனையில் ஈடுபட வஸதி கிட்டுமாகில், அவசியம் வெற்றியடைந்து விடுவேன்'

'சரி, உன் விஷயம்தான் முடிந்துவிட்டதே. என் விஷயத்தைக் கேள். எனக்கு உதவி புரிவாயாகில், உனக்கு ஏராளமான பொருள் கிட்டும்?'

'பொருள்—அதுவும் ஏராளமான பொருள்—கிட்டுமா? எப்படி, அது எப்படி அப்பா?'

'காதல் அணுக்கள் மூலம், மனிதனிடத்தில் காதலை விழிப்புறச் செய்யமுடியுமென்று, முன்பு ஒரு தடவை நீ என்னிடம் சொன்னாய் அல்லவா?'

'ஆம். இந்த ஸ்வர்ண சோதனைக்கு முன்பு அதில்தான் நான் ஈடுபட்டிருந்தேன். அதில் எனக்கு ஒரு விதத்தில் வெற்றியும் கிட்டியுள்ளது. அந்தச் சமயம்தான் இந்த ஸ்வர்ண சோதனையில் ஈடுபடவேண்டுமென்ற அவா ஏற்பட்டது'

'அதைப்பற்றி எனக்குச் சொல்லுவாயா?'

'தாராளமாய்ச் சொல்லுகிறேன் கேள். மனிதனது சரீரத்தில் ஒருவித அணுக்கள் உறங்கிக்கிடக்கின்றன. அவைகள் விழித்துக் கொண்டால் 'காதல்' என்பது ஏற்படுகிறது என்பது எனதபிப்பிராயம். சில சமயம் குறிப்பிட்ட நபரைப் பார்க்கும்பொழுது இரத்தத்தில் ஒருவித Reaction ஏற்படுகிறது, அந்த எதிர்ச் செய்கைகளின் காரணமாக அவ்வணுக்கள் விழிப்படைகின்றன. உடனே குறிப்பிட்ட நபரிடம் அன்பு உதிக்கிறது. மற்ற அணுக்களைப் போலவே, இவ்வணுக்களும் விரைவில் அதிகரிக்கும் இயல்புள்ளவை. அணுக்கள் அதிகரிக்க அதிகரிக்க அன்பும் வலுக்கும். அவ்வணுக்களை, 'இன்ஜெக்ஷன்' மூலம் வேறு அணுக்களைப் புகுத்தி நசித்திடவும் செய்யலாம். அப்பொழுது அம்மனிதனுக்கு எதனிடத்திலும் பற்றுதல் ஏற்படாது. வேறுவித அணுக்கள் மூலம் விழிப்புறவும் செய்யலாம். அவ்வணுக்கள் ரத்தத்தில் கலக்குமாயின் காதல் அனுபவம் ஏற்படும்,'

வெகு கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த விலியம், 'அப்படி அணுக்களைப் புகுத்தினால், மனிதன் யாரிடம் நேசம் கொள்வான்?' என்று கேட்டான்.

ரத்தத்தில் அணுக்கள் புகுத்தப்பட்டதும், முதல் தடவையாக அவன் யாரைப் பார்க்கிறானோ, அவரிடம்தான் நேசம் கொள்வான்.

இதைக்கேட்டதும் விலியம் தலைமீது கையை வைத்துக்கொண்டு சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு ஜேம்ஸின் அருகில் நாற்லியை இழுத்துப்போட்டுக்கொண்டு, 'ஜேம்ஸ், அவ்வணுக்கள் எனக்குத்தேவை. அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நான் செலவிடத் தயார். என்னிடம் கணக்கிலடங்காத பணமும் சுகசாதனங்களும் இருக்கின்றன. ஆனால் எவ்வளவு இருந்தும்......' அவன் ஒரு வெறியில் கூறிக்கொண்டே போனான். 'ஒரு வஸ்துவின் குறைவால் எனக்கு வாழ்வே பெருஞ் சுமையாய்த் தோன்றுகிறது. நீ 'லில்லி'யின் பெயரைக் கேள்விப்பட்டிருப்பாயே. அவள் மிக அழகி. அவளைப்போன்ற அழகி இவ்வுலகிலேயே இல்லையென்று சொல்லிவிடலாம். இதுவரை அவள்மாதிரி அழகி இவ்வுலகில் பிறக்கவுமில்லை, இனி பிறக்கப் போவதுமில்லை' என்றுகூட கருதுகிறேன். அவள் என் வீட்டண்டைதான் இருக்கிறாள். அவளை எப்படியாவது அடையவேண்டுமென்று எனக்கு ஆசை. ஆனால் இன்றுவரையில் அவளை எவ்வளவோ முயன்றும் வசீகரிக்க முடியவில்லை. அவளையடைவதற்காக நான் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் செலவ

மிக்கத் தயார். அவளின்றி எனக்குச் சுகம் இல்லை. அதனால் தான் உன்னை அடைக்கலமாக...........'

'உனது இக்காரியத்தைப் பூர்த்தி செய்து தர என்னால் முடியும். இந்தப் பிரயோகத்திற்கு 25000 ரூபாய் செலவழியும்.

'பாதகமில்லை. அதைவிட அதிகமானாலும் எனக்குப் பரவாயில்லை. இதோபார் அவள் படத்தை. இவளை நான் கட்டாயம் அடைந்தே தீரவேண்டும்' என்று கூறிக் கோட்டுப் பையினின்றும் ஒரு புகைப்படத்தை எடுத்து ஜேம்ஸின் கையில் கொடுத்தான்.

ஜேம்ஸ் ஒருதடவை படத்தைப் பார்த்துவிட்டு மேஜையின் மீது வைத்துவிட்டான். பிறகு, 'வில்லியம்! எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரம் நீ பணம் தருவாயோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது, நான் வேலையை ஆரம்பிப்பதற்கு. உன்னிடம் பணம் வாங்காமலேயே இவ்வேலையைச் செய்து தரவேண்டியவன் நான். ஆனால் எனக்கு இச்சமயம் பணம் ரொம்பமுடையாக இருக்கிறது. எனக்குச் ஸ்வர்ணச் சோதனையில் வெற்றி கிடைத்துவிட்டால், இருமடங்கு திருப்பித் தந்துவிடுகிறேன்.'

'அதெல்லாம் தேவையில்லை. ஆனால், ஸ்வர்ண சோதனைக்கு முன்னால், காதல் அணு சம்பந்தமான எனது வேலையைப் பூர்த்தி செய்துதர வேண்டும். இன்று சாயந்திரமே உனக்குச் "செக்" அனுப்பிவிடுகிறேன். நீ அதற்கு ஒரு ரசீது எனக்குக் கொடுக்கவேண்டும்'

'சரி. உனது வேலையை விரைவில் முடித்துத் தருகிறேன். நீ சிறிதும் கவலைப்படாதே'

வில்லியம் சென்றுவிட்டான். ஆனால் 'வில்லி'யின் படத்தை எடுத்துச்சொல்ல மறந்துவிட்டான். அதைப் பார்த்த ஜேம்ஸ் தனது மேஜை டிராயரில் எடுத்து வைத்துவிட்டு, தனது லேபரெட்டரியின் சில்லுண்டிக் காரியங்களைக் கவனிக்கலானான். ஆனால் அவனுக்கு வேலையே ஓடவில்லை. அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பான். நேரம் போகாமலே, அசைவற்று நின்றுவிட்டதோ எனச் சந்தேகிப்பான்.

எப்படியோ மெதுவாகப் பகல் பொழுது கழிந்தது. மணி 5 அடித்தது. வில்லியம் சொன்னபடி ரசீது ஒன்றை எழுதிக்கொண்டு, நேரே வில்லியம் வீட்டை அடைந்தான். 'செக்'கைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான்.

மறுநாளே, இரு பிரயோகங்களையும் சேர்ந்தாற்போல ஆரம்பித்துவிட்டான். ஒரு வாரத்திற்கெல்லாம் காதல் அணுக்களின் வேலை கிட்டத்தட்ட அநேகமாகப் பூர்த்தி அடைந்துவிட்டது. காதல் அணுக்களை இன்னும் சிறிது பலம் குறைக்க (Dilute) வேண்டியதுதான் பாக்கி. 'டைல்யூட்' செய்யாமற் போனால், அத் திரவத்தின் ஒரு துளியின் பத்திலொரு பங்குள்ள திரவம் ரத்தத்தில் கலந்தாலே போதும், மனிதன் பித்தனாகி விடுவான். அதனால் அதன் சக்தியைக் குறைக்கும் காரியத்தில் ஈடுபட்டான். ஏதோ யோசனையில் காதல் அணுக்கள் நிரம்பிய அக்குழாயை அப்படியே விட்டு விட்டு, அடுத்த ஸ்வர்ணச் சோதனை அறைக்குச் சென்றான்.

மணி மூன்றிருக்கும். அந்த அறைக்கு ஒரே ஒரு ஜன்னல்தான். ஜன்னலிலும் கறுப்புத் திரை தொங்கவிடப்பட்டிருந்தது. அறையினுள் சூரியகிரணங்கள் நுழைவதற்கே வழி கிடையாது. அந்த அறையின் மத்தியில் ஒரு பெரிய மேஜை போடப்பட்டிருந்தது. மேஜையின் மீது ஒரு கண்ணாடி இயந்திரம் வைக்கப்பட்டிருந்தது. அதன் நடுப்பாகம் வட்டவடிவமானதாகவும் இருமுனைகளும் இணைக்கப்பட்டு மெல்லியதாகவும் வார்க்கப்பட்டிருந்தது. அதனுள்ளே பார்ப்பதற்கு ஒன்றுமில்லைபோலிருந்தது. கண்ணிற்குப் புலப்படாத சிறு கம்பிகள் அதனுள் ஓடியிருந்தன. அந்த இயந்திரம் வெளியே மின்சாரக் கம்பிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது. அறை பூராவிலுமே, கம்பிகள் வலைபோலப் பின்னப்பட்டிருந்தன.

அந்த மிஷினின் அருகிலுள்ள குழாயில் திரவ பதார்த்தம் ஒன்று நிரம்பியிருந்தது. அறையின் நான்கு புறங்களிலும் பெரிய பெரிய பயங்கரமான மிஷின்கள் வைக்கப்பட்டிருந்தன. விஞ்ஞானி ஒரு பித்தானை அழுத்தினான். உடனே ஒரு மிஷினின் சக்கரம் வெகு வேகமாகச் சுழல ஆரம்பித்தது. மிஷினின் 'கட கட' சப்தத்தில் அறையே கிடுகிடுத்தது. அந்தக் கண்ணாடிக் குழாய்க்குள்ளிருந்த கம்பிகள் பிரகாசிக்க ஆரம்பித்தன. பிறகு விஞ்ஞானி இன்னுமொரு பித்தானை அமுக்கினான். இன்னொரு மிஷினிலிருந்த பிஸ்டன் (Piston) வேகமாக வேலைசெய்ய ஆரம்பித்தது. 'கடகட' சப்தத்துடன் 'ஸ்-ஸ்-ஸ்' சப்தமும் சேர்ந்துகொண்டது. இதுவும் மத்தியிலுள்ள கண்ணாடி இயந்திரத்துடன்தான் இணைக்கப்பட்டிருந்தது. அந்த மிஷின் வேலைசெய்ய ஆரம்பித்த அரை மணி நேரத்திற்கெல்லாம் அறை பூராவும் ஒருவித நீலப் பிரகாசம் பரவியது. விஞ்ஞானி ஒருவிதச் சிகப்பு 'ஓவர் கோட்' அணிந்துகொண்டான். கண்களுக்கு ஒருவிதக் 'கூலிங் கிளாஸ்' அணிந்துகொண்டு, சிறிது நேரத்திற்கெல்லாம் ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டான். பிறகு ஒரு சோதனைக் குழாயைக்கொண்டுபோய், அருகிலிருந்த 'எலெக்ட்ரிக் ஹீட்டரி'ல் (Electric Heater) வைத்தான். அதனருகில் நின்றுகொண்டு, உட்குவிந்த கண்ணாடி (Concave Mirror) ஒன்றின் மூலமாக, நீலநிறக் கிரணங்களை, அச்சோதனைக் குழாய்க்குள் செலுத்தினான்.

அதன் பிறகு முன்பு வேலைசெய்துகொண்டிருந்த அறைக்கே வந்துவிட்டான். ஏதோ சாமான் ஒன்றை எடுப்பதற்காக மேஜையைத் திறந்தான். டிராயரில் இருந்த 'வில்லி'யின் படத்தின்மீது அவனது பார்வை விழுந்தது. 'அட! இதைக்கொடுக்க மறந்துபோய் விட்டோமே அவனிடம். இன்னும் இங்கேயே கிடக்கிறதே' என முணுமுணுத்துக்கொண்டு படத்தை உற்றுக் கவனிக்கலானான். 'வில்லியம் சொன்னது போலொன்றும் 'வில்லி' அழகில்லை. ஏனோ இவளுக்காக அவன் பித்துப்பிடித்து அலைகிறான்' என்று எண்ணி, மனதில் சிரித்துக் கொண்டான். பிறகு படத்தை மேஜையின்மீது வைத்துவிட்டுத் தன் காரியத்தைக் கவனிக்க எழுந்தான்.

பிறகு, அணுக்கள் நிரம்பிய அக்குழாயை வெளியில் எடுத்தான். குழாய் கிட்டத்தட்ட இரண்டு அங்குல நீளமுள்ளது. அதில் ஒரு திரவம் வழிய வழிய இருந்தது. அவைகளை 'டைல்யூட்' செய்ய முனைந்தான். 'இவ்வளவு சிறிய அணுக்கள் இரண்டு அங்குலக் குழாயில் தான் இருக்கின்றன. இவைகளின் சக்தியோ வெனில், லக்ஷக்கணக்கான மனிதர்களைப் பித்தர்களாக்கக் கூடியதாயிருக்கிறதே' என்று சிந்தித்த வண்ணம் வெகு ஜாக்கிரதையுடன் குழாயின் மூடியைத் திறந்தான்.

'இத்திரவத்தின் ஒரு துளியை நூறு துளியாக்கினால், உபயோகிக்கலாம். அப்பொழுது மனிதனின் இரத்தத்தில் காதல் ரஸம் ஊறக் கூடும்' என்ற முடிவிற்கு அவன் முன்பே வந்திருந்தான்.

அவன் பூதக்கண்ணாடி மூலம் அவ்வணுக்களை ஆராயலானான். சிறிது நேரம் ஆராய்ந்த பின் மூடியை மூடி எடுத்தான். மூடும்போது என்ன காரணமோ, தெரியவில்லை, குழாய் 'பட்'டென்று உடைந்து விட்டது. கண்ணாடித் துகள் ஒன்று அவனது இடது கைக் கட்டை விரலில் ஏறி இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. காதல் அணுக்களின் திரவமும் அவனது கை ரத்தத்தில் கலந்துதான் இருக்கவேண்டும். ரத்தம் பீரிட்டு அடிப்பதைக்கண்ட அவன் கைக்குட்டையையெடுக்க மேஜையை அணுகினான். மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த 'வில்லி'யின் படத்தின்மீது அவனது பார்வை சென்றது. படத்தைக் கையிலெடுத்துக்கொண்டான். ஆனால் தலை சுழல ஆரம்பித்தது. கண்கள்மூடின. பின்னால் நாற்காலியின் மீது 'தடா'ரெனச்சாய்ந்தான். அவனது கண்கள் திறக்கச் சுமார் பதினைந்து நிமிஷ நேரம் பிடித்திருக்கும். உணர்ச்சி ததும்பும் குரலில், 'வில்லி, வில்லி' என்று உரக்கக் கூவினான். பிறகு தன் தலை மயிரைப் பிய்த்துக்கொண்டு 'விக்ஞானி-இல்லை இல்லை. நீ விக்ஞானிதான். நீ கண்டுபிடித்ததுதான் இது' என்று ஏதோ உளறிவிட்டு நினைவிழந்தான். நினைவு வந்ததும் ஒரு புது ஆளாகவே குதித்து எழுந்தான். உடனே


TRADE  MARK

குழந்தைகளுக்கு

# கிரைப்-விட்-டி

'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ஓர் அமுதமொழி. அதனினும் நோயில்லாமல் குழந்தைகளை வளர்க்கும் பாக்கியத்தைவிட சிறந்தபாக்கியம் வேறொன்றுமில்லை. ஆனால் குழந்தைகளுக்குக் குடல் சம்பந்தமாய் வயிற்றில் சில கோளாறுகள் சகஜமாய் ஏற்படுகின்றன. வயிற்றில் வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றில் புளிப்பு முதலியன. இவைகளுக்கு "கிரைப்-விட்-டி"யைக் கொடுத்தால் அதிலிருக்கும் மிகவும் அருமையான மருந்துச் சத்துக்கள் ஜீரணமாகாது இறுகிய பாலைப் பக்குவப்படுத்தியும், புளிப்பு ஏற்பட்டிருந்தால் அதை முறித்தும் வெகு சீக்கிரத்தில் ஜீரணமாக்குவதற்கு உதவி செய்கின்றன. சில குழந்தைகள் பால் குடித்த உடனே வாந்தி எடுப்பதும் உண்டு; அம்மாதிரியான குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கு முன்னே ஒரு டோஸ் "கிரைப்-விட்-டி"யைக் கொடுத்து வந்தால் வாந்தி நின்றுவிடும்.

தாய்மார்களே! உங்கள் கண்ணுக்குக் கண்ணான குழந்தையைக் காப்பாற்றுங்கள். நோய்க்கு இடங்கொடுக்காதீர்கள். அநேக விதமான நோய்கள் வரும் முன் அவற்றை வராமல் தடுத்துவிடுங்கள். அதற்காக "கிரைப்-விட்-டி"யை இன்றே உங்கள் குழந்தைகளுக்கு கொடுக்க ஆரம்பியுங்கள். "கிரைப்-விட்-டி" எவ்விதமான கெட்ட மருந்தும் சேராத ஓர் தேவாமிர்தம் போன்றது.

*Sole Proprietors*

S. R. REMEDIES,

TRICHINOPOLI.

'வில்லி, வில்லி' என்று கூவிக்கொண்டே, சிகப்பு 'ஓவர் கோட்' அணிந்த வண்ணமே வீட்டிலிருந்து வெளிக்கிளம்பிவிட்டான். வாசலில் இறங்கினதுதான் தாமதம், ஓடவும், ஆரம்பித்து விட்டான். ஜேம்ஸ் இம்மாதிரி ஓடுவதை, வெகுதொலையிலிருந்து 'வில்லியம்' கண்டான். ஜேம்ஸின் நிலைமையில் அவனது உள்ளம் துணுக்குற்றது. 'ஜேம்ஸ், ஜேம்ஸ்' என்று கூவி அழைத்தான், ஆனால் ஜேம்ஸ், திரும்பிக்கூட பார்க்கவில்லை.

'வில்லி, உன்னை நான் அடையமுடியாதா? வில்லி, உன்னைக்காணாமல் என்னுயிர் தரிக்காது' என்று உரக்க உளறிக்கொண்டே ஜேம்ஸ் ஓடினான். வில்லியத்தின் காதுகளிலும் இவ்வார்த்தைகள் விழுந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் வில்லியத்தின் பார்வையிலிருந்து ஜேம்ஸ் மறைந்து விட்டான்.

ஜேம்ஸ் நேரே 'வில்லியின்' வீட்டுவாசலை அடைந்தான். வாசலில் காவற்காரன் நின்றுகொண்டிருந்தான். 'உள்ளே 'வில்லி' யிருக்கிறாளா?' என்று அவனை விசாரித்தான் ஜேம்ஸ். 'ஒரு மணி நேரத்திற்கு முந்தியே வெளிநாடு போவதற்கெனத் துறைமுகம் சென்றுவிட்டாள்' என்பது தெரியவந்தது.

ஜேம்ஸ் அசட்டு விழி விழித்தான். 'இன்னும் கப்பல் கிளம்பியிராதே!' என்று தடுமாறிய குரலில் கேட்டான்.

தோட்டக்காரன் பதில்சொல்ல வாய்திறக்கு முன்பே, ஜேம்ஸ் ஓட்டம் பிடித்தான். தோட்டக்காரன் சிலைபோல் அசையாமல் நின்றவண்ணம் இதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

அன்றிரவு கடும்புயல் வீசிற்று. விக்ஞானி ஜேம்ஸின் 'லேபரெட்டரி'யில் மிஷின்கள் 'கடகட'வென்று பேரிரைச்சல் செய்துகொண்டிருந்தன. வெளியே காற்றுச் சீறிக்கொண்டிருந்தது. 'லேபரெட்டரி'யினுள் ஒருவருமேயில்லை. புயல் காற்றுத் திறந்த ஜன்னல்வழியே உள்ளே புகுந்தது. 'பிஸ்டன்' இயந்திரத்தின் 'ஸ்ஸ்' சப்தமும், காற்றின் 'ஸ்-ஸ்' சப்தமும் ஒன்று சேர்ந்தன. ஜன்னல் கதவுகளின் 'கடகட' சப்தமும் இன்னொரு மிஷினின் 'கடகட' சப்தமும் கலந்தன. நாதஸ்வரக் கச்சேரியில் ஒன்று சேர்ந்து தவுல்காரர்களும், நாயனக்காரர்களும் வாசிக்கும் கட்டத்தை ஞாபகப்படுத்தின இந்த மிஷின்களின் ஆரவாரமும், காற்றின் பேய் முழக்கமும். காற்றின் அசைவுகளினால் மின்சாரக் கம்பிகள் அசைந்தன. ஒரு தடவை அசைந்த கம்பிகள் ஒன்றையொன்று அன்புடன் தழுவிக்கொண்டுவிட்டன. அக்கம்பிகளில் எவ்வளவு பலத்த மின்சார சக்தி ஓடிக்கொண்டிருந்ததோ, தெரியாது. கம்பிகள் அணுகியதுதான் தாமதம், தீப்பற்றிக்கொண்டு விட்டது. அத்தீ கண்ணாடிக்குள்ளிருக்கும் நீல ஒளியுடன் கடும்போர் புரிவது போலத்தோன்றியது.

ஃ ஃ ஃ

விக்ஞானியின் வீட்டில் பரவிய தீயை ஜனங்களால் அணைக்க முடியவில்லை. இரவிற்கிரவே அவனது வீடு தீயில் சாம்பராகியது.

மறுநாள் வில்லியம் தன் சிநேகிதர்களிடம் கூறிக்கொண்டிருந்ததாவது:— சிகப்பு 'ஓவர் கோட்' அணிந்த வண்ணம், வெறிபிடித்தவன் போல ஜேம்ஸ் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டேன். என்னால் அவனைப் பின்பற்ற முடியவில்லை. அதற்காக 'டாக்ஸி' தேடினேன். 'டாக்ஸி' சிறிது நேரம் கழித்துத்தான் கிடைத்தது. 'வில்லி' என்று அவன் இரைந்து கூப்பிட்டது என் செவியில் விழுந்தபடியால், வில்லியின் வீட்டிற்குக் காரை விடும்படி ஏவினேன். அங்கே சென்றதும் அவள் அயல் நாடு செல்கிறாள் என்றும் ஜேம்ஸும் துறைமுகத்தின் பக்கமாகத்தான் ஓடினான் என்பதையும் அறிந்தேன். உடனே துறைமுகத்திற்கு விரைந்தேன். ஜேப்ஸ் துறைமுகத்தின் ஒரு சுவரின் மீது ஏறி நின்றுகொண்டு, 'கப்பலை நிறுத்து. நிறுத்து கப்பலை. நான் சொல்கிறேன். கேட்கமாட்டேன் என்கிறாயே' என்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருந்தான். கப்பல் கரையிலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்திற்கப்பால் சென்றுவிட்டது. 'ஜேம்ஸ், இன்னும் உரக்க 'நிறுத்தமாட்டாயா. சரி. இதோ நானே அங்கு......' என்று சொன்னான். நான் 'ஜேப்ஸ், இதென்ன பைத்தியம் மாதிரி' என்று கூவிக்கொண்டு அவனை அணுகுவதற்குள்ளாக, 'தொப்' பென்று ஜலத்தில் குதித்துவிட்டான். சிறிதுநேரம்வரை சமுத்திரராஜன், அவனுக்கு விளையாட்டுக் காட்டியவண்ணம், அவனை மேலும் கீழும் உருட்டினான். 2, 3 நிமிஷங்களுக்கெல்லாம் 'அபக்' என்று விழுங்கிவிட்டான்.

அவனது எரிந்துபோன வீட்டைச் சோதிக்கும்பொழுது, அநேக தங்கத்துண்டுக்கள் பளிச்சென்று மின்னிக்கொண்டு கிடந்தன. நன்றாகப் பரீக்ஷித்துப் பார்த்த பின் அவை 'சுத்தத்தங்கம்' என்றும் தெரியவந்தன.

வில்லியம், ஜேம்ஸின் 'காதல் அணுக்கள், ஸ்வர்ணச் சோதனை' என்பவைகளைப்பற்றி விக்ஞானிகளிடம் சொன்னான். விக்ஞானிகள் எவ்வளவோ முயன்றும் அந்த இரண்டு உண்மைகளும் இன்னும் கண்டுபிடிக்கப்படாமல், மறைமுகமாகவே அழுந்திக் கிடக்கின்றன.

(விக்ஞான சம்பந்தமான ஆங்கிலக்கதை)

# கடைசியில்

'சாரி'

இன்று நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது. நமக்கே இப்படி இருந்தால் ஜானகியின் தாய், சிவகாமு எவ்வளவு சங்கடப்பட்டிருப்பாள்?

பங்குனி பிறந்ததும் செல்லமையர் வழக்கம் போல ஜானகியின் விவாக விஷயமாக யோசிக்க ஆரம்பித்தார். 18 வயதுள்ள ஜானகி அவருடைய ஒரே பெண். நான்கு வருஷங்களாகவே அவளுடைய கலியாணத்திற்கு வரன் தேடுவதில் அவர் அதிக சிரமப்படுகிறார் — ஒன்றும் நிச்சயமாகவில்லை. குறை யாரிடத்தில்? சற்றே கவனிப்போம்.

செல்லமையருக்கும், சிவகாமு அம்மாவுக்கும் ஜானகி ஸ்ரீமந்த புத்திரி. அவளுக்குப்பின் வரிசையாக மூன்று பிள்ளைகள். ஜானகி சிவந்த மேனியும், கறுத்து அடர்ந்த கூந்தலும், அகலமான திருதிருவென்றிருக்கும் கண்களும், நல்ல வளர்த்தியான தேகக்கட்டுடன் அன்று மலர்ந்த புஷ்பம்போலிருப்பாள். தற்சமயம் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள். அவள் தந்தைக்குக் கோயம்புத்தூர் ஜில்லா கச்சேரியில் சிரஸ்தார் உத்தியோகம். அவருடைய மாதச் சம்பாத்தியம் ரூபாய் 200-க்குள் இருந்தபோதிலும், பரம்பரையான பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவராகையால், இவருடைய பங்கிற்கு ஒரு லக்ஷரூபாய்க்குக் குறையாத பூஸ்திதியும், கோயம்புத்தூர் ஆர். எஸ். புரத்தில் ஒரு அழகிய பங்களாவும் இருந்தன. இதனாலெல்லாம் என்ன தெரிகிறது? ஜானகி அழகி; படித்தவள்; பணக்காரர் வீட்டுப்பெண், ஆகையால் அவளைக் கலியாணம் செய்துகொள்ளுபவன் வரதக்ஷிணை எதிர் பார்த்தாலும் கிடைக்கக்கூடிய இடம். இந்த மூன்று புள்ளிகளிலும் பரீக்ஷைவைத்தால் ஜானகி தேர்ச்சிபெற்றவளே. ஆயினும் நான்கு வருஷங்களாக, அவளைத் தகுந்த இடத்தில் கலியாணம் செய்துகொடுக்க அவள் தந்தை மேற்கொண்ட பிரயத்தனங்கள் ஏன் பயன்தரவில்லை? ஜானகியோ தங்கமான சுபாவம் கொண்டவள். தன்னைப் பார்க்கத் தந்தை அழைத்துவரும் ஒவ்வொரு வாலிபனுக்கும் கண்காட்சிச் சாலையில் போய் நிற்பதுபோல், காட்சியளிப்பாள். பாடச்சொன்னால் பாடுவாள். படிக்கச் சொன்னால் கூச்சமின்றிப் படிப்பாள். இத்தியாதி.........

வரன் நெ. 1. இந்தப் பிள்ளை பார்க்கவந்த பொழுது ஜானகிக்கு வயது 14. பிள்ளை பி.ஏ, ஆனர்ஸ் வகுப்பில் பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தான்; தாய் தந்தையுடன் பெண் பார்க்க வந்தான். "ஜானகி, இங்கே வாம்மா. இவர்களுக்கு நமஸ்காரம் செய். வீணையை எடுத்து வந்து இரண்டு பாட்டு வாசி" என்றார் தந்தை.

ஜானகி ரொம்ப அழகாக வாசித்தாள். பிறகு பாடச் சொன்னார்கள். இரண்டு பாட்டுப் பாடினாள்.

"என்ன படிக்கிறாள், குழந்தை?"

"மூன்றாவது பாரம் தேறினதும், அதற்கு மேல் படிப்பு அனாவசியமென்று நிறுத்திவிட்டுப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறோம்" என்றார் செல்லமையர்.

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள். இந்தக் காலத்தில் படிப்பு எவ்வளவு முக்கியம்! பாட்டுக்கு என்ன ஸார்! பின்னால் தானாக வருகிறது. நீங்கள் செய்தது ரொம்ப பிசகு. பெண்கள் இண்டர்மீடியட் வரையிலாவது படித்திருக்க வேண்டியது அவசியம். என் பெண்கள் மூன்றுபேரும் பி. ஏ. தேறினபிறகு தான் கலியாணம் செய்து கொண்டார்கள்" என்று பெண்கல்வியின் அவசியத்தைப்பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்துவிட்டு, வந்தவர்கள் ஊருக்குக் கிளம்பினார்கள். புறப்படும் சமயத்தில் செல்லமையர் "என்ன ஸார்? எப்பொழுது கலியாணம் சொல்ல வரட்டும்? முகூர்த்தம் பார்த்துக் கடிதம் எழுதுகிறீர்களா?" என்று கேட்டதற்கு, "எதற்கும் ஊருக்குப்போய்க் கடிதம் போடுகிறோம்" என்கிற பதில் கிடைத்தது. போன மறுதினமே அடியில் வருமாறு கடிதமும் வந்தது. "பெண் என்னவோ எங்களுக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் நல்ல படித்த பெண்ணாக இருந்தால் மட்டுமே தன்னுடன் எல்லா விஷயங்களையும் பற்றி விவாதித்துப் பேசமுடியும். படிக்காத பெண் வேண்டாம் என்று என் பிள்ளை சொல்கிறான். நான் என்ன செய்வது?"

* * *

வரன் நெ. 2. ஜானகி அடுத்த மாதமே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து தற்சமயம் 5-ஆவது பாரத்தில் படிக்கிறாள். பாட்டு அனாவசியமென்று தாய் தந்தையர் தீர்மானித்தபடியால், வீணை ஒரு மூலையில் புழுதி படிந்து கவனியாமல் கிடக்கிறது. இன்று இவளைப் பார்க்கவந்தவர் 24 வயது உள்ளவர். கல்கத்தாவில் ரேடியோவில் 200 ரூபாய் சம்பளத்தில் இருந்தார். நல்ல ரசிகர். அழகான தோற்றம். தாம் மட்டுமே பெண்ணைப் பார்வையிட வந்திருந்தார்.

ஜானகி தாய்தந்தையுடன் ஒரு சோபாவில் அமர்ந்து நடுநடுவில் தன்னிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் கூறிக்கொண்டிருந்தாள். மாப்பிள்ளை மனிதர், "உனக்கு Hobby என்ன? படித்தால் மட்டும் போதாது. மனிதனுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் விசேஷ அக்கரை இருந்தால்தான் வாழ்க்கையை ரசிக்க முடியும்." என்றார்.

ஜானகி திருதிருவென்றுவிழித்தாள். குழந்தை தானே? என்ன பதில் சொல்லுவாள், பாவம்.

"எனக்குச் சங்கிதமென்றால் உயிர். படிப்புக் கூட அவ்வளவு முக்கியமில்லை. உனக்கு ஏதாவது தெரிந்தால் பாடு" என்றார் மறுபடி.

சிவகாமு, ஜானகியிடம் ரகசியமாக "எதையாவது ஒரு பாட்டை நினைவுபடுத்திக்கொண்டு பாடு. அல்லது வீணையில் வாசி" என்று வற்புறுத்தினாள். இரண்டு வருஷமாகத் துருப்பிடிக்கவிட்ட வாத்தியத்தைக் கையில் எடுத்து, மறந்துபோன எதை வாசிப்பது? என்னபாடுவது? ஜானகிக்குத்துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டது. தன்னால் முடியாதென்று மெதுவாகத் தலையை அசைத்தாள்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கோபம் வந்தது. "குழந்தை இரண்டு வருஷமாகப் பாட்டைக் கவனிக்கவில்லை. படிப்பிலே ரொம்ப உத்ஸாகமாக இருந்ததால் நாங்களும் கட்டாயப்படுத்தவில்லை......" என்று இழுத்தார்கள்.

சங்கீத ரசிகர், உடனே "ஓ, அப்படியா—அதனால்தான் நான் Hobby என்னவென்று கேட்டேன். இதெல்லாம் முதலில் தெரிந்துகொள்வது எவ்வளவு நலம், பாருங்கள். உங்கள் பெண்ணுக்குப் பாட்டில் ரசிப்பு இல்லாதபொழுது நீங்கள் அவளைக் கண்டிப்புச் செய்யாதது ரொம்பவும் உத்தமம். நன்றாகப் படிக்கட்டும். நல்ல படித்த கணவன் அவளுக்குக் கிடைப்பான். நான் போய்வரட்டுமா?" என்று உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றாள்.

* * *

வரன் நெ. 3. ஏண்டி சிவகாமு, ஜானகியைப் பார்க்க இன்று யாரோ வராளாமே? என்னவோம்மா. உன் பெண்ணுக்கு இந்த வருஷமாவது கலியாணம் ஆனாத் தேவலை. ஜாதகத்தைப் பாத்தியோ. குருதெசை வந்துடுத்தோ? ஜானகி எங்கேடி?" என்கிறாள் எதிர்வீட்டு அலமேலு.

"வாடி. அலமு. ஜானகி காலேஜில் சேர்ந்தது முதல் ஒரு நிமிஷங்கூட ஒழிவில்லை. ஸதா ஸர்வதா படிப்புத்தான்—அது போராதென்று காலையிலும், மாலையிலும் பாட்டு வாத்தியார் வந்து உயிரை வாங்குகிறார்—குழந்தை வாடிப் போயிட்டாள். என்ன செய்கிறது? இந்த இடமாவது நிச்சயமானால் தேவலை—மூணு வருஷமா எத்தனைபேர் வந்து பார்க்கிறது. எத்தனை ஊருக்கு அவப்பா போகிறது; எவ்வளவு கடிதம் எழுதுகிறது? அலுத்துப்போச்சு. போ" என்றாள் சிவகாமு.

"ஏண்டி இப்பொ வரவா எந்த ஊர்? பிள்ளை என்ன பண்ணறான்?"

"இந்த இடம் கட்டாயம் நிச்சயமாகும்னு எனக்குத் தோணறது. ஏன்னு கேளு. இவா இந்தப் பக்கத்துக்காரா—உத்தியோகமில்லை; குடித்தனம்தான். பிள்ளை எப். ஏ. தேறிவிட்டு ஊருடன் இருக்கிறான். ஒரே பிள்ளை, சொத்து ஏராளமாக இருக்காம். நம்பளை நன்னாத் தெரியும். ஜானகியை மட்டும் இதுவரையில் பார்த்ததில்லையென்று சொல்லலாம். நானே, நாகரிகமாகச் சீரும் செனத்தியும் வேண்டியது செய்யப்போறேன். அவா கட்டாயம் ஒத்துக்கொள்ளுவா என்னுதான் தோணறது".

ஐயோ, பாவம், இந்த வரன் விஷயத்திலும் ஏமாற்றமே வரப்போகிறதென்று சிவகாமு கண்டாளா? ஜானகியோ இப்பொழுது பாட்டும் கற்றுக்கொள்கிறாள் — காலேஜுக்கும் போய்ப் படிக்கிறாள்—எந்த மாதிரியான பரிக்ஷைக்கும் தயாராக இருந்தாளென்றே சொல்லவேண்டும். ஆனால் இப்படியா, குண்டுவிழுந்த மாதிரி, இந்தக் குடித்தனக்காரர் பேசவேண்டும்?

"ஏன் ஸார்—எல்லாம் சரிதான். நான் கேட்கிறேனென்று கோபித்துக்கொள்ளக் கூடாது. உங்கள் பெண்ணுக்குச் சமையல் செய்யத் தெரியுமோ? அவள் நடை உடை பாவனையைக் கவனித்தால், ஆசார விவகாரமே தெரியாதவள் என்றல்லவோ தோன்றுகிறது?' என்றார் மிராசுதார்.

செல்லமையருக்குக் கோபம் பொங்கிவந்தது. "ஐயா, நீங்கள் போய் வரலாம்—காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாலும் உங்கள் வீட்டில் என் பெண் வாழ்க்கைப்பட நான் சம்மதிக்கமாட்டேன். குழந்தையை வளர்த்து, உயர்ந்த படிப்பு, சங்கீதம் இவைகளைச் சொல்லிவைத்தால் அதன் அருமை தெரியாமல், செக்கு மாடுபோல் உன் பெண் உழைப்பாளா என்று கேட்கிறீர்கள். அதற்கு வேண்டுமானால், உங்கள் பிள்ளை ஒரு சமையற்காரியைக் கலியாணம் பண்ணிக்கொள்ளட்டும்—உங்களை வரவழைத்தது என்பேரில் பிசகு"—என்று சீறினார்.

செல்லமையர் பேச வந்தவர்களை இவ்வளவு மரியாதைக் குறைவாக அவமதித்திருக்கக் கூடாதுதான். என்ன செய்யலாம்? தலையில் கைவைத்து வாசலில் போய் உட்கார்ந்துகொண்டார். சிவகாமு, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் தன் வேலையைக் கவனித்தாள்.

* * *

ஜானகிக்கு அன்று ரொம்ப வேதனையாக இருந்தது. இரவு படுக்கையில் படுத்த வண்ணம், தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டே யோசனை செய்தாள்—நடுநடுவில் வாய் விட்டுச் சிரிக்கிறாள். என்னவென்று பார்ப்போம்.

"அப்பா—நல்ல பதில் சொன்னார்—சமையற்காரியைக் கலியாணம் செய்துகொள்ளுங்களென்று.........ஆனால் அம்மாவும், அப்பாவும் ஏனிப்படி வருந்தவேண்டும்?.........நானுகஎம், ஏ. வரையில் படித்து மெள்ளக் கலியாணம் பண்ணிக் கொள்கிறேனே.........சேசே......உம் லலிதா போன மாதம் கலியாணம் பண்ணிக் கொண்டு என்னிடம் என்னசொன்னாள்? "அசடே, கலியாணம்—ஆம்படையான் என்னாலே ஒரு குதூகலம் இருக்குடி.........நீயும் பண்ணிக்கொள். அப்பொ தெரியும்........... அப்பா, அம்மா, தம்பி, தங்கை இவர்களின் அன்பெல்லாம் ஆம்படையான் பிரியத்திற்கு ஒரு ஈடாகுமா? அவருடன் சேர்ந்து சினிமாவுக்கு அன்று போனேன் இல்லையோ! விளக்கு அணைத்ததும் என்ன பண்ணினார் தெரியுமோன்னோ"

"என்னடி பண்ணினார் லலிதா?"

"சீச்சி நான் சொல்லமாட்டேன். நீயும் கல்யாணம் பண்ணிக்கோ, தன்னாலே தெரியும்"

இது வரையில் கல்யாணமே வேண்டாமென்று முரண்டு செய்த லலிதாவே இவ்விதம் பேசுகிறாள். நான் எப்படியும் அம்மா அப்பாவின் திருப்திக்காகவாவது கல்யாணம் செய்து கோள்ள வேண்டியதுதான்........... ஆனால் ஒரு பிள்ளையும் அமையவில்லையே. என்ன செய்யலாம்? அப்பாவோ மனம் நொந்துபோய் விட்டாரே. இந்த நிலைமையில் நான் என்னசெய்தால் நல்லது?........." இவ்வாறு நெடுநேரம் யோசனைசெய்து, ஒரு தீர்மானத்திற்கு வந்தமாதிரி திடீரென்று எழுந்தாள். அன்று காலையில் வந்த பத்திரிகையை எடுத்து வாசித்தாள்.

தேவை-மணமகள்

வடக்கே 500 ரூ மாதவரும்படி உள்ள 27 வயதான, ஒரு டாக்டருக்கு நிதான அழகு, படிப்பு, சங்கீதப்பயிற்சி, வீட்டு வியவகாரம் தெரிந்த மனைவி-வயது 20க்குள் இருக்கலாம். வரதக்ஷிணை தேவையில்லை. 15நாள் லீவில் வந்திருக்கிறபடியால் உடனே கல்யாணம் செய்து கொண்டு, மனைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்புகிறார். தபால்பெட்டி நெ.222"

ஜானகி, இந்த விளம்பரத்திற்குத் தன் தந்தை எழுதியமாதிரி ஒரு பதில் தயார்செய்து, டைப் அடித்து, ஒருவரும் அறியாமல் அதை மறுநாள் தபாலில் சேர்த்தாள்.

* * *

அன்புள்ள ஐயா,

உங்கள் கடிதம் பார்த்து மிகுந்த திருப்தி அடைந்தேன். அனேகமாக உங்கள் குமாரி ஜானகி எனக்கு எவ்விதத்திலும் உகந்தவளாக இருக்கக்கூடுமென்று ஊகிக்கிறேன்-இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைத்த அரைமணி நேரத்தில், நான் நேரில் உங்களைக் காண வருகிறேன்.

என்னைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புவீர்கள், இல்லையா? நான் விளம்பரம் செய்தபொழுது இவ்வளவு தகுந்தமனிதராகிய தம்போன்றவரிடமிருந்து பதில்வருமென்று எதிர்பார்க்கவில்லை. என்னுடைய அதிர்ஷ்டமே அது. சாவகாசம் மிகவும் குறைவாக இருப்பதால், விளம்பரம் செய்யத்துணிந்தேன். எனது பூர்விகம் உங்கள் ஜில்லாவே. முன்பு கைலாசமையர் என்று உங்களுடைய நண்பர் இருந்தாரல்லவா? அவருடைய ஏக புதல்வன் நான். நான் டாக்டருக்குப் படித்து ராஞ்சியில் வேலை பார்க்க வந்தபொழுது, என் பெற்றோரும் கூடவே வந்தார்கள். சென்ற வருஷம் இங்கே நேர்ந்த பிளேக்கு வியாதியில் என் துரதிர்ஷ்டவசமாக இருவரையும் இழக்க நேரிட்டது. தனிமையில் இருப்பது கஷ்டமாக இருப்பதாலும், என் தாய் தந்தையரின் அந்திம சோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டும், 15நாள் லீவில் இந்தப் பக்கம் வந்து கலியாணம் செய்துகொள்வதென்று புறப்பட்டு வந்தேன். இன்னும் 10தினங்களே பாக்கியிருக்கின்றன.

விளம்பரத்திற்குப் பதில் கிடைத்ததில் உங்களதே முதல் கடிதம். மற்றவை பிரிக்காமலே கிடக்கின்றன.

தங்கள்,
ராமநாதன்

மேலேகண்ட கடிதத்தைப் படித்ததும் செல்லமையருக்குக் கோபம் ஒருபுறமும், சந்தோஷம் ஒருபுறமுமாக வந்தன. தன் குடும்பத்தாரை முன்னே திரட்டி, இதை வாசித்துக் காண்பிப்பதற்குள் மந்தஹாஸ முகத்துடன், ஜானகி, "அப்பா, Mr. ராமநாதன் வருவதற்கு இன்னும் 15 நிமிஷங்களே இருக்கின்றன. நான்போய் உடுத்திக்கொள்ளுகிறேன்" என்று கிளம்பினாள். காரியம் யாருடையதென்று தந்தைக்குத் தெரிந்தது. கோபிக்கக்கூட நேரமில்லை!

"ஏண்டி, உன் பெண் எவ்வளவு கெட்டிக்காரி பாரு. ஸ்வயம்வரம் செய்துகொள்ளப் போகிறாள். நம்மாலுந்தான் ஒன்றும் முடியவில்லையே. அவளேதான், நடத்தட்டும்" என்று மனைவியைப் பார்த்துச் சொன்னார். சதிபதிகளுக்கு உள்ளூர அதிக திருப்தியே ஏற்பட்டது.

* * *

கடைசியில், என்ன ஆயிற்று என்று நீங்களே யூகித்துக்கொள்ளலாம் அல்லவா? ஆனால்?

லும் நானே சொல்லிவிடுகிறேனே. ராமநாதன் வந்தான். பார்த்தான். உள்ளத்தைப் பறிகொடுத்தான். எதற்கு? ஜானகியின் வசிகரத்திற்கு. "ஜானகி, நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பது இன்றுதான் தெரிந்தது. என்னைக் கலியாணம் செய்துகொள்ள உனக்குச் சம்மதமென்று உன் தந்தைமூலம் தெரிவித்தாய். ஆனால் ஒரு விஷயம் உன்னைக் கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு நீ ஒரே குழந்தை. உன்னை விட்டு அவர்கள் பிரிந்ததே இல்லை. இப்பொழுது என்னுடன் ராஞ்சிக்கு வந்தால் இன்னும் குறைந்த பக்ஷம் இரண்டு வருஷத்திற்கு இந்தப் பக்கமே எட்டிப்பார்க்க முடியாது. உன் தாய் தந்தையைப் பிரிந்திருக்கச் சம்மதிக்கிறாயாவென்பதை அவர்கள் முன்னிலையில் நீயே எனக்குச்சொல்லு. மற்றப்படி உனக்கு ஒருவிதக் குறைவும் அங்கே கிடையாது. நல்ல ஊர்; என் வீடு, ஆட்கள் எல்லாம் உன் இஷ்டப்படி இருக்கும். மாலை நேரங்களில் எனக்கு வேலை இராது. நல்ல சினிமாக்கள் அங்கே உண்டு........."

இதெல்லாம் ராமநாதன் சொல்வதற்குள் ஜானகிக்கு முகம் சிவந்துபோயிற்று. ஏன், வெட்கத்தினலா? சம்மதமென்று தலை அசைத்தாள். ராமநாதனின் தோற்றத்திலும், சம்பாஷணையிலும் உள்ளத்தைப் பறிகொடுத்தஅவளுக்கு மனதில் ஒரே இன்ப வேதனை குடிகொண்டிருந்தது.

மறு வெள்ளிக்கிழமை சுப முகூர்த்தத்தில் திருப்பதி வேங்கடரமண சுவாமி சன்னிதியில் சௌ. ஜானகிக்கும் சி. ராமநாதனுக்கும் திருமணம் நடந்தது. செல்லமையரும் சிவகாமுவும், ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். மணமகனும் மணமகளும் அமைந்த அழகை அன்று திருப்பதி மலையில் கொண்டாடாதவரே இல்லை.

* * *

கடைசியிலும் கடைசி "ஏண்டி சிவகாமு. ஏது கடிதம்! ஜானகி எழுதியிருக்காளா? பாவம் நேத்திக் குழந்தை, எப்படியடி நீ அவளைத் தனியாகக் கண்காணுத சீமைக்கு அனுப்பிவிட்டே. மாப்பிள்ளை என்னவோ நன்னுத்தான் வெள்ளைக்காரன் மாதிரி இருந்தான். எத்தனையோ ரூபாய் சம்பளம்னு நீயும் சொன்னே. இருந்தாலும் நம்ப பக்கத்துலே ஒரு பிள்ளைக்குக் குடுத்திருந்தா, இப்போ ஜானகி வர, போக எவ்வளவு நன்னு இருக்கும். இருந்தாலும், உங்களுக்கு கல்மனசுதாம்மா—குழந்தையை விட்டுட்டுச் சிரித்துக்கொண்டு இருக்கேளே"—என்று அலமு அங்கலாய்த்தாள்.

சிவகாமு ஜானகியின் கடிதத்தைக் கையில் பிடித்த வண்ணம், "அலமு, இந்தக் கடிதம் வந்து 10 நாளாகிறது. இருந்தாலும் தினமும், திருப்பித் திருப்பிப் படிக்கிறேன். உனக்கும் படித்துக் காண்பிக்கிறேன் கேளு. நாங்கள் சந்தோஷப்படுவது சரியா, தப்பாவென்று நீயே சொல்லு, பார்க்கலாம்."

ராஞ்சி
ஜூலை, 11.

அன்புமிகுந்த அப்பா, அம்மாவின் பாதங்களில் ஜானகி நமஸ்காரம்.

நாங்கள் இங்கே சுகமாக வந்து சேர்ந்து பத்துத் தினங்களாகின்றன. இந்தஊர் ரொம்ப அழகாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் நான் இன்னும் ஊர் முழுவதும் சுற்றிப் பார்க்கவில்லை. ......எங்கள் வீடு ஒரு தனித் தோட்டத்தின் மத்தியில் இருக்கிறது. ஸகலவிதமான சௌகரியங்களும் அதில் உள்ளன.........சமையற்கார மணி, டிரைவர் லக்ஷ்மண் சிங்கு, வீட்டுக்குள் வேலை செய்யும் பையன் நாராயணன், இவர்கள் மூவரும் எங்கள் வேலைக்காரர்கள்—நான் வந்தபிறகு உங்கள் மாப்பிள்ளை, என் வேலையைக் கவனிக்க ஒரு ஆயா ஏற்பாடுசெய்திருக்கிறர்......

எனக்குப் பொழுதுபோவதே தெரியவில்லை. அவ்வளவு ஆனந்தமாகக் காலங்கழிக்கிறேன். ......உங்கள் மருமகனை நான் 'ராமு' என்றே அழைக்கிறேன். இதனால் அவரிடம் நான் மரியாதைக் குறைவாக நடந்துகொள்வதாக எண்ணவேண்டாம். அவர் அவ்விதம் அழைப்பதே தமக்குப் பிடித்திருப்பதாக என்னை வற்புறுத்தியபடியால், கூப்பிடுகிறேன்......... ராமு என்மேல் எவ்வளவு அன்பாக இருக்கிறுரென்பதை எப்படி உங்களுக்குத் தெரிவிப்பேன்? காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை அவருக்கு வேலை இருக்கிறது. மற்ற நேரமெல்லாம் ஒரு நிமிஷமும் என்னை விட்டுப் பிரிவதில்லை............நாங்கள் சேர்ந்தே படிக்கிறோம், எழுதுகிறோம், தோட்டவேலை செய்கிறோம்...............எனக்குச் சமையல் தெரியாதென்று நீங்கள் கவலைகொண்டிருந்தீர்களே, அதில் பயிற்சி ஏற்படும் பொருட்டு, தினமும் இரவில் ஏதாவது ஒரு சமையல் நானே செய்கிறேன். அப்பொழுது ராமு என் பக்கம்விட்டு நகருவதில்லை. நாங்களிருவரும் சேர்ந்தே தின்பண்டங்களை 'ஸ்டவ்' அடுப்பில் தயார் செய்கிறோம். ...............மாலையில் உலாவச் செல்வோம். ......இங்குள்ள சினிமாக்களை நீங்கள் அவசியம் பார்க்கவேண்டும். எத்தனை அழகான ஏற்பாடுகள்! ............முந்தாநாள் ஒரு படம் பார்க்கப் போனோம். அதை நான் மிகவும் ரசித்தேன். ஆனால் மத்தியில் திடீரென்று விளக்குக்கள் நின்றுவிட்டன............அம்மா, லலிதாவின் விலாசம் கேட்டுக்கொள்ளாமல் வந்துவிட்டேனே. அவப்பாவைக் கேட்டு, மறக்காமல், எனக்கு எழுது...............அப்பாவுக்கு என்பேரில் ஏற்பட்ட சிறிது மனவருத்தமும் இப்பொழுது சரியாகிவிட்டதென்றே நினைக்கிறேன்.

தம்பிகளுக்கு என் அன்பு— பிரிய குமாரி
ஜானகி.

லலிதா விலாசம் எழுத மறக்காதே.

சென்ற இதழ் தொடர்ச்சி

# லக்ஷ்யச் சிதைவு

கே. சுந்தரம்மாள்

அன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து புறப்படும் சமயம், சங்கருடன் வேலைபார்க்கும் ஏழெட்டு உத்தியோகஸ்தர்களும் ஒன்று கூடிச் சங்கரிடம் வந்து, மறுநாள் விடுமுறையாதலால், யாவரும் தம்பதிகளாகப், புதிதாக வந்திருக்கும் ஆங்கிலப் படம்பார்க்கச் செல்ல வேண்டுமென்றும் அப்படிச் செய்வதினால், நம்மைப்போல், நமது மனைவிமார்களும் ஒருவருக்கொருவர் தெரிந்து பழகச் சந்தர்ப்பம் வாய்க்குமென்றும் கூறினார் ஒருவர்; சரியென யாவரும் ஆமோதித்தனர்.

"ஒரு விஷயம்: மூன்று வயதிற்குமேல், பதினெட்டு வயதிற்குள்பட்ட எந்த ஆண் பெண்ணும் அப்படத்தைப் பார்க்கக்கூடாது என்று போட்டிருக்கிறார்கள். அதனால் பெரியவர்கள் மட்டும்தான் வரலாம்" என்றார் ஒருவர்.

"அதற்கென்ன, எல்லோர் வீட்டுக் குழந்தைகளையும் ஒரு வீட்டில்வைத்துவேலைக்காரிகளைத் துணைக்கு வைத்துவிடுகிறது" என்றார் மற்றொருவர்.

"அப்படியானால் என் வீட்டில் வரமுடியாது" என்றான் சங்கர். உடனே ஒருவர்:

"ஏன்? உங்கம்மா குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போகாமல் போகக்கூடாது என்று சொல்லுவாள் என்பதுதானே? பரதநாட்டியம், பாட்டுக்கச்சேரி இவைகளுக்குப் பெண்ணைமட்டும்தானே கூட்டி வருகிறீர். மனைவியைக் கோஷாவாக வைத்திருக்கிறீர் அம்மாவுக்குப் பயந்து. சங்கர்! நான் உங்கள் குடும்ப விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்காக மன்னிக்க வேண்டும். தாயாருக்கு மரியாதை கொடுக்க வேண்டுவது அவசியந்தான். ஆனால் எதற்கும் ஓர் அளவு வேண்டும். உமது மனைவியின் குணத்தைப்பற்றி யாவரும் மிக்க உயர்வாகச் சொல்லுகிறார்கள். குழந்தைகளுக்குப் பெற்ற தாயைவிட மூன்றுமடங்கு அதிகமாகச் செய்கிறாள். உங்கள் தாயார் என்ன சொன்னாலும் வாயே திறப்பதில்லை. அப்படியிருந்தும் இளையாள் வஞ்சனை செய்வாள் என்று குழந்தைகளுக்கும் போதித்துத் தானும் சொல்லுகிறாளாம். இவ்விஷயங்களெல்லாம், உம்மைச் சேர்ந்த உறவினர்கள்தான் சொல்லுகிறார்கள். நீங்கள் இவ்விஷயங்களைக் கவனிப்பதே கிடையாதாம். இப்படி நடந்தும் நல்ல பெயர் உண்டா? இளையாள் மோகம், குழந்தைகளைக் கவனிப்பதில்லை என்ற பெயரே உங்களுக்குத் தாயார் கொடுத்திருக்கிறார். வீணாக, ஓர் உத்தமி மனதை நோகவைப்பதுதான் மிச்சமாகிறது. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்கவேண்டும். மனிதர்களின் குணத்தை அறிந்தும் நடக்கவேண்டும். நாளை நீங்கள் தைரியமாக அழைத்துவரவேண்டும். முன்னாடி ஏற்பாடு செய்யுங்கள். புறப்படும் சமயம் என் சம்சாரமும்,கிருஷ்ண சுவாமி சம்சாரமும் வருவார்கள். உங்கள் தாயாருக்குச் சரியாகப் பேசி அழைத்து வந்துவிடுவார்கள்" என்றார்.

"ஆஹா தாயாரின் ஆங்கார குணத்தால் தமது குடும்பம் ஊரில் இவ்விதம் கேவலமாகப் பேசப்படுவதை நினைக்கச் சங்கரின் மனம் கொதித்தது. பதில்பேச வாயில்லை. அன்று காலைச் சம்பவத்திற்கு இது தூபம் போட்டதுபோல் தோன்றினது. சரி அப்படியே" என்று சொல்லிவிட்டு நடந்தான்.

அன்று இரவு பவானியிடம் விஷயத்தைச் சொன்னபொழுது, அவள் இந்தச் சினிமா பார்க்க வேண்டாம், வேறு படத்திற்குக் குழந்தைகளைக் கூட்டிப்போங்கள்" என்றாள்.

"அதெல்லாம் என்னிஷ்டம். நான் சொல்வதை நீ கேட்கவேண்டும்."

வழக்கப்படி பயத்துடன் சரிஎனச் சொல்லிவிட்டாள்.

மறுநாள் மத்தியானம் சாருவைக்கூப்பிட்டுச் சினிமா போகும் விஷயத்தைச் சொல்லி, "நாளை உங்கள் இருவரையும் நல்ல படத்திற்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றான்.

சரியென ஒப்புக்கொண்டு, உடனே பாட்டியிடம்போய்ச் சொன்னாள். உடனேயே "குழந்தைகளை வைத்துவிட்டு என்ன சினிமா வேண்டியிருக்கு? இளையா மோகம் வகையாகப் பிடித்துவிட்டது" என்று கண்டபடி சமையலுள்ளில் நிற்கும் பவானியை அதிகச் சத்தமில்லாமல் திட்டினாள்.

அந்தச் சமயம், "அம்மா! இன்று பெரியவர்கள் மட்டும் பார்க்கக்கூடிய ஓர் ஆங்கிலப் படம் வந்திருக்கிறது. என் சிநேகிதர்கள் யாவரும் குடும்பத்துடன் போவதாகத் தீர்மானம் செய்திருக்கிறோம். சாருவையும்,

பாலுவையும் சித்தப்பா வீட்டில் விட்டுவிட்டுப் போவோம். நாளை அவர்களை நல்லபடத்திற்கு அழைத்துச் செல்லலாம். வருகிறாயா?'' என்று கேட்ட வண்ணம் உள்ளே வந்தான் சங்கர்.

''எனக்கென்னத்திற்கடா இங்கிலீஷும் மண்ணாங்கட்டியும்? இங்கிலீஷ் தெரிஞ்சவாளைக் கூட்டிண்டுபோ'' என்றாள் அமைதியாக.

பவானி சங்கரை நிமிர்ந்து நோக்கினாள். புன்சிரிப்புடன் தலையை அசைத்துவிட்டு வெளியே சென்றான் சங்கர்.

சரியாக ஐந்து மணிக்குச் சொன்னபடி சிநேகிதர்களின் மனைவிகள் இருவரும் வந்துவிட்டார்கள்.

''பவானி புறப்படத் தயார்தானா?'' என்று கேட்ட வண்ணம் வந்தாள் கௌரி.

''வாருங்கள்'' என்று அழைத்தாள் பவானி. ''வாங்கோடியம்மா'' என்று தொடர்ந்து கூறினாள் மாமியார்.

''என்னமாமி! புறப்படுங்கோ, நாழி ஆயிடுத்து'' என்றாள் லலிதா.

''நான் வல்லேடியம்மா. இங்கிலீஷும் விளக்கமாறும் யாருக்கு வேண்டும்'' என்றாள்.

''அப்படியானால் பவானியை அனுப்புங்களேன்'' என்றாள் கௌரி.

''நான் என்ன பிடித்தா வைத்துக்கொண்டிருக்கிறேன். தானே வருகிறாள்.''

''அப்படியா? வீட்டில் பெரியவர்கள் இருந்தால் சந்தோஷமாகப் போய்வா என்று அனுப்பவேண்டும்'' என்றாள் கௌரி.

''ஏண்டியம்மா குழந்தைகள் பார்க்கக் கூடாது என்று ஒரு சினிமாவா? அதை நீங்கள் பார்த்துத்தான் ஆகவேண்டுமோ? உங்கள் குழந்தைகளை எங்கு விட்டிருக்கிறீர்கள்? சாருவும் பாலுவும் அழுகிறார்கள். அவர்களை அழவிட்டு என்ன சினிமா வேண்டியிருக்கு?''

''எங்களில் மாமியார் இருக்கிறபேர்கள் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுகிறார்கள். இல்லாதபேர்கள் எல்லாருடைய குழந்தைகளையும் ஒரு மாமியாரின் மேல்பார்வையில், வேலைக்காரிகளுடன் விட்டிருக்கிறோம். பவானிக்கு அழும் குழந்தைகள் கிடையாது. இவர்கள் உங்கள் சொல்லைக் கேட்கக்கூடியவர்கள்'' என்றாள் லீலா.

''என்ன இருந்தாலும் குழந்தைகளுக்குத் தெரியுமா? அவர்கள் தாயாரானால் அழவிட்டுப் போவாளா?'' என்றாள்.

''மாமி! நாங்கள் பெற்றவர்கள்தான் விட்டு வந்திருக்கிறோம். பெரியவர்கள் இப்படிப் பிளவுபடுத்திப் பேசுவது மிகவும் தப்பு. என் மீது கோபப்படாதீர்கள். உள்ளதைச் சொன்னேன். பெற்றவர்கள் தைரியமாகச் செய்வார்கள். சாரு! சித்தியை விட்டுவிட்டு நீ எவ்வளவு தடவை பாட்டுக்கச்சேரிக்கும், சினிமாவுக்கும் வந்திருக்கிறாய். இன்று குழந்தைகள் வரக்கூடாது என்பது சர்க்கார் சட்டம். சரி, பவானி புறப்படு'' என்றாள் கௌரி.

தான் போனால் மூன்று நாட்களுக்குத் தனக்கு நரக வேதனையுண்டு என்பது நிச்சயமாதலால் தயக்கத்துடன் பின் கட்டிற்குப் போனாள். அவளைத் தொடர்ந்து சென்ற சங்கர், ''பவானி! நீ வராதுபோனால் நாளை நான் ஆபீஸில் தலைகாட்ட முடியாது. எல்லாம் எனக்குத் தெரிந்ததுதான். இதனால் வரும் சன்மானத்தை என் பங்காக ஏற்றுக்கொள்ள வேண்டியதே'' என்றான்.

இச்சொற்கள் அவளுக்கு அமிர்த தாரையாக இருந்தன. நமது கஷ்டத்தை இவரும் அறிந்து தான் இருக்கிறார் என்ற நினைப்பில் அந்தச் சமயம் அவள் மனம் எவ்விதத் துன்பத்தையும் சகிக்கத் தயாராகவே இருந்தது.

''அம்மா, போய்வரட்டுமா?'' என்றாள். பதில் வலித்துக்காட்டினாள்.

அங்கு வந்தவர்களில் பவானியே அதிகம் படித்தவளானபடியினால் மற்றவர்களுக்குப் படத்தின் சராம்சத்தை விளக்கிக் கூறினாள். அவள் மாமியாரைப்பற்றிப் பேசுவரும் பொழுது, ''பெரியவர்கள் என்றால் அப்படித்தான் சொல்லுவார்கள். அது நமது நன்மைக்குத்தான். சற்றுப் 'பட பட' வென்று சொல்லுவாரே தவிர, வேறு ஒரு கஷ்டமும் எனக்குக் கிடையாது. நான் சுகமாகவே இருக்கிறேன்'' என்று சொல்லி விட்டாள்.

''அம்மாடி! என்ன சாமர்த்தியம்? எங்களுக்குத் தெரியாதோ, மாமியாரை விட்டுக் கொடுக்காத பேச்சு'' என்றாள் கௌரி.

இவர்கள் வீடு திரும்பும்பொழுது, யாவரும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிவிட்டார்கள். லக்ஷ்மி தான் கதவு திறந்தாள். அதனால் இரவு எவ்வித அல்லலுமில்லாமல் சாப்பாடு முடிந்தது.

அன்றுவந்த பெண்கள்கூட்டத்தில் தனது மனைவியே அழகுத் தெய்வமாகத் தோன்றினாள் சங்கருக்கு. அதற்கனுகூலமாக அவன் தோழர்கள், ''சங்கர் மிக்க பாக்கியசாலி. இரண்டாந்தாரமாக, இவ்வளவு அழகும், படிப்பும் உள்ள பெண் கிடைப்பதென்றால் பூர்வ ஜன்ம சுகிர்தம்தான்'' என்று புகழலானார்கள். அன்றுதான் தனது காதல் கண்களால் கண்டதுபோல், அன்று இரவு என்றுமில்லாத அன்

பான வார்த்தைகளெல்லாம் கூறினான். அவன் சித்த ஸ்வாதீனத்துடன்தானா பேசுகிறான் என்று சந்தேகம்கூட தோன்றிற்று பவானிக்கு. ஆனந்தத்தில் கழிந்த அந்த இரவு விடிந்ததும் எவ்விதத் துன்பங்களை வரவேற்க வேண்டியிருக்குமோ என்ற நினைப்பும் உணர்த்திக்கொண்டே இருந்தது.

விடிந்தது. வழக்கம்போல் யாவும் நடந்தேறின. மத்தியானம் முழுவதும் சினிமாவுக்குச் சென்றதற்கான ஆசீர்வாதங்கள் நடைபெற்றன. சாயங்காலம் சாருவும் பாலுவும் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்தார்கள். சாரு, பவானி, மாமியார் மூவரும் சமையலுள்ளில் ஏதோ செய்துகொண்டிருந்தார்கள். கூடத்து அறையிலிருந்த பெட்டியைத்திறந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு கிளம்பினான் பாலு. இதை லக்ஷ்மி பார்த்துவிட்டாள்.

"மாமி, பாலு பணத்தை எடுத்துக்கொண்டு போகிறான்" என்று சப்தமிட்டாள் லக்ஷ்மி. அசைவற்று நின்றுவிட்டான் பாலு.

சாரு, பவானி, மாமியார் மூவரும் வந்தார்கள்.

"பொண்டாட்டி கையில் பணம்கொடுத்து, அவள் வைக்கிற லக்ஷணம் குழந்தைகள்மீது பழிபோடத்தான். போடாப்பா, நீயும் வேணுமென்கிறதைச் செலவு பண்ணு" என்று பவானியைத் திட்ட ஆரம்பித்தாளேதவிர பணத்தை வாங்கவில்லை.

"பாலு, பணத்தை இப்படிக் கொடு" என்றாள் பவானி.

"முடியாது, என்ன செய்வாய்?" என்றான்.

வந்தது வரட்டுமென்ற தைரியத்துடன் பணத்தைப் பிடுங்கினாள் பவானி. அவள் முகத்திலும் முதுகிலும் குத்தினான் பாலு.

"என்ன மாமி, அவளை அடித்துக் கொல்லுகிறது, பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே" என்றாள் லக்ஷ்மி.

"நான் என்னம்மா பண்ணுவேன், முரட்டுக் கட்டாலே போரபிள்ளை, ஏ பூடெ! உன்னை வாரிண்டுபூட. அவளை ஏண்டா அடிக்கிறே, வேணுமானா உங்க அப்பனைக்கேட்டு வாங்கிக்கோ" என்றாள்.

அதற்குள் பவானி பணத்தைப் பிடுங்கிக் கொண்டுவிட்டாள்.

"ஏண்டி தரித்திரப் பிணமே. எங்க அப்பா பணத்தை நான் எடுத்துக் கொள்ளுவேன். உனக்கென்ன" என்று சொல்லிக்கொண்டே பக்கத்து ஜன்னலில் வைத்திருந்த காய்கறி நறுக்கும் கத்தியை எடுத்துக் குத்தவந்தான். அவள் நகர்ந்துகொள்ளுவதற்குள், கத்தி பவானியின் கண்ணிற்குமேல் அரை இஞ்சு ஆழமாகப் பதிந்துவிட்டது. ரத்தம் அருவிபோல் கொட்டலாயிற்று. பாலு உள்பட யாவரும் திடுக்கிட்டுப்போனார்கள். சட்டென லக்ஷ்மி ஈரத்துணியினால் நெற்றியை அமுக்கிப் பிடித்துக்கொண்டு, "மாமி, யாராவது ஒரு டாக்டரைக் கூப்பிடுங்கள். கண்ணின்கீழே பட்டிருக்கிறது" என்றாள்.

"இதென்ன இழவு, இப்ப யார் போவா டாக்டரைக் கூப்பிட? சக்கரையை வைத்து அமுக்கு. சித்தப்போனா அவ நல்லாம்படையான் வருவான் டாக்டரைக் கூப்பிட" என்றாள் மாமியார்.

"சற்றுப் பொறுக்கவேண்டாம். இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே பாவானியருகில் வந்தான் சங்கர். திடுக்கிட்டு யாவரும் விலகிக்கொண்டார்கள். "பவானி என்ன நடத்தது?" என்றான்.

பாலு இன்று தொலைந்தான் என்றே யாவரும் நினைத்தார்கள். ஆனால் பவானியின் சொற்கள் யாவரையும் ஆச்சர்யத்தில் அமிழ்த்தின.

"பெட்டியைப்பூட்டுவதற்கு மறந்துவிட்டேன். பாலு ரூபாயை எண்ணிப்பார்த்தான் போலிருக்கு. நான் ரூபாயை எடுத்துக்கொண்டு போகப்போகிறான் என்ற கெட்ட எண்ணத்துடன் ஓடி வந்தேன். பழத்தோல் சறுக்கி விழுந்துவிட்டேன். கீழே கிடந்த கத்தி நெற்றியில் பட்டு விட்டது" என்றாள்.

"ஓஹோ! சரிதான்" என்றான் சங்கர். பவானியின் வார்த்தையில் நம்பிக்கை ஏற்படவில்லை யென்பது அவனது குரலில் பிரதிபலித்தது.

டாக்டர் வந்து கட்டுக் கட்டினார். "நரம்பில் பட்டிருப்பதினால் கண்ணைக்கூட பாதிக்கும். சற்றுத் தவறியிருந்தால் பொட்டில்பட்டு பிராணனே போயிருக்கும். அதனால் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும்." என்று சொல்லிப்போனார்.

இந்தச் சம்பவத்தில் பாலு, சாரு இருவர் மனதிலும் ஓர்வித மாறுதல் தோன்றிற்று. பவானி தன் மீது பழியேற்றுக்கொண்டது பார்த்து அவள் தங்கள் மீது கொண்டுள்ள அன்பைச் சிறிது உணரலானார்கள்.

டாக்டர் சென்றதும், சாரு, பாலு, தாயார், லக்ஷ்மி, பவானி, இவர்கள் நின்றவாறு, "அம்மா! பாலு பணத்தை எடுக்கும்பொழுதே நான்வந்துவிட்டேன். இவர்களைச்சினிமாவிற்கு அழைத்துச்செல்லவே சீக்கிரமாக வந்தேன். அவன் என்னதான் செய்கிறான் என்று பார்ப்பதற்கே மறைவாக நின்றேன். பிறகு நடந்த விஷயங்கள் எனக்குத் தெரியுமென்று சொல்ல

வேண்டுவதில்லை. உன்னால்தான் குழந்தைகள் கெட்டுப்போகிறார்கள். தெய்வம் தாயாரை பிரியும்படி செய்தது. நீ தகப்பனை உயிருடன் இழந்து தவிக்கும் விதம், தகப்பனும் என்ற அன்பில்லாமல் போகும்படி. அவர்களிடம் பவானியின் மீதுள்ள வெறுப்பின் காரணமாக, என்னைத் தூஷித்து அவர்கள் புத்தியைப் பேதலிக்கச் செய்கிறாய். என் மனதைப் புண்ணாக்குகிறாய். உனக்கிஷ்டமில்லாமல் பவானியைக் கல்யாணம் செய்து கொண்டதற்காக அவளை இவ்வளவு கொடுமை செய்கிறாய். அதன் காரணமாக, பெற்ற பிள்ளை என்ற பாசம்கூட இல்லாமல் போய் விட்டது. வீட்டிற்கு வந்தவளை என்ன செய்ய முடியும்? அவளை என்ன செய்தால் உன் மனம் திருப்தியடையும்? அதையாவது வாய் விட்டுச் சொல்லிவிடு. எனக்கு வந்த ஆத்திரத்தில் பாலுவின் இச்செய்கைக்கு நன்றாக உதைத்திருப்பேன். ஆனால் பவானி எதற்காகப் பொய் கூறினாளோ அதைச் செய்யக்கூடாது என்பதற்காகவே பேசாமல் பொறுத்தேன். டாக்டர், நரம்பில் பட்டிருப்பதால் அவள் மனம் அதிர்ந்தால் கெடுதல் ஏற்படும் என்று சொன்னார். என்னால் அவளுக்கு அந்த உபகாரமாவது இருக்கட்டும் என்பதற்கே விட்டேன். உனது கொடுஞ் சொற்களுக்கு ஒருவள் இரையானாள். போனது போகட்டும், இனிமேலாவது பதட்டமில்லாமல், குழந்தைகளையும் பவானியையும் வேற்றுமையில்லாமல் நடத்து.'' என்றான்.

"ஆமாண்டப்பா. உன் பிள்ளை முரட்டுப் பிடை செய்தால் எல்லாவற்றிற்கும் பழியை என்மேல் போடு. ஐயோ தெய்வமே! உன் பவானியைப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணேன். நான் என்ன செய்யக்கிடக்கிறது? 'சிறுமிக்கு இடங்கொடேன், சேம்பிற்குப் புளியிடேன்' என்பது வசனம். அதனால் நல்லது பொல்லாது சொன்னால் அது ஒரு குற்றமா? குடும்பம் பண்ணத் தெரியாத பிள்ளையோடு யார் மாரடிப்பது'' என்று அழுதுகொண்டே சென்றுவிட்டாள்.

பவானி ஒருவாரம் படுக்கையிலிருந்தாள். காயம் குணமாகிக்கொண்டுவந்தது. சங்கர் அவளிடம் வெகுஅன்பாகநடந்துகொண்டான். அம்மாவை எதிர் பார்க்காமல், காப்பி, பக்ஷணம் இவைகளைக் கிளப்பிலிருந்து வாங்கி வந்து, பவானிக்கும் குழந்தைகளுக்கும்கொடுப்பான். சாருவும் "சித்தி, சித்தி'' என்று அவளுக்கு வேண்டியதைச் செய்வது, பக்கத்தில் உட்கார்ந்து அணைத்துக்கொண்டு பேசுவது முதலியவைகளால் பவானியைத் திருப்தி செய்துவந்தாள். காயம்பட்ட மூன்றாவது நாள் பாலு பவானி இருக்கும் அறைக்குள் வந்தான். தலையில் கட்டுடன் படுத்திருக்கும் பவானியைப் பார்த்ததும் அவன் குழந்தை உள்ளத்தில் ஏதோ சொல்ல முடியாத வேதனை செய்தது. "சித்தி''என்றான், கண்களில் நீர் வந்துவிட்டது.

அதைக்கண்டதும் "பாலு இங்கேவா'' என்று கூப்பிட்டாள். அருகில் வந்ததும் பக்கத்தில் உட்கார வைத்துக் கண்ணீரைத் துடைத்துவிட்டு 'ஏன் அழுகிறாய்?' என்றாள். "உன் நெற்றிக்கட்டைப் பார்க்கும்பொழுது என்னவோ செய்கிறது. அன்னிக்கி என்னமோ இப்படிச்செய்து விட்டேன்'' என்றான்.

"போனால் போகிறது அழாதே, காயம் ஆறிவிடும். ஆனால் நீ இனிமேல் இதுவே புத்தியாகப் பணத்தை எடுப்பது என்ற வழக்கத்தை விட்டு விடுவாயல்லவா'' என்றாள்.

"சித்தி இனிமேல் அப்படிச் செய்வேனா. இதுவே என் ஆயுள் மட்டும் மறக்க முடியாதே. தெரியாமல் ஒருபைசாகூட எடுக்கமாட்டேன். புத்தி வந்தது. உன்காயம் ஆறினால் போதும். அதுதான் பயமா இருக்கு'' என்றான்.

"பயப்படாதே தாவளையாகப்போய்விடும்'' என்று சொல்லியபடி அவனை அழைத்து ஒரு முத்தமிட்டு விட்டுவிட்டாள். வெளியிலிருந்து இதைப்பார்த்துக்கொண்டிருந்த சங்கர், ஆஹா இவளையும் நாம் சந்தேகப்பட்டுக் கடுமைப் படுத்தினோமே'' என்று நினைத்தான்.

பவானிக்கு ஒருவாரத்தில் காயம் ஆறிப் பிளாஸ்திரி போடும்படியான நிலைமைக்கு வந்தது. சாதாரணமாக எழுந்து நடமாடலானாள். அன்று சனிக்கிழமை. குழந்தைகள் பள்ளிக்கூடம் போகவில்லை. சமையலுள்ளில் பாட்டியுடன் பக்ஷணத்வம்சம் செய்துகொண்டிருந்தார்கள். சங்கர் ஆபீஸ் சென்றிருந்தான். மாடியில் பெஞ்சியில் படுத்தபடி பேப்பர் படித்துக்கொண்டிருந்தாள் பவானி. ஏதோ காலடிச் சப்தம் கேட்கவே முகத்திற்கு நேர் பிடித்திருந்த பேப்பரை மடக்கினாள். சங்கர் அவள் பக்கம் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து நின்று, "இன்று என்ன இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டீர்கள்? உடம்பிற்கு ஒன்றுமில்லையே'' என்றாள் பதட்டத்துடன்.

பெஞ்சியில் உட்கார்ந்து அவளையும் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு "ஏன் பதறுகிறாய்? உடம்பிற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஓர் விசேஷத்துடன்தான் வந்திருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே பெஞ்சியின் மீதுள்ள தலையணையில் சாய்ந்துகொண்டான்.

"என்ன விசேஷம்?''

"ஆபீஸ் விஷயமாக இன்று இரவு மெயிலில் பெங்களூர் போகவேண்டியிருக்கிறது. வருவதற்கு ஒருவாரமாகும். உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே? நான் போய்வரட்டுமா?'' என்றான்.

"எனக்கு உடம்பிற்கு ஒன்றுமில்லை. அவசியமானால் போகவேண்டியதுதானே?'' என்றாள்.



உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

**காமினியா ஆயில்**

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

**ஆட்டோ டில்பகார்**

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

**எங்கும் கிடைக்கும்**

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிலோ - இந்தியன்**
**டிரக் & கெமிகல் கம்பெனி,**
பம்பாய்—2

பத்துநாளாக யோசனை செய்து அவசியம் என்று தோன்றினபடியால்தான் புறப்படத் தீர்மானித்தேன். ஆனால்........." என்று நிறுத்தினான்.

"ஆனால் என்ன? உங்களுக்குப் பிரயாண அலுப்பு. எனக்குப் பிரிவின் துன்பம்" என்று அவன் பாதங்களை வருடியவாறே கூறினாள்.

"இப்படி எவ்வளவோ தடவை சென்றிருக்கிறேன், அப்பொழுதெல்லாம் நீ இவ்விதம் சொல்லவில்லையே" என்று சிரித்தவாறே கூறினான்.

"நான் இப்படிச் சொல்லுவதற்காக மன்னிக்கவேண்டும். தாங்கள் இவ்வளவு அவகாசமாக என்னிடம் பேசியதுண்டா? நீங்கள் வண்டி ஏறும் பொழுது இன்ன ஊருக்குச் செல்லுகிறேனென்று சொல்லுவீர்கள். உங்களிடம் பேசவே எனக்குப் பயமாக இருக்கும். சில சமயம் நீங்கள் நடந்துகொள்ளும் மாதிரி, என்னை தங்களுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கு என்று நினைப்பேன். அந்தச் சமயம் குழந்தைகளினால் ஆறுதலடையலாம் என்று சமாதானம் செய்து கொள்ளுவேன். மயக்கம் வந்து விழுந்ததும் ஒரு நல்லகாலம் தான் என்று நினைக்கும்படி, தாங்கள் என்னிடம் நடந்து கொள்ளும்விதம் மனம்விட்டுப்பேசத் தைரியம் உண்டாகிறது. வாழ்வின் லக்ஷ்யத்தில் நம்பிக்கை இழந்த சமயம் மாறி, சற்று ஆறுதலடையும் சமயம் தங்கள் 'பிரிவு' என்று சொல்லும் வார்த்தை, என்னையறியாமல் என் மனதில் வேதனையை உண்டாக்குகிறது" என்று சொல்லும்பொழுதே கண்களில் நீர் தளும்பிற்று.

"அட அசடே! ஏன் வருத்தப் படுகிறாய்? உன்னைப் பிடிக்கவில்லையா? ஆழ்ந்து சிந்தித்தால் அதைத் திருப்பிக்கூறவேண்டும். உன்னை அடைய ஜன்மாந்தரத்தில் என்ன புண்யம் செய்தேனோ? உன்னத நிலைமையில் வாழ வேண்டியவள், குரங்கின்கைப் பூமாலையாகப் போனது உனது வாழ்க்கை. வருத்தப்படாமல் இயற்கையான புன்சிரிப்புடன், சற்று நேரம் என் மனதை நிம்மதியாக இருக்கும்படி செய்" என்று சொல்லியவண்ணம் அவளை அருகி விழுந்து அணைத்து முத்தமிட்டான்.

இவ்வளவு நாளுமில்லாமல் இப்படி நூதனமாக நடந்துகொண்டதால் லஜ்ஜையும், இன்ப உணர்ச்சியும், ஒருங்கே வதைத்தன பவானியை.

சற்றுப்பொறுத்து அவளைவிட்டு விலகி உட்கார்ந்து, "சாரு! பாலு!" என்று கூப்பிட்டான். இருவரும் ஓட்டத்தில் வந்தார்கள். சாரு தகப்பன் பக்கத்தில் ஸ்வாதீனத்துடன் உட்கார்ந்தாள். பாலு சற்று எட்டவே நின்றுகொண்டிருந்தான். அவனை இழுத்து மடிமீது உட்கார வைத்துக்கொண்டான். பாலுவுக்கு இச்செய்கை ஆச்சர்யமாகத் தோன்றிற்று. பாலு முரட்டுக்குணத்தினால் துஷ்டத்தனம்

செய்வதால், சங்கர் அவனிடம் கடுமையாகவே நடந்துகொள்வான். வீட்டில் சங்கர் ஒருத்தனுக்குத்தான் பாலு பயப்படுவான். தாதாவைக்கூட எட்டி அடித்துவிடுவான். சங்கர் கூப்பிட்டாலொழிய அவன் இருக்குமிடம் வரமாட்டான். சாருமதி எப்போழுதும் அடக்கமாக நடந்து கொள்ளுவாள். சங்கர் அவளிடம் சிரித்து விளையாடிப் பேசுவான். ஒருசமயம் கோபித்துக்கொண்டாலும், தகப்பனிடம் விளையாட்டுப் பேச்சில் குற்றத்தை மறைத்து விடுவாள். அனேகமாக, பாலுவும் பவானியும், சங்கரிடத்தில் ஒரேவிதமான பான்மையுடன் தான் இருந்தார்களென்று சொல்லலாம். அதனால் இன்று சங்கருடைய செய்கை இருவருக்கும் ஆச்சர்யத்தை கொடுத்தது.

இருவரையும் இருகைகளில் அணைத்து கொண்டு "நான் ஊருக்குப் போய்விட்டு வறேன். வர ஒரு வாரமாகும். இருவரும் சமத்தாக இருக்கவேண்டும். பாலு! சித்தியைக் கத்தியால் குத்தமாட்டேயே?"

"இல்லையப்பா! இனிமேல் அப்படியெல்லாம் செய்யமாட்டேன். சித்தி சொன்னபடி கேட்கிறேன்" என்றான்.

"எந்த ஊருக்கப்பா போகப்போகிறீர்கள்?" என்றாள் சாரு.

"பங்களூர் வரை போய்வருகிறேன் சாரு! நீ இனிமேல் பெரியபெண்ணாக மதிக்கப்படுவாய். சித்தியினிடம் பாட்டுச் சொல்லிக் கொள்ளவேண்டும். பாட்டியினிடம் சண்டை போடக்கூடாது. பாட்டி பேச்சைக் கேட்டுக் கொண்டு, சித்தியிடம் விரோதம் காட்டக் கூடாது. சித்தி நன்மைதான் செய்வாள் என்ற நினைப்புடன் நடக்கவேண்டும். பாலு, சாரு, நீங்களிருவரும் சித்தியைப் பார்த்துக் கொள்ளவேண்டும். பவானி, நீ குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவேண்டும். பாட்டியினிடம் மூவரும் ஒற்றுமையாக நடக்கவேண்டும்" என்றான்.

இரண்டு குழந்தைகளையும் முத்தமிட்டு விட்டு, எழுந்து பிரயாணத்திற்கு வேண்டியவைகளைக் கவனிக்கச் சென்றான். பவானிக்கு யாவும் ஸ்வப்பனத்தில் நடப்பது போலிருந்தன. சாப்பாடு முடிந்தது. உடுத்துக்கொள்ள மாடிக்குச் சென்றான். உடுத்துக்கொண்டதும், பவானி மடித்துக் கொண்டிருக்கும் வெற்றிலையை வாங்கிப் போட்டுக்கொண்டபடி "பவானி என்னை மன்னிப்பாயா?" என்றான்.

"மன்னிப்பா? எதற்காக?" என்றாள்.

இவ்வளவு நாளாக உன்னிடம் ஒரு மிருகம் போல் நடந்துகொண்டதற்கர்க."

"ஐயோ இது என்ன பேச்சு. யார்யாரை மன்னிப்பது? இன்று உங்கள் பேச்சுக்களும் செய்கைகளும் இயற்கைக்கு மாறாக இருக்கின்றனவே. என்மனம் என்னமோ வேதனை அடைகிறது. ஏன் இப்படி?"

"ஒன்றுமில்லை, கவலைப்படாதே" என்று அவள் மூச்சுத்திணறும்படி இறுக அணைத்துக் கொண்டான். ஒன்றும் விளங்காமல் அவன் தோளில் சாய்ந்தவண்ணம் கண்ணீர்வடிய நின்றாள்.

குழந்தைகள் படியேறிவரும் சப்தத்தைக் கேட்டு அவளைவிட்டு விலகிநின்றான். அவர்கள் அருகில் வந்ததும் இருவரையும் சேர்த்து அணைத்துக்கொண்டான். அவர்களை விட்டு நிமிரும்பொழுது சங்கர் கண்களில் நீர்வழிந்தது.

"ஒரு வாரத்தில் சென்று திரும்புவதற்கு என்றுமில்லாத விதம் நடந்துகொள்ளுகிறாரே! இதன்காரணம் என்ன?" என்று ஒன்றும் புரியாமல் சொல்லமுடியாத வேதனையில் அவளும் அழுதுவிட்டாள். இவர்களைப்பார்த்துக் குழந்தைகளும் அழத்தொடங்கின. சங்கரே அவர்களைச் சமாதானம் பண்ணிக் கீழே அழைத்து வந்தான். தாயாரை நமஸ்காரம் செய்துவிட்டு "அம்மா போய்வருகிறேன். குழந்தைகளையும் பவானியையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்" என்றான்.

"இப்ப என்ன சீமைக்குப் போறாப்போலே சமாசாரம் சொல்லறையே. பார்த்துக்காதே இத்தனை நாளும் என்ன செய்தாளோ? அதுபோல் நடக்கும்." என்றாள்.

"ரிக்ஷாவில் உட்கார்ந்ததும் நிமிர்ந்து மாடியை நோக்கினான். கண்களில் நீர்ததும்பப் பவானி நின்றுகொண்டிருந்தாள். கைக்குட்டையை வீசினான். அவளும் கையை ஆட்டினாள் உணர்வில்லாமல். தலைமறையும் வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டுப் படுக்கையில் போய்க் குப்புறவிழுந்தாள். வாய்விட்டுக்கதறவேண்டுமெனத் தோன்றிற்று. இதென்ன? எவ்வளவோ தடவை இவ்விதம் பிரயாணம் சென்றிருக்கிறார். அவரும் இவ்விதம் நடந்துகொண்டதில்லை. நமக்கும் இவ்விதம் துக்கம் உண்டானதில்லை. இது நன்மைக்கா, தீமைக்கா? என்பது தெரியவில்லை. "ஈசுவரி! எல்லாவற்றிற்கும் நீதான் துணை" என்ற நினைப்பில் சற்று நேரம் அசைவற்றுக் கிடந்தாள்.

குழந்தைகள் விளையாட்டில் யாவற்றையும் மறந்துவிட்டார்கள்.

"என்னி இன்னிக்கு நமஸ்காரமெல்லாம் பலமாக இருந்தது. பாத்துக்கோ கேத்துக்கோன்னு தடபுடலாக இருந்ததே. என்ன அதிசயம் ஆம்படையான் ஊருக்குப் போனால் இப்படி அழுது மூஞ்சி வீங்கிப் போகவேண்டுமோ. எல்லாம் அதிசயமாகத்தான் இருக்கிறது. அடீ சாரு! 'நடலபுடலங்காய் காய்க்குதடீ,

நாழிக்குப் பத்தெட்டு விக்குதடீ' என்றாளாம். உங்களை வாரிண்டுபூட, பாடைஎடுக்க, வந்து கொண்டிண்டு தொலையுங்கோ" என்ற சஹஸ்ரார்ச்சனையுடன் இரவு சாப்பாடும் படுக்கையும் நடந்தன.

ஒரு வாரமும் ஒருவிதமாகக் கழிந்துவந்தது. பவானிக்கு அவளை அறியாமலே மனம் வேதனையில் சுழன்றது. சங்கரின் சமீப நடத்தையை நினைக்கும்பொழுது மனிதனின் மனம் ஒரு நிலையில் நில்லாது என்பது எவ்வளவு உண்மை என்று தோன்றும். தனக்குள் சிரித்துக்கொள்ளுவாள்.

சாருவும் பாலுவும் தகப்பனார் புறப்படும் சமயம்இருந்த மனப்பான்மையால் பவானியின் மேல் அனுதாபங் கொண்டனர். பாட்டிபேச்சைக் கேட்டுக்கொண்டு சித்தியிடம் சண்டை போடக்கூடாது என்று நினைத்தார்கள். பாட்டியின் சந்நிதானத்தில் நடக்கும் ஆராதனை அர்ச்சனைகளில் கலந்துகொண்டதும் பழைய படி பவானியின்மீது விரோதபாவமே தலை தூக்கி நின்றது. இருந்தாலும், பாலு பவானியினிடத்தில் மரியாதையாகவே நடந்துகொண்டான்.

சங்கர் சென்று பத்துத் தினங்களும் சென்றுவிட்டன. கடிதமும் வரவில்லை. அவனும் வரவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. மத்யானம் பன்னிரண்டுமணி சமயம். கதிரவன் கடுமையான கிரணங்களை வீசியபடி சென்றான். வைகாசி வசந்தம் வானவெளியில் மறைந்ததுபோல் தாபஜ்வாலையில் தவித்தது உலகம். அடிக்கும் சிறு காற்றும் அக்னி ஜ்வாலை போலிருந்தது. குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்றிருந்தார்கள். லக்ஷ்மியும் வீட்டிலில்லை. பவானியின் மாமியாரும் தன் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தாள். பவானி அன்று எண்ணெய்தேய்த்து ஸ்னானம் செய்திருந்த படியினால், தலையை விரித்தவாறு கைகளினால் சிக்கெடுத்த வண்ணம், கூடத்துத் தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் ஹிந்துப் பேபர் கிடந்தது. அதன் முகப்பில் இவளைப்போல் தலையைவிரித்த வண்ணம் உட்கார்ந்திருந்த சினிமா மங்கையின் படம் வரையப்பட்டிருந்தது. அஃதையே உற்று நோக்கின பவானியின் கண்கள். மனம் எங்கெல்லாமோ சுற்றியலைந்தது. கடைசியில் ஒரு நீண்ட மூச்சுவிட்டாள். பிறகு "உன்னுடைய உண்மையான வாழ்க்கை எப்படியோ? நடிப்பில் என்னைப்போல் கணவனுடைய உண்மை நிலைமையறியாமல் தவிக்கிறாய்போலும்" என்று வாய்விட்டுக் கூறினாள். அடுத்த நிமிஷம்,

"அம்மா! போஸ்ட்" என்று கதவின் வழியாக இரண்டு கவர்களை போட்டுவிட்டுச் சென்றான் தபால்காரன். ஓட்டத்தில் சென்று கவர்களை எடுத்தாள். ஒரு கவரின்மீது "ஸ்ரீமதி பவானி சங்கர்" என்றும், மற்றொன்றில் "ஸ்ரீமதி முத்தம்மா அவர்கள்" என்றும் எழுதியிருந்தது. இதுவரை இது மாதிரி கடிதம் அவளுக்கு வந்தது கிடையாது. அதனால் இது சங்கரிடமிருந்து தான் என்ற தீர்மானத்துடன் உறையைக் கிழித்தாள். நான்கு பக்கங்கள்கொண்ட நீண்ட கடிதமாக இருந்தது. ஆர்வத்துடன் படிக்கலானாள். படிக்கும்பொழுதே, பயம், ஆச்சர்யம், சோகம், சந்தோஷம், முதலிய பாவங்கள் அவள் முகத்தில் தோன்றி மறைந்தன.

அன்புள்ள பவானிக்கு அனேக ஆசிர்வாதம்.

இவ்விடம் நான் ஸௌக்யமாகவே இருந்து வருகிறேன். அவ்விடம் அம்மா குழந்தைகள், நீ, யாவரும் ஸௌக்யமா? அப்பா ஊரிலிருந்து வந்துவிட்டாரா? பவானி! கீழே நான் எழுதியிருக்கும் விஷயங்கள் உனக்கு மிகவும் வியப்பைக் கொடுக்குமென்பது உண்மை. நான் சொல்லும் விபரப்படி நடப்பாய் என்ற நம்பிக்கையுடன் நான் இக்கடிதம் எழுதுகிறேன்.

நீ என்னிடம் வந்து இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. ஆனால் இந்த இரண்டு வருஷங்களில் நான் உன்னிடம் நடந்துகொண்ட முறையானது உன் நிலைமையிலுள்ள எந்தப் பெண்களும் சஹிப்பது கடினமான விஷயம் தான் என்பதை என்மனம் அறிந்தே அவ்விதம் நடந்தேன். அப்படிச் செய்தது மூடத்தனம் என்பதைப் பின்னால்தான் அறிய முடிந்தது. "மாற்றாந்தாய்" என்றால் குழந்தைகளைக் கவனிக்கமாட்டாள் என்ற உலக வசைச்சொல்லை படித்த முட்டாளாகிய நானும் நம்பியே உன்னிடம் வெறுப்புக்கொண்டதுபோல் நடந்தேன். அப்படியிருந்தால் எனது அன்பைப் பெறுவதற்காகக் குழந்தைகளினிடம் அன்பாக நடந்துகொள்ளுவாய் என்ற நினைப்பினால் பொங்கியெழும் காதலைத் தலைதூக்காமல் நசுக்கி வந்தேன்.

நான் எவ்விதம் நடந்துகொண்டாலும் நீ சற்றும் மனஞ்சலிக்காமல், என்னிடம் காரணம் யாதொன்றும் கேட்காமல், பொறுமையுடன் ஒரே நிதானமாக நடந்துவந்ததைப் பார்க்கும்பொழுது, உனது ஹ்ருதயப் பெட்டிக்குள் மூடி வைத்திருக்கும் காதலின் ஜோதியைக் காணமுடியாத நிலைமையில், படித்த மமதை, சமத்வம் கோரும் மனப்பான்மை, அதனால் நமது அன்பு தேவையில்லை என்ற முடிவிற்கு வந்தவனாக நடந்துவந்தேன். உனது உடலின் நிலைமையையோ ஹ்ருதயத்தின் பண்பையோ பற்றி நான் கவனம் எடுத்துக்கொள்ளவேயில்லை. அன்று நீ மயக்கம்போட்டு விழுந்தபொழுது டாக்டர் கூறிய வார்த்தைகளினால் உணர்ச்சிபெற்று, காதலின் கண்ணால் பார்க்கத் தோன்றினது. கல்யாண காலத்தில் கடைந்தெடுத்த தந்தப் பாவைபோல் மாலை

போட்ட பவானியா? கண்களில் வட்டமிட்ட கோடு விழுந்து உருமாறி குச்சிக்கையும் காலுமாகக் கட்டிலில் படுத்திருக்கிறாள் என்று தோன்றினது. அதன் பிறகே எனது நடத்தை உனது ஹ்ருதயத்தை எவ்வளவு தூரம் பாதித்துவிட்டது. என்ற உணர்ச்சி புலனாயிற்று. கட்டிய கணவன் தன் கடமையைச் செய்யத் தவறிய குற்றத்திற்குத் தண்டனை என்னவென்பது தெரியவில்லை. அதற்குப் பிராயசித்தமாகக் கீழேகண்ட முடிவிற்கு வந்தேன்.

அம்மா உன்னிடம் எவ்விதம் நடந்து கொள்ளுவாளென்பது எனது மனம் அறியாத விஷயமா? ஆனாலும் உனக்கு அது வேண்டியதே என்று ஆரம்ப காலத்தில் நான் நினைத்ததுண்டு. அம்மாவின் ஆங்கார சொருபத்திற்கு யாராவது ஆளாக வேண்டுமென்பது சட்டம். அது அவள் ஜன்ம குணம். துவக்கத்தில் அப்பா அவளுடன் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார். கடைசியில் சண்டையிலேயே முடிந்தது அவர்களது தாம்பத்யம். பிறகு கல்யாணம் ஆகும் வரை நான், அருமைக் குழந்தையாகிய நானும், அந்த ஆங்கார வெறிக்கு ஆளாகி வந்தேனென்றால் சாருவின் தாயார் அதற்குத் தப்பமுடியுமா? பிறகு என்னிடம் அதிகமாகப் பாயமாட்டாள். ‘செத்துப்போன பிள்ளை முத்துகிருஷ்ணன்’ என்பதுபோல் உன்னிடம் அவளைப்பற்றிச் சிலாகிக்கிறாளே தவிர அவள் பட்டிருக்கும் பாடு அனந்தம். பிறகு நீ அகப்பட்டாய்; நீ எங்காவது சென்றுவிட்டால், நிச்சயம் அநேகமாக வளர்க்கும் சாருவும் பாலுவும் அதற்கு ஆளாவார்கள். இது நிச்சயம். நீ இதை அனுபவத்தில் கூடிய சீக்கிரம் காண்பாய். அது அவள் ஜன்ம குணம்.

சாருவின் தாயார் செல்வமாக வளர்ந்தவள். வீட்டு வேலையில் பழக்கங் கிடையாது. ஆனால் பிடிவாத குணம் அசாத்யம். அவள் பிடிவாதம் அம்மாவிடம் செல்லாது. அதைச் சேர்த்துவைத்து என்னிடம் காண்பித்துவிடுவாள். தினம் இரவில் பாதி அவள் அழுகையைச் சமாதானப்படுத்துவதிலே கழிந்துவிடும். என்னால் கூடியமட்டும் அவளின் பிடிவாதத்தையும், துடுக்கு வார்த்தைகளையும், அம்மாவின் கொடுமையின் பொருட்டுப் பொறுமையுடன் சஹித்து வந்தேன். இருந்தும் வாழ்க்கையில் வெறுப்பே தோன்றலாயிற்று. இவ்வளவிற்கும் பாதிநாள் பிறந்தவீட்டில்தான் இருப்பாள். வந்த சமயங்களிலும் வாழ்க்கை ரசமற்றதாகவே தோன்றும். ஆனால் என் மீது அளவற்ற அன்புகொண்டவள் என்பதை என் மனம் அறியும். அவள் எது சொன்னாலும் தணிந்தே போவேன். நான் சொல்லுவதையும் அதிகம் தட்டி நடக்கமாட்டாள். அப்படியிருந்தும் எங்கள் வாழ்க்கைப் பூங்காவில் மணமுள்ள காதல் மலர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. அது எதனால் என்பது



என் மனதிற்கே எட்டவில்லை. ஒரு சமயம் அம்மாள் ஆங்காரத்தில் வெடிக்கும் வார்த்தைக்குண்டுகளே காரணமாக இருக்கலாமோ என்ற எண்ணம் பிறகுதான் தோன்றிற்று. அவள் என்ன நினைப்பில் வாழ்க்கை நடத்தினாளோ? கடைசியில் இரண்டு வருஷம் வியாதிப்படுக்கையில் கிடந்து, அன்பின் பரிசாக இரு குழந்தைகளையும் என் காலில் கட்டிவிட்டு, அம்மாவின் கொடுமையினின்றும் விடுதலை பெற்றுவிட்டாள்.

அவள் இறந்தபின் நிம்மதியாயிற்று. ‘இனி ஒரு பெண்ணின் வாழ்க்கையையும் கெடுக்க வேண்டாம்’ என்ற எண்ணத்துடன் ஒருவர் பேச்சையும்கேளாமல் ஒருவருஷம் கழித்தேன். ஆனால் மனிதனின் குணம் காலத்திற்கு அடிமையாகிவிடுகிறது என்பது எனது விஷயத்தில் உண்மையாகிவிட்டது. வீட்டில் அம்மா ‘எனக்குத் தள்ளவில்லை, வேலை செய்ய முடியவில்லை, கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டும்’ என்று பல்லவி பாடத் தொடங்கி விட்டாள். உதவிக்கு ஆள் வைத்தேன். இவளது வசைச்சொல்லைப் பொறுக்கும் சக்தியைக் கூலி வேலை செய்பர்களிடம் எதிர்பார்க்கமுடியுமா? ஒருவரும் தங்கி வேலை செய்ய மாட்டேனென்றுவிட்டார்கள். எனக்கும் அலுத்து வரும் சமயங்களில் இன்முகத்துடன் வரவேற்க ஓர் ஆள் தேவை என்று தோன்றும் சமயம் உன்னைப் பார்க்கும் கட்டம் வந்தது. உனது அழகுக்கேற்ற வரன் நான் அல்லவென்பதை என் அறிவு நினைப்பூட்டிற்று. ஆனாலும் உனது வசிகரத் தோற்றத்திற்கு என் மனம் அடிமையாகாமல் தடுக்க முடியவில்லை. அத்துடன் படித்த பெண், நன்றாக வீணை வாசிப்பாள் என்பதைக் கேட்டதும், குழந்தைகளுக்கு மிக்க உதவியாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் ஒரு நாளாவது உனது வீணா கானத்தை நான் அனுபவிக்கவில்லை. ஒரு நாள், அம்மா வாணியின் கல்யாணத்திற்குச் சென்றிருந்தபொழுது, தன்னை மறந்து நீ வீணை வாசித்துப் பாடிக்கொண்டிருந்தாய். அந்தச்சமயம் என் மனம் அடைந்த ஆனந்தத்திற்கு எதுவும் ஈடாகாது. அப்படியிருந்தும், உனக்கு அவ்விஷயம் தெரியாமலிருக்கவே எனது ஆணவத்தால் விரும்பினேன். இப்பொழுது தோன்றுகிறது அசட்டுத்தனம், எடுத்து வைத்தும், கொடுத்து வைக்கவில்லையென்பது.

பவானி! உண்மையை ஒப்புக்கொள்வதில் வெட்கமென்ன? குழந்தைகளின் தாதியாக இருக்கத் தகுந்தவள் என்ற எண்ணத்துடன் உன்னை ஏற்றுக்கொண்டேன். பிறகும் மனதிலெழும் உணர்ச்சியை அடக்கி உனது குணமறியாமல் குழந்தைகளின் நலத்திற்கே உனது வாழ்க்கை அர்ப்பணமாகவேண்டுமென்று நினைத்தேன். பெண் உள்ளத்தின் கொந்தளிப்பை, —காதலின் வேகத்தை அறியும் சக்தியற்ற நடைப்பிணமானேன்.



பிஸி. இரண்டாம் நூற்றாண்டில் ஸ்நானம் செய்வது இன்புறவேண்டிய ஓர் முக்கிய காரியமாயிருந்தது. கல்லில் செதுக்கின மஞ்சத்தின்மீது இராஜவம்ச ரமணிகள் சொகுசாகச் சாய்ந்துகொண்டு விற்றிருக்க, தாதிமார்கள் ஜலத்தில் ஊறவைத்துச் சுத்தமான நுரை வரும்படி செய்துள்ள ஸோப்புக் காய்கள் தேய்த்து அவர்களை ஸ்நானம் செய்வித்து வந்தனர். இன்றோ, இன்னும் மேலானதும். அதிக ஸௌகரியமுமான வழிதான் எல்லோருக்குமிருக்கிறதே—அதாவது ஹமாம் ஸோப்பு! ஹமாமின் நறுமணங்கமழும் ஏராள நுரையானது மயிர்க்கண்களினுள் ஊடுருவிப் பாய்ந்து நன்கு சுத்தம் செய்வதோடு களைப்பை நீக்கி மட்டற்ற உற்சாகமும் சுகமும் அளிக்கவும் செய்கிறது.

# ஹமாம்




உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியவீதி P.B. நெ. 31 சென்னை

பவானி" பிரிவு" என்பது பார்வைக்குத் துன்பமாகத் தோன்றினாலும் அதனால் அநேக நன்மைகளும் உண்டாகும்; இப்பொழுது நான் செய்திருக்கும் ஏற்பாட்டினால் குழந்தைகள் உனது உண்மை நிலைமையை அறிந்து கொள்ளுவார்கள். அம்மாவின் ஆங்கார சொருபத்தில்கூட கொஞ்சம் மாறுதல் காணலாம். உண்மைக் காதல் பிரிவினால் அதிகம் தொடர்பை உண்டாக்கும்.

நீ மயக்கத்தில் விழுந்த அன்று டாக்டரின் சொற் சாதுர்யம் உறங்கிக்கிடந்த எனது மன வெழுச்சியைத் தட்டி எழுப்பிற்று. அதிலிருந்து சிந்தனை சக்ரமானது பல வழிகளில் சென்று கடைசியில் இந்த எல்லையில் வந்ததும் சட்டென நின்று விட்டது. மேலே ஓடுவதற்கு வசதியில்லை. அதனால் இந்த ஏற்பாட்டைச் செய்தேன். அப்பாவுக்கும் எழுதினேன். அவர் கண்டித்து வருத்தப்பட்டாலும், காரியம் மிஞ்சிவிட்டதால் மேல் நடக்கும் விஷயங்களில் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுவதாக வாக்களித்துவிட்டார்.

நான் யுத்த வேலையில் சேர்ந்துவிட்டேன். மாதம் முந்நூறு ரூபாய்கள் உன் பெயருக்கு வரும். அதில் நூற்று இருபத்து ஐந்து ரூபாய்களை நீ வைத்துக்கொண்டு பாக்கியைக் குழந்தைகளுக்கும் அம்மாவுக்குமாக அம்மாவிடம் கொடுத்துவிடு. எனது யுத்தப் பணியினால், உனக்குப் படிக்க வசதி கிடைக்கும். நீ அவசியம் பி. ஏ. வ்குப்பில் சேர்ந்துவிடு. உன் தமையனுக்கு எல்லா விபரமும் எழுதியிருக்கிறேன். அவனும் வருவான், அப்பாவும் வேண்டியதைச்செய்வார். நான் எல்லாவித ஏற்பாடுகளும் செய்துவிட்டு வந்திருப்பதினால் சிரமமின்றி யாவும் நடைபெறும். நான் சீக்கிரம் திரும்பி வந்தாலும் எல். டி. க்கோ டாக்டருக்கோ படிப்பதற்கு நிச்சயம் வசதி அளிப்பேன். நாட்கள் சென்றாலும் படிப்பது அவசியம். விதியானது உனது வாழ்க்கைப் பாதையை எந்தத் திக்கில் திருப்பிவிட்டாலும், கல்வி, உனக்கு வழிகாட்ட உதவும். நீ பள்ளியில் சேர்ந்தால் வீட்டிலிருக்க முடியாது. அவசியம் ஹாஸ்டலில் சேர்ந்துவிடு. இந்த விஷயத்தில் அம்மாவின் வார்த்தைகளை நீ கவனிக்கக் கூடாது. என் வார்த்தையைத் தட்டாமல் நடப்பாயென்ற உறுதி என் மனதில் பட்டுவிட்டது. இந்த எனது விருப்பத்தை, நீ என்னிடம் வைத்திருக்கும் பிரேமையின் பாசத்தில், காதலின் சின்னமாக, அன்புப் பூங்காவில் புஷ்பித்து உதிரும் சுகந்த மலர்களாக ஏற்றுக்கொண்டாலுமே, கணவன், மனைவி, கணவனின் கட்டளைக்குக்கீழ்ப்படிதல் கடமை, 'மறுக்க முடியாத அடிமைத்தனத்தில் அகப்பட்டவள்' என்ற சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து உத்தரவு என்று ஏற்றுக்கொண்டாலுமே, பூர்த்தி செய்து நிறைவேற்றியாக வேண்டும். நான் சொன்னபடி நடந்தாயானால், பல ஆயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் என் மனதிற்கு நிம்மதியளிக்கும்.

நான் இவ்விடம் நடத்தும் வாழ்க்கையின் அனுபவங்களை, விபரமாக உனக்குக் கடிதம் எழுதுகிறேன். நீயும் அவ்விடம் நடக்கும் விஷயங்களைத் தயங்காமல் எழுதிவரவேண்டும். பவானி! இவ்வளவு நாட்களாக உன்னிடம் காண்பியாமல் ஹ்ருதயப் பேழையில் மறைத்து வைத்திருந்த அன்பு முத்துக்களை உன்முன்னால் அப்படியே கொட்டிவிடவேண்டும் என்ற ஆவலை அடக்கமுடியவில்லை. எழுத எழுத முடிவில்லாமல் விஷயங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அன்பின் ஊற்றில் சிந்தனை நீர் சுரந்துகொண்டே இருக்கின்றது. ஊற்றுக்கண் பெருக வசதியிருக்கும்பொழுது, அறியாமையின் அகம்பாவத்தில் ஊற்றுக் கண்ணைத் திறந்துவிட அசக்தனாக இருந்தேன். மனோவாக்குக் காயங்கள் யாவும் தேசப்பணிக்கே அர்ப்பணம் செய்யும் சமயத்தில், அன்பின் நெகிழ்ச்சியில், உறுதியின் மண் சரிந்து ஊற்றுக்கண் பீரிடுகிறது. யுத்தப் பணியில் அதன் எதிர்ப்பைச் சஹித்துக்கொள்ளவேண்டியதே.

பவானி! உன் இனமே சஹிப்புத்தன்மைக்கு இருப்பிடம். அதிலும் நீ சஹிப்புத் தன்மையே வாழ்க்கையின் லக்ஷ்யம் என்று நடப்பவள். அதனால் எனது பிரிவைச் சஹித்துக்கொண்டு, விவகாரங்களை ஒழுங்குபெற நடத்துவாய் என்று நம்புகிறேன்.

பவானி! "பக்கத்தில் இருக்கும்பொழுது தாம்பத்ய உரிமையில் ஒருவித அன்பின் சொல்லோ செய்கையோ கிடையாது. கடிதத்தில் கவிஞனைப்போல் வரைந்து தள்ளியிருக்கிறானே" என்று நீ நினைக்கக்கூடும். ஆனால் உண்மை நிலைமையை நீ ஒருநாள் அறிந்துகொள்ள விதியானது நிச்சயம் வசதியளிக்கும். என் ஹ்ருதய தாபத்தை அடக்குவதே எனது விதியாக அமைந்தது. சாருவின் தாயாருடன் வாழ்க்கை நடத்தும்பொழுதும் வசைமொழிக்குப் பயந்து பயந்து நடந்து வந்ததானது தொத்துநோய் போல் வாழ்க்கையின் தத்வத்தையே ஜீவனற்றதாகச் செய்துவிட்டது. அதே மனப்பான்மைதான் உன் மனதை அறியாமல் செய்துவிட்டது,

பவானி! உன்னிடம் சொல்லாமல் இப்படிச் செய்ததற்காக என்னை மன்னிப்பாயா? தாயற்ற குழந்தைகளுக்குத் தகப்பனது ஆதரவும் இல்லாமல் செய்துவிட்டோமே என்று நினைக்கும்பொழுது என் மனம் கலங்குகிறது. ஆனால் தகப்பன் என்ற உரிமையைக்கூட தகர்த்தெறிந்த அம்மாவின் சொல்லம்புகள் என் ஹ்ருதயத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டன. பெற்றவள், கடமை, அதனால் அவள் கொடுமைக்குக் கட்டுப்படவேண்டியதுதான். ஆனாலும் கூடியமட்டும் யாவரும் சற்று நிம்மதி அடையப் பிரிவு என்ற இந்த ஒரே வழிதான் உண்டு. குழந்தைகள் விஷயத்தில் உன்னிடம் "பார்த்துக்கொள்" என்று சொல்லுவது அநு

சிதமானது. குழந்தைகளுக்காக நீ வீட்டில் தங்காதே. அவசியம் ஹாஸ்டலில்தான் இருக்க வேண்டும். வாரத்திற்கு ஒருமுறை பார்த்து விட்டுப்போ. 'குழந்தைகளை அக்கரையாக கவனிப்பவள்தான்' என்ற மனப்பான்மை யுடையவள் பாதுகாப்பில் இருக்கட்டும். கவலைப்படக் காரணமில்லை. திட்டினாலும் அக்கரை போகாது. அவளது அதிகாரத்தின்கீழ் கொஞ்சகாலம் அவர்கள் இருந்தால்தான், எனது அருமையும் உனது பெருமையும் தெரிந்துகொள்ளமுடியும். அவர்கள் கேட்கும் சாமான்களை வாங்கிக்கொடு. அவ்வளவே போதும்.

பவானி! என் மனம் இன்னும் எழுதவே எண்ணுகிறது. ஆனால் ஓர் அவசர ஜோலியின் நிமித்தம் செல்லவேண்டி இருப்பதால் இத்துடன் நிறுத்த வேண்டியிருக்கிறது. இனிமேல் எழுதுங் கடிதங்களில் எனது இருதய தாபங்களைப் பிதற்றி இருந்தால் நீ பொறுமையுடன் படிக்கவேண்டும். ஏனோ தெரியவில்லை. இங்கு வந்தபின் எப்பொழுதும், எந்த வஸ்துவிலும், அமைதியும் புன்சிரிப்பும் கூடிய, உனது முகபாவத்தைக் காண்கிறேன்.

பவானி! இந்தக் கடிதம் கிடைக்கும் பொழுது அம்மா இருந்தால் படித்தவுடன் கிழித்து எறிந்துவிடு. தன்னிடம் கொடுக்கும் படி எவ்வளவு சொன்னாலும் கொடுக்காதே. இதற்காக எவ்வளவு திட்டினாலும் பொறுத்துக்கொள். அவள் இல்லையானால் கடிதம் வந்ததாகவே சொல்லாதே. அவளுக்கும் விபரமாக எல்லாம் எழுதி இருக்கிறேன். நான் எழுதியபடி அவசியம் நீ நடப்பாயென்று நிச்சயமாக நம்புகிறேன். உனது இருதய பூர்வமான பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு
உனது அன்பன்
சங்கர்

கடிதத்தைப் படித்ததும் ஆச்சர்யமும் பயமும் ஒருங்கே வதைத்தன. எதிர் பாராத இடி விழுந்தது போல் வேதனை உற்றது மனம். உண்மையான விஷயம்தானா? என்று நினைத்தாள். மறுபடியும் கடிதத்தைப் படித்தாள். மூன்றுமுறையும் படித்தாள். சங்கரின் ஆர்வமும் காதலும் பொங்கித் ததும்பும் கடிதத்தை நினைக்கும்பொழுது தாங்கமுடியாத இன்ப உணர்ச்சி அவள் தேகமுழுவதிலும் பரவி மெய் சிலிர்க்கச் செய்தது. ஆஹா நீறுபூத்த நெருப்பைப் பேன்ற அவர் குணத்தின் தன்மையை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லையே. "காதல் என்ற பதமே நமது வாழ்க்கையின் அகராதியில் கிடையாது" என்று நினைத்தேன். நமது வாழ்க்கைக் கொடி படருவதற்கு இலையுதிர்ந்த மரம்தான் விதியமைத்தது. ஆனாலும் நமது அன்புமலர்களாலும், பணிவிடைத் தளிர்களாலும் மரத்தைச்சுற்றிப் படர்ந்து, அதன் குறைபாட்டை மறைத்தோமானால், அதுவே நமது வாழ்வின் லக்ஷ்யம் என்று நினைத்தோம். ஆனால் இந்த நிமிஷம் இக்கடிதம், வஸந்த காலத்தில் தளிர்த்துப் பூத்துப், கனிகள் நிறைந்து குலுங்கும் கவின்மரமன்றோ, நமது கொடிக்குஆதாரமாகஅமைந்திருப்பதாகத்தோன்றச் செய்கிறது. பிரயோஜனம் எட்டாத நிலைமையிலிருக்கும்பொழுது தவிப்பைத்தவிர வேறு எதைக்காண முடியும்? கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போலாயிற்று எனது ஜீவியம் என்று நினைக்கும்பொழுது, உலகம் முழுவதும் ஒரே அந்தகாரமாகத் தோற்றமளித்தது.. சற்றுநேரம் அசைவற்றுக் கண்ணீர் விட்டபடி உட்கார்ந்திருந்தாள். பிறகு அவள் கடிதத்திலுள்ள ஒவ்வொரு வாக்கியங்களையும் நினைத்து நினைத்துப் பார்த்தாள். துக்கமே மிகுந்தது. கடிதத்தைக் கையிலெடுத்தாள். அதில் கடைசி வாக்யம் கண்ணில் பட்டதும், "ஆஹா! மதியற்றோமே" என்று சொல்லிக்கொண்டாள். மனதிலுள்ள சஞ்சலமெல்லாம் மறைந்து ஓர் அமைதி தோன்றிற்று. அவர்கள் வருவதற்குள் பதில் எழுதிவிடவேண்டும் என்ற ஆவல் தோன்றினது.

(அடுத்த இதழில் முடியும்)


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

# மசூதியில் உருவப்படம்

(பூவாளூர் சுந்தரராமன்)

வித்யாசரணனுடைய சித்திரமண்டபம் அலங்கோலமாகக் கிடந்தது. மூலைக்கு மூலை கிண்ணங்களில் வர்ணங்கள் காய்ந்து வெடித்திருந்தன. அரை குறையாக வரையப்பட்ட சித்திரங்கள் நாலா பக்கங்களிலும் இறைந்து கிடந்தன. சில நாட்களாக அவனுக்குச் சித்திரம்வரைவதிலுற்சாகமே இல்லை. அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. காசியில் நடந்த அகிலபாரத சித்திரக் காட்சியில் அவனுடைய 'தேவகன்னிகை'க்கு முதல் பரிசு கிடைத்தாலும் கிடைத்தது, டில்லியில் உள்ள செல்வ வந்தவர்கள் அவனுக்குச் சிறிதும் ஓய்வு ஒழிவில்லாமல் வேலையைத் தந்து வெகு சீக்கிரத்தில் பணக்காரனுக்கி விட்டனர். பணம் சேர்ந்ததே ஒழிய ஊக்கம் குறைந்தது. அவனுக்கு அந்த ராஜநகரின் ரூபலாவண்ய அழகிகளின் உருவத்தை வரைந்து சலித்துப் போனதுமன்றி அவர்களுடைய சௌந்தர்யத்தில் வெறுப்பும் தட்டிவிட்டது. உள்ளத்தின் எதிரொலி போல அவனுடைய கைகளும் மனுஷ்ய சித்திரங்களை வரைய மறுத்தன.

ஹுக்கா குடித்துக்கொண்டே ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்களைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய அமைதியைக் கலைப்பதுபோல, 'ஜீ,......ஜீ...... திவான் உங்களைக் கையோடு அழைத்துவரச் சொன்னர்' என்ற சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரில் வில்லை தரித்த ராஜாங்க சேவகன் வெகு விறைப்பாகச் சலாம் செய்து நின்றான்.

அதற்குமுன் வித்யாசரணன் தர்பாருக்குள் போனதே இல்லை; போகவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. உருவின கத்தியும் கையுமாகக் காவல்காத்து நிற்கும் காவலாளிகளை எல்லாம் தாண்டிக்கொண்டு சலவைக் கல் பதித்த கூடங்களில் நடந்தபொழுது அவனுடைய கால்கள் நடுக்கம் எடுத்தன.

திவானின் அறையை அடைந்தபொழுது, அடில்ஷாகான் பருத்த திண்டுகளில் சாய்ந்த வண்ணம் ஹுக்கா குடித்துக்கொண்டிருந்தான். 'ஸலாம், நவாப்' என்று தன் இரு கைகளாலும் நெற்றியைத் தொட்டுக்கொண்டே குனிந்து நின்றான் வித்யாசரணன்.

'ஓ, நீதான் வாணி சரணருடைய பிள்ளையா?' என்று அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். அவனுடைய முகத்தில் இன்னதென்று வியவகரிக்க இயலாத சிந்தனை படர்ந்து ஓடிற்று.

'ஆமாம்; வாணி சரணர் என்னுடைய பிதா!'

'நல்லது; உன்னுடைய கைத்திறமை நமது கவனத்துக்கு வராமல் இல்லை என்பதைத் தெரியப்படுத்தவேண்டியதாக இருக்கிறது. உன்னுடைய சித்திரங்கள் இந்த டில்லிபாதுஷாவின் சந்தோஷத்தையும் நன்மதிப்பையும் பெற்றுவிட்டன. தெரிந்ததா......'

'நவாப், மிகவும் வந்தனம். இந்தச் சிறுவனுடைய இளஞ் சித்திரங்களைக் கண்டு மனமுவந்ததற்குப் பாதுஷாவிற்கு என்னுடைய தாழ்மையான வந்தனங்களைச் செலுத்தவேண்டுகிறேன்'

அடில்ஷாகான் பேசவில்லை; அவனுடைய இடதுகை, நரைத்துச் சாயம் பூசப்பெற்ற தாடியைத் தடவிக்கொண்டிருந்தது.

'வித்யாசரண்! அதுமட்டுமல்ல; பாதுஷாவே மயங்கி நிற்கும் நூரோபேகத்தின் அபிமானம் கூட உனக்குக் கிடைத்திருக்கிறது. உண்மையில் பேகத்தின் உத்தரவினுல்தான் உன்னை இங்கு அழைக்க நேர்ந்தது. அவருடைய உருவத்தை வரையும் பெருமை உனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.'

வித்யாசரணனுக்கு ஆனந்தத்தால் உடம்பு சிலிர்த்தது. 'நவாப்! இந்த அடிமைக்கு அதைவிட வேறு வேலை ஒன்றுமில்லையென்பதையும், அதைக் கூடியமட்டும் பொறுப்பாக வரைவதாகவும் ஜனுவிற்குத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்'

அடில்ஷாகான் திரும்பவும் மறுமுறை வித்யாசரணனை ஏற இறங்கப் பார்த்தான். வித்யாதேஜஸை ஒளிவிடும் கண்களும், இளமீசையும், சுருண்டு தோளில் படிந்த கறுத்த மயிரும், கட்டமைந்த சரீரமும் கூடி அவனைக் கந்தர்வ கோலத்தில் காட்டின.

'நீ இதற்கு முன் நூரோ பேகத்தைப் பார்த்திருக்கிறாயா?' என்று அடில்ஷாகான் கேட்டபொழுது அவனுடைய மனது அந்த இளஞ் சைத்ரிகனுடைய அழகுடன், நரைத்த தாடியும், குழிவிழுந்த முகமும், கோவைப்பழம் போன்ற சிவந்து இடுங்கின கண்களுடன் முதுமையின் சுவடு படிந்த பாதுஷாவின் அழகையும் ஒப்பிட்டுப் பார்த்தது.

'இதுவரையிலும் பேகத்தைப் பார்க்கும்படியான பாக்கியம் அடியேனுக்குக் கிட்டவில்லை' என்று மரியாதையுடன் வித்யாசரணன் சொன்னான்.

இரண்டு வருஷங்களுக்கு முன் துருக்கி நவாபின் அரண்மனையின் ஜோதியாக விளங்கிக்கொண்டிருந்த நாரோவை முதல்முதல் பார்த்தவன் டில்லி பாதுஷாதான். அவனுக்கு அதுவரையிலும் ஆறு பேகங்கள் இருந்தும், நாரோவை ஏழாவதாக வரித்துக்கொண்டு அவளை டில்லி ஜனானாவிற்குக் கொண்டுவந்தான். பாதுஷாவின் வெகு அந்தரங்க உத்தியோகஸ்தர்கள் தவிர வேறு எவருமே அவளைக் கண்டதில்லை.

'சரி, நீ இளைஞன். நீ இன்னும் எவ்வளவோ முன்னுக்குவரவேண்டியவன். மனதை அங்கு இங்கு அலையவிடாதே. நீ பழகுகிற இடம் நெருப்பு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். உன் வேலையில்மட்டும் திருஷ்டியைச் செலுத்து.'

வித்யாசரணனுக்குத் திவானுடைய அப்பட்டமான புத்திமதிகள் ரசிக்கவில்லை. தன்னுடைய மனநிலையைச் சந்தேகிக்கும்படி திவான் பேசினது அவனுக்கு வருத்தத்தைத்தான் தந்தது.

'தங்களுடைய உத்தரவு, நவாப்.'

'சரி, நாளைமுதல் காலையில் பதினொரு மணிக்கு வந்துவிடு. எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகச் சித்திரம் வரையப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு உனக்கு நல்லது!'

'சலாம், நவாப்.'

'சொன்னது ஞாபகம் இருக்கட்டும், உன்னுடைய திருஷ்டி நீ வரையும் படத்தில்தான் இருக்கவேண்டும்' என்று மறுபடியும் அடில்ஷாகான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லி அனுப்பிவிட்டான்.

2

பெரிய காவியத்தை ஆழ்ந்து படிக்கப் படிக்க அற்புதமான புதிய கருத்துக்கள் தட்டுப் படுவதுபோல, வித்யாசரணன் ஜனானாவிற்குள் ஒவ்வொரு மண்டபமாகத் தாண்டிச் சொல்ல, ஒன்றைவிட ஒன்று அழகிலும் சித்திர வேலைப்பாட்டிலும் சிறந்து விளங்கிற்று. எக் கண்டமும் செல்வ வளப்பத்தையே நிதர்சனமாகக் காட்டும் பொருள்களே வைக்கப்பட்டிருந்தன. நடுநடுவே இருந்த பூந்தோட்டங்களிலிருந்து வந்த சுகந்தமான காற்று சூரியனுடைய தகிக்கும் வெப்பத்தை மாற்றி மனதிற்கு இன்பத்தை அளித்தது.

கடைசியில் அவனைக் கூட்டிவந்த பணிப்பெண் ஒரு கூடத்தில் வித்யாசரணனை நிறுத்திவிட்டு மறைந்துவிட்டாள். அவனுக்கு எதிரில் அற்புதமான ஒரு தந்த மயிலாசனம் வெல்வெட்டுத் திண்டுகளுடன் காணப்பட்டது. அங்கு நிறுத்தப்பட்ட வெள்ளித் தூண்களில் தங்கக் கொடிகளும், அவற்றின் ஊடே நவமணிகளால் இழைக்கப்பட்ட புஷ்பங்களும் காண்போருடைய உள்ளத்தில் டில்லி பாதுஷாவினுடைய ஆடம்பரத்தையும் கலைப் பண்பையும் காட்டி நின்றன. ஜன்னல்களிலும் கதவுகளிலும் பூவேலைப்பாடு மிகுந்த மகமல் திரைகள் தொங்கின. இந்த அழகிலேயே லயித்துப்போய் நின்றுகொண்டிருந்தான் வித்யாசரணன்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் அவனுடைய பிரமை நீங்கிற்று. அடுத்த விநாடி அவனுடைய எதிரில் நாரோபேகம் தோன்றினாள். அவளுடைய முகத்தைப் பார்க்காமலே மண்டியிட்டு வணங்கினான்.

'எழுந்திருக்கலாம்' என்ற நாரோ பேகத்தின் இனியகுரல்கேட்டதும் எழுந்து நின்றான். அவளை ஏறிட்டுப்பார்க்க வெட்கமடைந்தவன் போல, சுவரையும் பூமியையும் வெறித்துப் பார்த்துக்கொண்டே நின்றான்.

'நீதான் வாணி சரணருடைய பிள்ளையா?'

'ஆமாம், பேகம்............'

'உன்னுடைய தந்தை எங்கள் தகப்பனருக்கு மிகவும் வேண்டியவர்; அவர் என்னுடைய தாயின் உருவத்தை வரைந்திருக்கிறார் என்பது உனக்குத்தெரியுமா?'

'தெரியாது.........நான் அப்பொழுது சிறியவனாக இருந்திருப்பேன்!'

நீ எவரிடத்தில் சிக்ஷை பெற்றுக்கொண்டாய்''

'என்னுடைய தகப்பனாரிடத்திலேயே'

'சரி; உன்னுடைய கைத்திறமைக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, பார்க்கலாம்.........'

வித்யாசரணனுடைய முகம் வெட்கத்தில் சிவந்துவிட்டது. நடுநடுவே அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் வகையில் அவளைப் பார்த்தான். ஒவ்வொரு முறையும் அவனால் அவளுடைய ஒவ்வொரு அங்கத்தைத்தான் பார்க்கமுடிந்தது.

அவனுடைய ஆயுட்காலத்தில் அவ்வளவு அழகிய ஸ்திரீயை அவன் பார்த்ததே கிடையாது. உண்மையில் அவளுடைய அற்புதமான அழகு, மறைந்து வரும் அவனுடைய கலைத்திறமைக்கு ஊக்கத்தை அளிக்கக் கூடியதாகவே இருந்தது.

நாரோபேகத்திற்கு வயது இருபதுக்குமேல் இராது. உயர்ந்த போஷிப்பின் சின்னம் அவளுடைய ஒவ்வொரு அங்கத்திலும் பிரதிபலித்தது. தாமரை மலர்போன்ற நிறம்; உருண்டை முகம்; உயர்ந்த கழுத்து. பெரிய கண்களின் எல்லையைக் கோலிவிட்டதுபோல, மேல் புறத்

தில் மெல்லிய வளைந்த புருவங்களும் கீழே அஞ்சன ரேகைகளும் ஓடின. முத்துவரிசை போன்ற பற்கள். இயற்கையாகவே ரத்தவர்ண உதடுகள் பிரியும் பொழுதெல்லாம் ஒளி வீசின. அவளுடைய கருங்கூந்தல், பாம்பு நெளிவதுபோல, பல பின்னல்களாக அவளுடைய மார்பில் சரிந்து கிடந்தன.

அவளுடைய காதுகளிலோ மூக்கிலோ எவ்வகையான அணிகளும் காணப்படவில்லை. கைகளில் ஒளி பொருந்திய வளையல்கள்; கழுத்தில் நீண்ட முத்துமாலை. உடலில் ஆகாய வர்ண டக்கா மஸ்லின் தாவணி, உடம்பின் அழகை அபரிமிதமாக்கிக் காட்டிற்று.

நூரோபேகம் மயிலாசனத்தில் தலையை இடது கையில் ஊன்றிக்கொண்டு சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். அவனையும் ஒரு ஆசனத்தில் உட்காரும்படி சைகை செய்து விட்டுக் கையைத் தட்டினாள். உடனே சில பணிப்பெண்கள் அவனுக்குப் பழங்களையும், பழரசத்தையும் கொண்டுவந்து கொடுத்து உபசரித்தார்கள்.

எதிரிலிருந்த பரந்த தோட்டத்திலிருந்து மந்த மாருதம் வீசிற்று; பக்கத்து அறையிலிருந்து கிளம்பும் அகில் புகை; எக்கண்டமும் ஓவிய வேலைப்பாடு மிகுந்த பொருள்கள்; பக்கத்தில் தண்ணீர் ஊற்றுக்களிலிருந்து பீரிட்டு எழும் நீர்த்தாரைகள்; இவை யாவும் சேர்ந்து வித்யாசரணனுக்கு 'உன்னுடைய சித்திரத்தில் மட்டும் கவனத்தைச் செலுத்து' என்று பலதடவை வற்புறுத்திச் சொன்ன திவானுடைய வார்த்தைகளை அனுஷ்டானத்தில் காட்ட இயலாதபடி செய்துவிட்டன.

'வரைய ஆரம்பிக்கலாம்' என்பதுபோல நூரோபேகம் தலையை அசைக்க, வித்யாசரணன் துகிலிகொண்டு வரைய ஆரம்பித்தான்.

3

தினந்தோறும் பதினொரு மணிக்கு ஜனானாவிற்குப் போவான்: திரும்பும்பொழுது மாலை ஆறுமணி ஆகிவிடும். எல்லா நாட்களிலும் வித்யாசரணன் ஜனானாவிற்குப் போனதுமே, நூரோபேகம் வந்து ஆசனத்தில் அமர்ந்துவிடுவாள் என்று சொல்வதற்கில்லை. சிலநாட்கள் மணிக்கணக்காகக் காத்துக்கிடப்பான். வெகுநேரம் காத்திருந்தபிறகு பேகத்திற்கு உடம்பு அசௌகரியமென்று சொல்லி அனுப்பிவிடும் நாட்களும் உண்டு.

திவான் அடில்ஷாகான் ஒவ்வொருநாளும் வித்யாசரணன் வீடு திரும்பும்பொழுது அன்றன்று நடந்த வேலையைப்பற்றி விசாரிப்பான். அவனுக்கு அந்தச் சித்திரம் சீக்கிரம் முடிந்துவிடவேண்டுமென்ற பதட்டம் அவனுடைய பேச்சில் தொனிக்கும். ஆனால் நூரோபேகத்திற்கும் வித்யாசரணனுக்கும் மட்டும் சித்திரம் எழுதும் வகையில் ஏற்பட்ட அந்தச் சந்திப்பு சீக்கிரத்தில் முடியக்கூடாது என்றே நினைத்தவர்கள் போலச் சித்திரம் வெகு நிதானமாக வரையப்பட்டது.

சித்திரம் வரைய உட்கார்ந்ததும் இருவருடைய சுபாவமான உணர்ச்சிகளும் மறைந்துவிடும். பேகத்தினுடைய எதிரில் வித்யாசரணன் ஒரு குடியன் கள்வெறியில் அனுபவிக்கும் பரவச நிலையையோ, ஒரு பக்தன் தான் வழிபட்டுவந்த தெய்வம், தன் தவத்திற்கு மனமிரங்கி எதிரில் காட்சி அளித்தபோது இருக்கும் மன நிலையையோ அடைந்தவன்போலக் காணப்பட்டான். பேகத்தினுடைய அன்பான நோக்கும், இளநகையும் அவனுடைய உள்ளத்தில் எவ்வளவோ மனக் கோட்டைகளைக் கட்டச் செய்துவிட்டன. தினந்தோறும் அவன் வந்ததும் அவனுடைய யோக க்ஷேமங்களை விசாரிப்பதும், பணிப் பெண்களைக் கொண்டு அவனுக்குச் செய்யும் மரியாதைகளும் சேர்ந்து சில சமயங்களில் அவனுடைய உண்மை நிலையைக்கூட மறக்கச் செய்துவிட்டன.

வித்யாசரணன் அவ்வாறு நினைத்து மனமகிழ்ச்சி கொள்வதற்கு நூரோபேகமும் இடம் கொடுத்தாள் என்றுதான் சொல்லவேண்டும். அவளும் இவனுடைய எதிரில் டில்லிபாதுஷாவினுடைய கண்மணி என்ற எண்ணமே இல்லாமல், இவனுடன் பழக ஆரம்பித்தாள். திவானைக்கொண்டு வித்யாசரணனை வரவழைக்கச் சொன்னபொழுது அவன் இவ்வளவு சௌந்தர்யமான வாலிபனாக இருப்பான் என்றே அவள் நினைத்தது கிடையாது. அமர உருவில் தோன்றின இவன் அவளுடைய உள்ளத்தையும்கூட பேதிக்கத்தான் செய்துவிட்டான்.

இந்த இருவருடைய காதல் கனவுகளும் நூரோபேகத்தின் ஜனானாவிற்குள் பகிரங்க ரகசியமாக இருந்தன. சேடிப் பெண்களுடைய அறைகளில் எப்பொழுதும் வம்புபேசிச்சிரிப்பதற்கு இந்த விஷயம்தான் அகப்பட்டது. பேகத்தின் சிரிப்பிற்கும் கோபத்திற்கும்கூட விசித்திரமான அர்த்தம் செய்துகொண்டார்கள். சேடிப் பெண்களுக்குள் அழகிய ஹீராவிற்குத்தான் இந்த வம்பில் அதிகப் பங்கு கிடைத்தது.

4

அன்று காலிபா வந்ததற்காக ஒரு பெரிய விருந்து வைக்கப்பட்டது. நகரத்து அந்தஸ்தில் உயர்ந்த பிரபுக்களும், பெரிய உத்தியோகஸ்தர்களுமே வரவழைக்கப்பட்டிருந்தனர். அவ்வளவு பெரிய மனிதர்களுடைய நடுவில் வித்யாசரணனும் வந்துதானிருந்தான். அவனுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அவனுடைய அழைப்பு விஷயத்தில் திவான் அடில்ஷாகானுக்கு இஷ்டமேயில்லை. பாதுஷாவின் உத்தரவு இல்லாமல், வழக்கத்திற்கு மாறாக, இவ்வாறு நடக்கும் விருந்திற்கு எவரையும்

அழைப்பது கிடையாது. ஆனால் நூரோபேகம் திவானைக் கட்டாயப்படுத்தி அழைப்பு அனுப்பச் செய்துவிட்டாள். அப்பொழுதே விஷயம் விபரீதத்திற்கு வந்துகொண்டிருக்கிறதை திவான் ஒருவாறாகத் தெரிந்துகொண்டான்.

அரண்மனையின் நடுவில் இருந்த பிரும்மாண்டமான தோட்டத்தில் விருந்து ஏற்பாடாகி இருந்தது. அர்த்த சந்திரவட்டத்தில் விருந்தினர்கள் அமர ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. நடுவில் பாதுஷா, காலிபா, நூரோபேகத்தை உள்ளிட்ட ஏழுபேகங்களும் அமர, தந்த நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நாலா பக்கங்களிலும் பொருத்தப்பட்டிருந்த குளோப், லஸ்தர் விளக்குக்கள் பலநிற ஒளிகளை வாரி நிறைத்தன. ஒரு புறத்தில் உயர்ந்த ஹிந்துஸ்தானி ஸங்கீத வினிகை நடந்துகொண்டிருந்தது. வேறொரு புறத்தில் சுதேச விதேச நடனங்கள் நடந்துகொண்டிருந்தன.

விருந்து ஆரம்பமாயிற்று. விருந்தினர்களுக்கு முன்னால் விதவிதமான சீன தேசத்துப் பீங்கான் தட்டுக்களில் சுவை மிகுந்த உணவு வகைகளும், பழவகைகளும் வைக்கப்பட்டிருந்தன; தங்கக் கோப்பையில் மதுவையும் பழரசத்தையும் ஏந்திக்கொண்டு ஒவ்வொரு விருந்தினர் அருகிலும் அழகே உருவெடுத்த ஒரு பணிப்பெண் நின்றுகொண்டு, அவள் பக்கம் திரும்பும்பொழுதெல்லாம், அவர்களுக்கு அளித்துக்கொண்டிருந்தாள். இடையிடையே விருந்தினர் கேட்கும் சிங்காரக் கேள்விகளுக்கு, முல்லைச் சிரிப்புடன் பணிப் பெண்கள் விடை அளித்துக் கொண்டிருந்தனர். எங்கும் கோலாகலம்; களிவெறி.

அவ்வளவு கோலாகலத்திலும் இரண்டு பேர்களுடைய உள்ளங்கள் மட்டும் அந்தக் களிவெறியில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. நூரோபேகம் அன்று எவருடனுமே அதிகமாகப் பேசவில்லை. பேச வந்தவர்களுக்கெல்லாம் ஒன்றிரண்டு வார்த்தைகளால் பதிலைச் சொல்லிவிட்டு வாயடைத்திருந்தாள். அவளுக்கு எதிரில் இருந்த தட்டுக்களில் வைத்த உணவுப் பண்டங்கள் அப்படியே இருந்தன. கிண்ணங்களில் வைத்த பானம் அப்படியே இருந்தது. இவ்வாறு அவளுடைய வாய் மூடியிருந்தாலும் அவளுடைய பார்வை மட்டும் ஒரே இடத்தில் லயித்திருந்தது. விளக்கைச் சுற்றி வரும் விட்டில் பூச்சிபோல, அவளுடைய பார்வை வித்யாசரணனையே வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

வித்யாசரணன் அதுகாறும் எந்தப் பெரிய விருந்திலும் பங்கெடுத்துக்கொண்டது கிடையாது. கலைப்போக்குடைய அவன் பண்பட்ட உள்ளத்திற்கு அந்த ஆடம்பரமும் கேளிக்கையும் சிறிதும் பிடிக்கவில்லை என்பது அவனுடைய முகத்தில் விசித்திரமாகத் தென்பட்டது. ஆகாரத்தை அவன் அருவருப்புடன் மென்று விழுங்கிக் கொண்டும், அடிக்கடி நூரோபேகத்தைப் பார்த்துக் கொண்டும் பொழுதைப் போக்கினான்.

அதுவரையிலும் காலிபாவுடன் பேசிக்கொண்டிருந்த பாதுஷா நூரோபேகத்தின் பக்கமாகத் திரும்பினான்.

'நூரோ, என்ன ஒன்றுமே சாப்பிடவில்லையா?' என்றார்.

எங்கோ நினைவுடனிருந்தவள் 'வித்யாசரண்' என்று வாய்தவறி அழைத்ததும்தான் அவளுடைய பெரிய தவறு தெரிந்தது. பாதுஷாவின் கண்கள் கோபத்தால் இடுங்கி விட்டன.

'ஷா இன் ஷா, மன்னிக்கவேண்டும். எனக்கு உடம்பு சரியாக இல்லை. தலைவலி கண்டுவிட்டது...' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டாள்.

பாதுஷா முட்டாள் அல்ல; ஹீராவை அழைத்தான்.

'வித்யாசரணன் யார்?'

'நூரோபேகத்தின் உருவத்தை வரையும் சைத்ரிகன்; இங்குகூட வந்திருக்கிறார்.'

'இங்கேயா? யாருடைய அழைப்பின் பேரில்?'

'மந்திரிதான் அழைப்பு அனுப்பியிருப்பார்.'


சேலத்தில்

கல்யாணப்பட்டு ஜவுளி ரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

**ராம விலாஸ்**

396, கடைவீதி சேலம்.

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

'யாரது?'

'அதோ......' என்று வித்யாசரணனைச் சுட்டிக் காட்டினாள். அவனுடையத் தட்டுக்களிலும் எல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தன.

அதற்குமேல் பாதுஷாவிற்கும் விருந்து இனிக்கவில்லை. அன்று இரவு ஹீராவிடமிருந்து பாதுஷா ஜனானாவில் நடந்த எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டுவிட்டான்.

5

விருந்து நடந்த மறுநாள்; அன்று வித்யாசரணன் நூரோ பேகத்தினுடைய உருவத்தைக் கடைசி தடவையாக அழகுபடுத்தி முடித்துவிட்டான்.

ஜீவகளை ததும்பும் அந்தச் சித்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஆனந்த வெறிமுகத்தில் விசும்ப 'முடிந்துவிட்டது பேகம்!......' என்றான்.

'எங்கே, படத்தை இங்கே கொடு' என்று ஒய்யாரமாக எழுந்துவந்து அவனிடமிருந்து படத்தை வாங்கிப் பார்த்தாள்.

சித்திரத்தைப் பார்த்ததும் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்ப்பதுபோலவே அவளுக்கு பிரமை ஏற்பட்டது. அந்த உருவத்தின் கன்னத்தை ஒரு விரலால் நெருடிவிட்டுத் தன்னுடைய சதைப்பிடிப்புள்ள கன்னத்தையும் அழுத்திக்கொண்டாள்.

'நான் இவ்வளவு யௌவனமாகவா காணப்படுகிறேன், வித்யாசரண்?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'ஆமாம், பேகம்!'

'இல்லை; உன்னுடைய கண்ணிற்குத்தான் நான் இவ்வளவு யௌவனமாக......'

வித்யாசரணன் தலைகுனிந்துகொண்டே 'என்றும் தாங்கள் இந்த யௌவனத்துடன் இருக்க வேண்டும், ஆண்டவன் கிருபையால்!' என்றான். அவனுடைய குரலில் ஒரு கரகரப்புத் தொனித்தது.

'நாளையதினம் நீ வரமாட்டாய் அல்லவா?' என்றாள் நூரோபேகம். அவளுடைய கண்கள் கலங்கி இருந்தன; மேலெழுந்து வரும் துக்கத்தை விழுங்குவது கண்ணாடிபோன்ற அவளுடைய தொண்டையில் நன்றாகத் தெரிந்தது.

'பேகம்! என்வரையில் இது ஒரு கனவுதான்......'

'நாளையதினம் உன்னைப் பார்க்கமுடியாது! நம் சந்திப்பு இவ்வளவுதான்......' என்றதும் அவளுடைய கண்களிலிருந்து முத்துமுத்தாகக் கண்ணீர் கசிந்து கன்னத்தில் உருண்டது.

'பேகம், நான் எப்படி உங்களை மறந்து உயிர் வாழ முடியும்?' என்று அழுதுகொண்டே, மண்டியிட்டு அவளுடைய பாதங்களில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டான்.



'வித்யாசரண்! வித்யாசரண்! எழுந்திரு...... எழுந்திரு......' என்று அவனைக் கைகொடுத்துத் தூக்கப்போகும் சமயம்; பின் புறத்துக் கதவு திறந்தது; ஹீரா வழிகாட்டிக் கொண்டு வர, பாதுஷா வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் நடுநடுங்கிக்கொண்டே, பிரேதக்களை வீசும் முகத்துடன் திவான் அடில்ஷாகான் வந்துகொண்டிருந்தான்.

'உம்......ஜனானாவின் காவல் நன்றாக இருக்கிறது!' என்று உறுமினான் பாதுஷா.

பாம்பைக் கண்டு அதிர்ச்சியடைந்து எழுந்து ஓடுவதைப்போல இருவரும் எழுந்து விலகி நின்றனர்.

'அங்கே யாரது? இந்தப் பித்தனைக் கொண்டு போங்கள்' என்று உத்தரவு இட்டுவிட்டு வெகு வேகமாக மறைந்தான்.

6

வித்யாசரணன்; திவான் அடில்ஷாகான், பணிப்பெண் ஹீரா மூவரும் தனித்தனியான அறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அன்று இரவு பாதுஷாவிற்குத் தூக்கம் வராததில் ஆச்சரியமில்லை. எவ்வளவோ எண்ணப் புயல்கள் வீசின; முடிவுகாணாத பிரச்னைகள் பல தோன்றின. பேகம் ஒருபுறமும், திவான், சைத்ரிகன், ஹீரா மூவரும் ஒருபுறமுமாக நின்று பாதுஷாவினுடைய ஆசையையும், மனச் சாட்சியையும் பங்குபோட்டுக் கொண்டனர். ஒவ்வொருவர் மீதும் தவறு இருந்தது; ஆனால் பேகத்தின்மீது தவறுமட்டுமல்லாமல் பழியும் காத்து நின்றது. தவறை திருத்திவிட்டால் பழி நீங்குமா என்பதுதான் கடைசி பிரச்னையாக இருந்தது.

அடுத்த நாள் பாதுஷாவின் அந்தரங் மஹாலில் விசாரணை நடந்தது. காவலாளிகள் முதல் முதலாக வித்யாசணனைப் பாதுஷாவின் முன் நிறுத்திவிட்டு அகன்றனர்.

வித்யாசரணன் பாதுஷாவிற்கு மண்டியிட்டு ஸலாம் செய்து நின்றான். 'வித்யாசரண்! உன் மேல் குறைகூற இஷ்டமில்லை. அது உன் வயசுக் கோளாறு; முதலில் உன்னை ஜனானாவிற்குள் விட்டதுதான் தவறு. அபவாதம் ஏற்பட்டு விட்டது. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும். நூரோ பேகம் பழியின்றி உயிருடன் இருக்கவேண்டுமானால் நீ இந்த உலகத்தில் இருக்கமுடியாது; நீ இருக்க விரும்பினால் அவளுடைய தேகம் கல்லறைக்குப் போயாகவேண்டும். பேகத்தை மறைப்பது என்பது சுலபமல்ல; இந்தத் தர்பாருக்கே ஹானி ஏற்படலாம்; கௌரவமும் போய்விடும். நீ யோசித்து இதற்குப் பதில் சொல்லு.........! என்று பாதுஷா நிதானமாகவும் பதட்டமில்லாமலும் சொன்னார்.

'ஷா இன்ஷா, பேகம் உயிருடன் இருக்கட்டும்; இதில் நான் யோசிக்க வேண்டியது ஒன்றுமில்லை!'

'நானும் அப்படித்தான் நினைத்தேன்!'

அடுத்த நிமிஷம் வித்யாசரணனைக் காவலாளிகள் அழைத்துக்கொண்டு போய்விட்டு, திவானைக்கொண்டுவந்து நிறுத்தினர்.

'அடில்ஷாகான், நீ எஜமானத்துரோகி ஆகிவிட்டாய். என்னுடைய கவனத்திற்கு இந்த விஷயத்தைச் சிறிதும் கொண்டு வராததை என்னால் மன்னிக்கவே முடியாது. ஆனாலும் நீ என்னுடன் வெகு காலமாகப் பழகினவன்; என் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டவன்; உன்னைக் கடைசி காலத்தில் கொல்ல இஷ்டமில்லை. இன்று முதல் ஏழு நாட்களுக்குள் நீ மெக்காவிற்குப் புறப்பட்டுப் போய்விடவேண்டும்'' என்று தீர்ப்பு அளித்தார்.

அடுத்தபடி ஹீரா அவனிடம் வந்து நின்றாள். 'ஹீரா, உனக்கும் நூரோவிற்கும் பகை உண்டாகிவிட்டது. உன்னை உயிருடன் விட்டால் இந்தச் சங்கதி எப்படியும் அம்பலத்திற்கு வந்துவிடும். அதைவிட நீ ஆண்டவனிடம் சேர்ந்துவிடுவது நல்லது!' என்று முடிவு கட்டிவிட்டார்.

அடுத்த நாள் அந்தி மங்கும்நேரம். வித்யாசரணனைச் சிறைவைத்த கோட்டையின் கதவு திறந்தது. அவன்முன் திவான் அடில்ஷாகான் நின்றான்.

'நவாப்! என்னை மன்னித்துவிடுங்கள்; நான் உங்கள் புத்திமதியை ஏற்கவில்லை......!' என்று சிறு பிள்ளைபோல மனங்கலங்கிச் சொன்னான்.

'வித்யாசரண்! இது நெருப்பு என்று சொன்னேனே! கேட்கவில்லையே!'

'மன்னித்து விடுங்கள்! கைவைத்தவனை மட்டும் நெருப்புச் சுடும். இது அதைவிட கொடுமையாக இருக்கிறது. ஆனால் எனக்கு ஒரு ஆசையைமட்டும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும். நான் வரைந்த பேகத்தின் சித்திரம் மாத்திரம் எவ்விதத்திலும் பாதுஷாவின் கையில் சிக்கக்கூடாது. இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் என் உயிர் அமைதியாக நீங்கும்........'

'வித்யாசரண்! நீ கவலைப்படாதே; அது என்னிடத்தில்தான் இருக்கிறது. அது உன் கைத்திறமைக்கும், காதலுக்கும் நிரந்தரமான அத்தாக்ஷியாக நிற்கும். இந்தா, இதை நூரோ உன்னிடம் கொடுக்கச் சொன்னாள்' என்று ஒரு சிறு பொட்டலத்தை அவன் கையில் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அந்தப் பொட்டலத்திற்குள் நூரோவின் மோதிரம் இருந்தது. அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டான். அதற்குப் பிறகு வித்யாசரணனை எவருமே பார்க்கவில்லை.

7

திவான் அடில்ஷாகான் மெக்கா யாத்திரைக்குப் புறப்பட்டுச்சென்று மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. ஹீராவின் கல்லறையின் மேல் புல்கூட முளைத்துவிட்டது. இவ்வாறு பாதுஷா பேகத்தின் ஸ்தானத்தைக் காப்பாற்றிவிட்டான்.

ஆனால் நாரோ பேகம் விசாரணைக்கு மறு நாள் படுக்கையில் படுத்தவள் எழுந்திருக்கவே இல்லை. வைத்திய சாஸ்திரத்தில் மருந்து காணாத நோயாக அது இருந்தது. அவளுடைய உடம்பு எலும்புக் கூடாக மாறிவிட்டது. வித்யாசரணன் கண்டு பறிகொடுத்த அழகு போன இடம் தெரியவில்லை.

'நாரோ, இவ்வளவும் உனக்காகத்தானே செய்தேன். ஏன் நீ இப்படி நோயில் வீழ்ந்துவிட்டாய்?' என்று கலக்கத்துடன் கேட்டான் பாதுஷா.

'ஷா இன் ஷா! நான் ஒருமுறை துருக்கி சென்று என் உடம்பு சௌகரியமானதும் வருகிறேன். அதற்கு அனுமதி கொடுத்துப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்......' என்று வெகுவாக வேண்டிக்கொண்டாள்.

நாரோபேகம் துருக்கி வந்து சேர்ந்தாள். பிறந்த ஊரின் காற்றும் நீரும் அவளுடைய நோயைக் குறைத்தன; உடம்பும் தெளிவு கண்டது.

அன்று அகஸ்மாத்தாகத் தன் தாயின் உருவப்படம் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குள் சென்றதும் திடுக்கிட்டு நின்றுவிட்டாள்.

அவளுடைய தாயின் உருவப்படத்திற்கு அருகில் வித்யாசரண் உயிர்கொடுத்து வரைந்த அவளுடைய உருவப்படம் இருந்தது. திவான் அடில்ஷாகான் மெக்கா யாத்திரைக்கு வந்தபொழுது அதைக்கொண்டு வந்து சேர்த்திருந்தான்.

அவளுடைய யௌவனம் அதில் நிலைத்து நின்றது. ஆனால் அதை எழுதினவன் போன இடம் தெரியவில்லை. அதைப் பார்க்கப் பார்க்க மறுபடியும் அவளுக்கு வித்யாசரணனுடைய ஞாபகம் வந்தது. திடீரென்று மறைந்த அவனுக்காகக் கண்ணீர்விட்டு அழுது அலறினாள். அந்தச் சோகத்தால் திரும்பவும் படுத்த படுக்கையானாள். அந்த உருவப் படத்தைக் கையில் வைத்துக்கொண்டே 'வித்யாசரண், வித்யாசரண்' என்று முணுமுணுத்த வண்ணம் கண்களை மூடிவிட்டாள்.

அவளுடைய மசூதியில் இன்னும் அவளுடைய உருவப்படம் இருக்கிறது; அது அவளுடைய யௌவனத்தை நித்ய—சாச்வதமாகக் காட்டுவதாயிருக்கிறது; நாரோ—வித்யாசரணனுடைய காதலுக்குச் சாட்சியாக நிற்கிறது; வித்யாசரணனுடைய ஓவியத்திறமைக்கு எடுத்துக்காட்டாகவும் இருக்கிறது.

---


# இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்

தியாகராயநகர் புரசவாக்கம் மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .... ... | ரூ. 33,48,561 |
| ரிஸர்வ் நிதி ... ... ... | ரூ. 32,00,000 |
| டிபாஸிட்டுகள் ... ... ... | ரூ. 9,91,53,000 |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B.I.G. N. கோபால அய்யர், செக்ரடரி


21905
சென்னை-600 008

# Making "West End" Watches for you



## மெயின் ஸ்பிரிங்

கடிகாரத்தை ஓடச் செய்வது மெயின் ஸ்பிரிங்தான். அது நல்ல டெம்பருள்ள மெல்லிய எஃகுத் தகடை நீளமாகஒன்றின் மேல் ஒன்ருக வட்டவடிவாகச் சுற்றப்பட்டுள்ளது. அச்சுற்று பிரியப்பிரிய அதன் சக்தி வீல் டிரெயின் வழியே எஸ்கேப் வீலுக்கு மாற்றப்படுகிறது. வெஸ்ட் எண்டு மெயின் ஸ்பிரிங்குகள் கைதேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டு தீவிர பரீக்ஷைக்குள்ளாக்கப்படுகின்றன.

குறித்த காலத்தில் சரக்குகள் வருவதில்லையாகையால் விளம்பரம் செய்யப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய சாத்தியமில்லாமல் இருக்கிறது. ஆயினும் ஸ்டாக் உள்ள வரை சப்ளை செய்வோம். பேப்பர் கண்ட்ரோல் ஆர்டரின்படி கேட்லாக்குகள் அனுப்ப இயலவில்லை என வருந்துகிறோம்.



தி டோஸ்ட்

நிக்கல் ஸில்வர் கேஸ் ரு 25

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் — கல்கத்தா

# WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA

# இதென்ன உலகம்!

தொடர் கதை

மூல ஆசிரியர்
இலா சந்திரஜோஷி

மொழி பெயர்ப்பாளர்:— கிருத்திவாஸ்

5

திரை எழுந்தது. ஆரம்பத்தில் அரம்பையர்களின் 'கோரஸ்' மங்கள கீதம் பாடப்பட்டது. குயிலினுமினிய குரலில் மங்கள கீதம் பாடிக்கொண்டிருந்தனர், அரம்பையர் வேடம் தரித்திருந்த இளம் நங்கையர். டாக்டர், இக்காட்சியையும் பாட்டையும் கண்டு சொக்கிப்போய் இவ்வுலக நினைவையே இழந்துவிட்டார். ஆண்கள் இக்காட்சியைக்கண்டு மயங்குவது ஒரு விதத்தில் இயற்கை என்று ஒத்துக்கொள்ளலாம். எனதுள்ளத்தில் அனைவரையும் மறந்து, தனிமையாக அரம்பையருலகின் ஆனந்தக் கனவுகளில் பொழுதுபோக்க வேண்டுமென்ற அவா—வெறி—எழுந்தது.

பாட்டு நின்றது. மறுமுறையும் பாடவேண்டுமென்ற கரகோஷம் எழுந்தது. அவ்வெறியில் என்னையறியாமலே டாக்டரது கையைப் பிடித்துக்கொண்டுவிட்டேன். கையை விடுவித்துக்கொள்ள அவர் சிறிதும் முயலவில்லை. ஒருகண நேரம், ஆசை தவழும் மோகனப் பார்வையில் என்னைப் பார்த்துவிட்டு முகத்தை நேரே திருப்பிக்கொண்டார்.

பாட்டும் முடிந்தது, எனது வெறியும் அடங்கியது. என் உள்ளக்கடலில் பெரும் புயல் எழுந்தது. அது வெகு சீக்கிரமே சமனமடைந்துவிட்டது! க்ஷண வெறியில் மதிமயங்கி டாக்டரது கைகளுடன் கைகளைக் கோத்திருந்த நான், பாட்டு நின்றதும் கையை விடுவித்துக்கொண்டு, நாணத்தினால் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தேன் வெகுநேரம் வரையில்.

நாடகம் ஆரம்பமாகியது. 'உத்தரராம சரிதம்' என்ற நாடகம்தான் நடிக்கப்பட்டது. ராம-லக்ஷ்மணர்கள் வேஷம் புனைந்திருந்த யுவதிகளின் 'அலித்தன்மை' என்னுள்ளத்தில் ஒருவித அசிரத்தையை உண்டுபண்ணியது. ராம வேஷதாரிணி பெண்களுக்கியற்கையான தன் குரலில், அபினயித்துக்கொண்டு 'பிரியே' என்றழைப்பது என்னுள்ளத்தில் வெறுப்பைக் கசியச் செய்தது. பெண் வேஷங்களைத் தரித்து, வெகு லாகவமாக நடிக்கும் அநேக ஆண்களை நான் அறிவேன். துயரம் தோய்ந்த பெண்ணுள்ளத்தினிடம் ஆண்களுக்கு ஏற்படும் விசேஷ சிரத்தை இதற்குக் காரணமாயிருக்கலாம்.

நாடகம் அவ்வளவாக நன்றாயில்லை. இடையிடையே, அரம்பையர்களின் நடனமும் பாட்டும் காட்டப்பட்டன. அக்காட்சியில் வெறி பிடித்தவளாகி விடுவேன். கடைசியாகத் திரை விடுவதற்கு முன்பு காட்டப்பட்ட நடனக்காட்சி, மூளையைக் கிறுகிறுக்கச் செய்தது. நான் அந்த வெறியில் மயங்கி டாக்டரின் தோள்களில் சாய்ந்துவிட்டேன். நாணம் வெட்கம் இவற்றை இழந்து இரு கைகளாலும் அவரைத் தழுவிக்கொண்டேன்.

திரை விழுந்தது. 'ஆட்டம் முடிந்து, எல்லாரும் வீடு கிளம்பிவிட்டார்கள். எழுந்திருந்துவா, லஜ்ஜா, நாமும் போவோம்' என்று என்னை எழுப்பினார் டாக்டர்.

இன்றுதான் முதன்முதலாக என் பெயரைச் சொல்லி அழைத்தார் டாக்டர். அவருடைய கைகளை, நடுங்கிய கைகளால் பிடித்துக்கொண்டு கிளம்பினேன். என்னுள்ளம் ஒருவித கர்வத்தால் பூரித்திருந்தது.

6

மோட்டாரில் ஏறி அமர்ந்தபிறகும், வெறி மயக்கத்தில் அவர் கைகளைப்பிடித்த வண்ணமிருந்தேன்.

ஜனசஞ்சாரமற்ற பாதையில் அமைதி நிலவிய அந்த நள்ளிரவில் கார் வெகுவேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அதன் இரு விளக்குக்களின் ஒளியும் வெகுதூரம் வரை ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருந்தது. இரு விளக்குக்களும் எமலோகத்திற்கு வழிகாட்டி போலும் என எண்ணினேன். மகிழ்வு, மதிமயக்கம், கடும் துயரம் இவைகளால் சூழப்பட்டு டாக்டரின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, என்னையறியாமலே விசித்து விசித்து அழ ஆரம்பித்தேன். டாக்டரது இதயத்தினின்றும் எழுந்துகொண்டிருந்த உஷ்ணப் பெருமூச்சு, என் தலைமயிரை அலைத்துக்கொண்டிருந்தது. நான் விசித்துக்கொண்டிருப்பதை டிரைவர் அறிந்துகொண்டு விட்டானோ, என்னவோ, எனக்குத் தெரியாது.

சிறிது நேரத்திற்கெல்லாம் மோட்டார் எங்கள் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்தது. எங்கள் காம்பவுண்டிற்குள் நுழைந்ததைக் கண்டதும் என் வெறி சற்று அடங்கியது. அத்தருணத்தில் என் கையில் உடைவாள் இருந்திருக்குமாகில், மார்பில் குத்திக்கொண்டு மரித்திருப்பேன். இவ்வளவு பயங்கர வெறி மயக்கத்தில் மூழ்கியிருந்த நான், சுய அறிவுள்ள சாதாரண நிலையில் உள்ளவள்போல், வீட்டினுள் அடிஎடுத்து வைத்தேன். ஆனால் தினம்போல என்னறையில் சென்று தூங்கு

வதற்கு ஏற்பாடு செய்யவேண்டி வந்தது. இதைவிட துயரம் நிரம்பிய வேறு நிலை என்ன இருக்கமுடியும்?

லீலா இன்று தாயுடன் தூங்கிக்கொண்டிருந்தாள். என் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. டாக்டர், என்னைக்கொண்டு வந்து விட என்னறைக்கு வந்திருந்தார். 'லஜ்ஜா, அமைதியாகத் தூங்கு. அதிகமாக 'ஸ்டிரைன்' செய்துகொணடால் மறுபடியும் நோய் வாய்ப்பட்டு விடுவாய், அதுபேராபத்தை விளைவித்து விடக் கூடும்' என்று கூறினர்.

நான் மோகன வெறி மூண்ட விழிகளால் அவரை உற்று நோக்கினேன். சிறிது கலவரமடைந்து 'நான் போய்வருகிறேன்' என்று கூறி, அறையைவிட்டகன்ருர்.

நிம்மதியுடன் எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தனர். நான் எனதறையில் தனிமையில் நின்றுகொண்டிருந்தேன். உள்ளூர ஒரு பீதி, நடுக்கம். கைகால்களைச் சிறிதும் அசைக்கத் தோன்றவில்லை. வெகு சிரமத்துடன் கட்டிலின்மீது அமர்ந்தேன். 'ஸ்பிரிங்' அமுங்கிக் கொடுத்துக்கொள்ளும் அரவம், என்னைக் குடல் நடுக்கமுறச் செய்தது. உடுத்திய உடையுடனேயே படுத்துக்கொண்டு போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டேன், இதயத் துடிப்பு எல்லை மீறிவிட்டது.

வெகுநேரம் கழித்து, என்நிலை சிறிது சீர்திருந்தியது. 'ராஜ¬வும் லீலாவும் இரவு பத்து மணிமுதல் உணர்ச்சி இழந்து, அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பார்கள்' என்ற நினைவு, ஏனோ, எழுந்தது.

7

மறுநாள் டாக்டர் ஏதோ காரணத்தினுல் வரவில்லை. நான் பகல் பூராவும் வெகு ஆவலுடன் அவரை எதிர்நோக்கிய வண்ணம் இருந்தேன். வாழ்வின் முதல் வீழ்ச்சிக்குப்பின் வேறு ஒரு மனிதனின் உதவியை நம்ப என்னுல், முடியவில்லை. அவருடன் கூடியிருந்து சுக துக்கங்களை அனுபவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. எனக்கு. 'டாக்டர் வந்தாரா? வந்தாரா?' என்று அடிக்கடி கேள்விகளைக் கேட்டு வேலைக்காரனைத் தொந்தரவு செய்தேன். வேலைக்காரன் சலித்துக்கொண்டு 'வந்தால் உங்களை எழுப்பிவிடமாட்டேனே, அம்மணி? அவரைக்காண, உங்களுக்கிருக்கும் ஆசை எனக்குத் தெரியவில்லையா, அதற்கு?' என்ருன்.

இந்த வேலைக்காரன் ஆதிமுதல் எங்கள் வீட்டிலேயே இருந்தவன். வயதானவனும்கூட., குழந்தையில் அவன் மடியில் நான் விளையாடி இருக்கிறேன். அதனுல்தான் அவன் சொன்ன இவ்வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டேன்.






உங்களுடைய குழந்தைக்கு இவ்வளவுதானு செய்யமுடியும்

இன்னும் நிரம்பச்செய்யவேண்டும். உங்கள் குடும்பம்—உங்கள் அருமைக் குழந்தைகள் சுபிக்ஷமாக வாழ அடிகோலவேண்டும். உங்கள் பிள்ளைகள் படிக்கவும் பெண்கள் இன்புற்று மணம் செய்து கொள்ளவும்—எல்லாவற்றைக் காட்டிலும், உங்கள் மன அமைதிக்காகவும் இதைச் செய்யவேண்டும். அதை இப்பொழுதே செய்யவும். இத்தகைய பணிகளுக்கெல்லாம் "நேஷனல்" உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறது — —

நேஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஃ ஃ ஃ

நெருப்பு, விபத்து மோட்டார், மற்றும் எல்லாவித இன்ஷ்யூரன்சுக்கும் சிறந்தது

நேஷனல் பயர் & ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

சென்னை கிளை ஆபீஸ்:

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்

362, சைனு பஜார் ரோடு, எஸ்பிளனேடு

சப்-ஆபீஸ்கள், பங்களூர் & மதுரை

'டாக்டருடன் நெருங்கியதொடர்பு ஏற்படுத்திக்கொள்வதில் என்ன பிழை? என் வீட்டிலுள்ள அனைவருக்கும் இது பிடிக்கமாட்டேன் என்கிறது?' என்பதைப்பற்றிச் சிந்திக்கலானேன். அப்பாவிற்கு நான் டாக்டருடன் பழகுவது சிறிதும் பிடிக்கவில்லை என்பது தெளிவாக விளங்குகிறது. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் என்னிடம் அன்புபாராட்டி வந்தார். ஆனால் ராஜு என்னை ஒரேயடியாக வெறுக்க ஆரம்பித்துவிட்டான். என்னுடன் வார்த்தையாடுவதைக்கூட நிறுத்திவிட்டான். ஒரு இளம் நங்கை, ஆடவன் ஒருவனைக் காதலிக்கிருள் எனருல் அதில் பிழையென்ன? அது இயற்கைதானே? சமூகச் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டதுதானே? அதிலென்ன அநியாயம் இருக்கிறது? ராஜுவைப் போன்ற கூர்ந்த அறிவு வாய்ந்த ஒருவன், டாக்டருடன் விசேஷப் பற்றுடன் பழகுகிறேன் என்பதற்காக விரோத பாவத்தை வெளிக்காட்டுகிருன் என்ருல்?.........என்னுள்ளத்தை இச்செய்கை அரம்போல அறுத்தது.

'ராஜு, தம்பிராஜு, என்னை மன்னித்துவிடு. எனக்கு விஷத்தைக்கொடுத்தாவது கொன்றுவிடு. எனக்கு வேறு கதி இல்லை' என்று முணு முணுத்தவண்ணம் தலையணையில் முகத்தை மறைத்துக்கொண்டு அழலானேன்.

அன்பு ததும்பும் இனிய குரலில் 'அக்கா' என்று கூப்பிட்டுக்கொண்டே எனதறைக்குள் நுழைந்தான் ராஜு. 'யாரு, ராஜுவா, என்ன செய்தி?' என்று கெட்டேன்.

எவ்வளவு துடைத்தும் கண்ணீர்த் திவலைகள் மறையவில்லை. என்னைப்பார்த்த ராஜுவின் கண்களிலும் நீர் ததும்பியது. 'என்ன, உடம்பு சரியாயில்லையா?' என்று கேட்டான் அவன்.

'இல்லை உடம்பிற்கொன்றுமில்லை. இராக்கண் விழித்ததனுல் ஏதோமாதிரியிருக்கிறது, வேருென்றுமில்லை.'

'வாயேன். உலாவிவிட்டு வருவோம். சிறிது காற்று வாங்கினுல் தானே எல்லாம் சரியாகிவிடும்.'

'எங்கே போவது?'

'எங்கு வேண்டுமானுலும்'

'எனக்கு எல்லா இடமும் ஒன்றுதான்'

'அப்படியானுல் 'சௌக்' கிற்குப் போய் வருவோமே.'

'சரி' என்று கூறி, 'கட்டிலினின்றும் இறங்கி ஆடை உடுத்திக்கொள்ள ஆரம்பித்தேன். டாக்டர் இல்லாமல் நான் தனியாயிருந்ததால் தான், ஏதோ கருணையுடன் என்னையழைக்க வந்திருக்கிருன்' என்று எண்ணினேன்.

தலைவாரி, 'டிரஸ்' செய்துகொண்டு வெளிவந்தேன். லீலாவும் புறப்படத் தயாராக நின்றுகொண்டிருந்தாள்.

'பீடன்' தயாராயிருக்கிறது. இன்று என் மோட்டாரில்லை. வேறு மோட்டார் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை' என்று ராஜு வந்து சொன்னுன்.

*　　*　　*

வீட்டில் உள்ள எனது இன்பக் களஞ்சியமான அறையை அடைந்ததும், கண் தெரியாத காட்டிலிருந்து விடுபட்டு பூர்வீக உலகத்தை அடைந்தது போன்ற எண்ணம் என் மனத்துள் உதித்தது. நாடகத்தின்பொழுது ஏற்பட்டிருந்த வெறிமயக்கம் மறுபடியும் சிறிது சிறிதாக உதித்தது. டாக்டரின் இனிய உள்ளங் கவர் கண்கள் எனது உள்ளத்தை உருக்க ஆரம்பித்தன. நான் கற்பனை இன்பத்தில் மூழ்கி, இனிய இன்பவேதனையில் மயக்கமுண்டு, கட்டிலில் படுத்தபடியே கிடந்தேன். கண்களை மூடிக்கொண்டு அர்த்தமற்ற கனவுகளைக் கண்டுகொண்டிருந்தேன்.

திடீரென்று வெளிக்கதவு திறந்தது. அதே அறிமுகமுள்ள குரல் 'உள்ளே நான் வருகலாமோ?' என்றது.

'வருகலாமோவா? ஆருயிரே!' அன்றே எனது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டீரே! என்பால் உரிமை பாராட்டவும் ஆரம்




டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்

டானிக்

பித்துவிட்டீரே! அப்புறம் 'வருக்லாமோ?' என்ற பரிகாசக் கேள்வி எதற்கு? என்னுள்ளத்தைவிட்டு இனி நீர் அகன்றுவிடக்கூடாது.

'வாருங்கள். உட்காருங்கள்' என்று எழுந்து உட்கார்ந்துகொண்டே கூறினேன் நான்.

'ஏன் இன்று இவ்வளவு தாமதம்? என்று டாக்டரை நான் வினவினேன்.

'இன்று அநேக நோயாளிகளைப் பரீக்ஷிக்க வேண்டி வந்துவிட்டது. கடைசியாகப் பார்த்துவிட்டு வரும் நோயாளியின் நிலை ரொம்ப பயங்கரமானதாயிருக்கிறது. நினைத்தாலே மயிர்க்கூச்சலெடுக்கிறது. அதை விவரிக்கும் சக்தி என்னிடமில்லை. தேகம் பூராவும் கொப்புளங்கள். சரீரத்தில் மாம்ஸம் என்பது பெயரளவிற்குக்கூட கிடையாது. மூக்கைத்துளைக்கும் துர்நாற்றம் வாய்ந்த சீழ், கொப்புளங்களினின்றும் வெளிவருகிறது. புரண்டு படுத்துக்கொள்ள அவனால் முடியவில்லை. மல மூத்திராதிகளுக்கு எழுந்து செல்ல முடியவில்லை. ஒன்றும் ஜீர்ணிக்கமாட்டேனென்கிறது. ஆனால் ஆகாரத்திற்கு ருசிபார்த்து அவன் சாப்பிடுவது மிகவும் விந்தையாயிருக்கிறது. குடும்பத்தார்களும் அவனுக்கு ஊழியம் புரிந்து புரிந்து அலுத்துவிட்டனர். எப்படியாவது அவனுயிர் போய்விட்டால் போதும் என்று எல்லாரும் மனத்துள் வேண்டிக்கொள்கின்றனர். ஆனால் அதை வெளிச் சொல்லமுடியவில்லை, அவர்களால். அவனுக்கு என்ன சிகித்ஸை செய்வது என்று எனக்கும் புரியவில்லை. அவன் முனகுவதைக்கேட்டாலே, எல்லோரும் விலவிலத்துப் போய்விடுகின்றனர். மருந்து எப்படிப் பிடிக்கப்போகிறது இந்த நிலையில். விஷத்தைக் கொடுத்துக் கொன்றுவிடுவோமென்றாலோ, மனம் தயங்குகிறது. என்ன செய்வது, நீ தான் சொல்லேன்' என்றார் டாக்டர்.

'எனதபிப்பிராயமா? இவ்வர்ணனையைக் கேட்டதுமே எனக்கு உடம்பு சிலிர்க்கிறது. நான் என்ன அபிப்பிராயம் கொடுப்பது! இந்த மயிர்க்கூச்செடுக்கும் சம்பவத்தை வர்ணித்துவிட்டீர்களே! எனக்கும் இந்நோய் கண்டுவிட்டால் என்ன செய்வது? என்று பயமாயிருக்கிறதே' என்று அச்சத்துடன் கூறினேன்.

டாக்டர் என் சொற்களைக்கேட்டு நகைத்தார். அவரது நகைப்பின் காரணமாக எனக்குச் சிறிது ஆச்சரியம் பிறந்தது. நானும் எனது சரீர லாவண்யத்தைக் காண்பித்த வண்ணம், முறுவலித்தேன்! அந்தோ! மானிட உள்ளத்தின் சஞ்சல ஸ்வபாவத்தை என்னவென்றுரைப்பது!

'இல்லை டாக்டர். என்னவோ இன்று எனக்கு உடம்பு சரியாயில்லை. நாடியைப்பார்த்துச் சொல்லுங்களேன்' என்று கூறி என் கையை நீட்டினேன்.

டாக்டரின் உள்ளத்தில் சங்கோசம் உதித்ததா இல்லையா, என்பதை என்னால் கூற இயலாது. ஒரு தடவை என் முகத்தை உற்று நோக்கியபின், என் கையைப்பிடித்து, மணிக்கட்டின் சில பாகங்களைத்தடவிக் கொடுந்தார். எனதுள்ளததில் துடிப்பும், மயிர்க்கூச்சலும் எழுந்தன. பிறகு குறிப்பிட்ட நாடியைப் பிடித்துக்கொண்டு, இடது கையிலுள்ள 'ரிஸ்ட் வாட்சி'ல் 'டயம்' பார்க்க ஆரம்பித்தார்.

ஒரு நிமிஷம் சென்றபின் 'பல்ஸ்-பீட்' 'நார்மலாகத்தானிருக்கிறது. உடம்பிற் கென்னவென்று நிச்சயிக்க முடியவில்லையே' என்றார் அவர்.

'என்ன சொல்வது டாக்டர். என்னுடம்பிலுள்ள கெடுதலை என்னவென்று என்னாலும் சொல்ல முடியவில்லையே' என்றேன் நான்.

ராஜா 'திடுதிப்'பென்று நுழைந்து, 'நமஸ்காரம், டாக்டர் ஸௌக்கியம் தானே!' என்றான்.

'என்ன சொல்கிறது போங்கள். பெண்களின் நாடகம் பார்த்ததுமுதல், என்னவோ மாதிரி இருக்கிறது மனம்,' என்று பதிலிறுத்தார் டாக்டர்.

'ஏன் சார், எப்படியிருக்கிறது?'

'என்ன சொல்வது போங்கள். மெல்லியலாள் என்று பெயர்பெற்ற அரம்பையர்களின் உன்னத நடனத்தையும், இனிய கீதங்களையும் கேட்டபின், சுய அறிவையே இழந்துவிட்டேன். நீங்கள் இந்த நல்ல தருணத்தை இழந்துவிட்டீர்கள்?

சகிக்கமுடியாத நாணத்தினால் ராஜூ தலை குனிந்து நின்றான். 'சகோதரியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, சகோதரனுடன் இம்மாதிரி பேசுகிறோமே. அது நியாயமல்லவே' என்று டாக்டர் சிந்திக்கவே இல்லை. அதுவும் ராஜூவைப் போன்ற ஸ்வபாவம் படைத்தவனிடம் பேசுவது என்றால்......! கோபம், பயம் இவைகளின் காரணமாக என்னுள்ளம் 'படபட'வென்று அடித்துக்கொண்டது. 'சாப்பாடு தயார்' என்று வேலைக்காரன் வந்து கூறினான்.

நாங்கள் இத்தருமசங்கடமான நிலையிலிருந்து தப்பினோம், 'டாக்டர், இன்று எங்களுடனேயே சாப்பிடலாம். வாருங்கள்' என்றழைத்தேன் நான்.

அவரும் எவ்வித ஆக்ஷேபணையுமின்றிச் 'சரி' என்று ஒத்துக்கொண்டார். (தொடரும்)

21905
சென்னை-600

Edited & Published by N. R. Ramanujan & Printed by S .Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

உயர்தரமான

# கோட்டிங்ஸ்
# ஷர்ட்டிங்ஸ்
# பனியன்கள்
# புடவைகள்
# வாயில்கள்
# பிரிண்டட் துணிகள்

★ மற்றும் சகலவிதமான துணிகள் ★
நவீன மோஸ்தரில் தேவைக்கு

## பன்ஸால் டிரேடிங் கம்பெனி

— No. 2, சின்னகடைத்தெரு —
— தெப்பக்குளம் போஸ்ட் —
— திருச்சினுப்பள்ளி. —

Regd. No. M. 4405 C

...E OF THE REGIST...
5 JUN...
MADR...



டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கிறாள்.

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்

**டி. எஸ். ஆர்.**

# கோகுல் கூந்தல் தைலம்,

## சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைல

**இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை**

மதராஸ் ஸிடி ஏஜண்டு: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

# T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.